

# ஊசிஇலை

பெற்றோர், ஆசிரியர், இளம் தலைமுறை உறவுகளின்...

சுவிற்சர்லாந்தில்...

# ROMYS CREDIT

குறைந்த வட்டியில் கூடிய வங்கிக்கடன்

குழந்தைகள் சேமிப்புத் திட்டங்கள்

உங்கள் தேவையை பூர்த்திசெய்ய - N.நந்தன்

041 242 11 33
078 666 61 84
Fax: 041 242 11 35

லுட்சேர்ன் மாநகரில்....

ஆசிய உணவுப் பொருட்கள்
சிங்கப்பூர், இந்திய ஆடைகள்
22 கரட் தங்க நகைகள்

*அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள..*

# ROMYS ASIAN SHOP

**Bruchstrasse 33, 6003 Luzern, Switzerland.**
041 242 11 33 , 078 666 61 84 emil- romynantha@bluewin.ch

உரிமையாளர்: நமசிவாயம் நந்தகுமார்

# ஊசி இலை

அரையாண்டிதழ்
துளிர் 01
மார்கழி 2003
விலை: 5.00 SFr.



*ஆசிரியர் குழு*
ஏ.ஜி.யோகராஜா
லா.சண்முகராஜா
கு.சுரேஸ்குமார்

*நிர்வாக ஆசிரியர்*
ச.கலைச்செல்வன்

*ஓவியம்*
வாவி. பாஸ்கர்
கே.எம்.ரி. பாலகுமார்

*கணனி வடிவமைப்பு*
தயா லோகதாசன்
தே.சுரேந்தினி

*கணனி எழுத்துரு*
நா. தயாபரன்

*அட்டைப்பட ஓவியம்*
கே.எம்.ரி. பாலகுமார்

*அட்டைப்பட கணனி வடிவமைப்பு*
கிரி

*வெளியீடு*
தமிழ் மன்றம்
கலைப்பிரிவு
லுட்சேர்ன்
சுவிற்சர்லாந்து



*தொடர்புகளுக்கு.*
Uhsi Ilai
Postfach 12002
6000 Luzern 12
Switzerland.
email: uhsiilai@tamilmandram.ch

Post konto: Uhsiilai magazin
6030 Ebikon
60-518541-8


R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

# முற்றத்து மல்லிகையே..!

வெள்ளை நிற மல்லிகையே
எங்கள் உள்ளம்
கவர்ந்த மல்லிகையே
அள்ளிமணம் கமழுகையில்
உன்மேல் கொள்ளை
ஆசை பிறக்குதே
கோயில் விழாக்கள்
கொண்டாட்டங்கள் எங்கும்
உன்னைக் காணுகையில்
பொங்கும் ஆசை
பெருகுதே எங்கள்
முற்றத்து மல்லிகையே

- தே.ஜெஸ்மின் (12)

# ஊசி இலை...

குளிர்ப் பிரதேசங்களில் புலம்பெயர்ந்து வாழும் எங்கள் பரந்துபட்ட வாழ்வியல் அனுபவத்திற்கு வயது இருபது. இந்த அனுபவத்தில் நாம் கண்டுகொண்ட, கடைந்தெடுத்த தொகுப்பாக ஒன்றைக் கூறலாம். இக் குளிர்ப் பிரதேசங்களில், இலையுதிர் காலத்தைத் தொடர்ந்து அனேகமாக அனைத்துத் தாவரங்களுமே தங்கள் இறக்கைகளை ஒடித்துக்கொண்டு உறக்கத்திற்குச் சென்றுவிடுகின்றன. உறக்கம் சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்கும். ஊசியிலை மரங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு. காற்று, குளிர், சூறாவளி என்று உதிர் காலத்தின் இயற்கை அனர்த்தங்கள் அனைத்தையும் எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்கும்! கண்களைச் சீண்டும் ஊசிமுனைப் பார்வையுடன் பச்சைப் பசேலென்று காட்சிதரும். வானத்தை நோக்கிக் குத்தியபடிக்கு புதிய புதிய குருத் துக்களைத் கூட்டாக துளிர்த்துக்கொண்டிருப்பவை இவை.

ஊசியிலைக் காட்டுக்கும் எமது இருபது வருட வாழ்வியல் அனுபவத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கறுப்பு யூலையின் இடிபாடுகளையெல்லாம் துடைத்தெறிந்தவர்கள் நாம்! ஊன் இன்றி, உறக்கத்தைத் துறந்து, கடந்த காலங்களின் துயரங்களை மறந்து மீள் உயிர்ப்புப் பெற்றவர்கள்!

சுவிஸ் லுசேர்ண் தமிழ் மன்றத்தின் பன்னிரண்டு ஆண்டு கால சேவையின் முதிர்ச்சியின் அறுவடையாக, பலமாத காலத்தின் பிரயத்தனங்கள் எதையும் பொருட்படுத்தாது, குளிர் பிரதேசத்தின் இருப்பிற்கு சாட்சியாக இலைகளை உதிர்த் திருக்கும் மரம், செடி, கொடிகளின் தடி-தண்டுகள் எல்லாம் பனிப்பூக்கள் அலங்கரித்துக் கொள்ள, மார்கழித் திங்களில் தனது தலைக் குருத்தை துளிர்த்திருக்கிறது ஊசிஇலை. எம்மையும் அறியாமலே கறுப்பு யூலையின் இருபதாவது ஆண்டு முடிவதற்கு முன்பாக முதல் அடியைப் பதித்திருக்கிறது. எல்லாம் நல்ல சகுனத்தினை நோக்கித்தான்...

பிள்ளைகளே! பெற்றார்- ஆசிரியர்களே! வளர்இளம்பருவ வாலிபங்களே! இளைஞர்களே!

இதோ... ஊசி இலையின் முதற் குருத்து உங்கள் கரங்களில்! முதற் குருத்தென்பதனால் அதனை மெல்லெனப் பிடிப்பதும், மழை, வெயில், குளிர், காற்று என்று இயற்கையின் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பதும் உங்கள், எங்கள் அனைவரதும் கடமை. நீரூற்றி, உரமேற்றி மேலும் பல குருத்துக்களைத் துளிர்விடச் செய்வதற்குமாக கரங்களைப் பிணைத்துக்கொள்வோம்.

° ° ° ° ° ° °

ஏன் இந்த ஊசி இலை? ஒரு சமூகம் தருவித்துக்கொண்டிருக்கும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்களின் தொகைகளும், வகைகளும், தெரிவுகளுமே அச்சமூகத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன. அல்லது அச்சமூகத்தின் வளர்ச்சியைத் தீர்மானிக்கும் அளவுகோல்களாகத் திகழ்கின்றன. இவ்விதத்தில் ஐரோப்பியச் சமூகத்துடன் ஒப்பிடும்போது நாட்டிலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி தமிழ்ச் சமூகத்தின் நிலை வறுமைக்கோட்டுக்குக் கீழ்த்தான். சுமார் ஐம்பது ஆண்டுகள் பின்தங்கி நிற்கிறது தமிழ்ச் சமூகம். இன்று எமது சமூகத்தில் சிறார்கள், வளர்இளம்பருவ விடலைகள், அதனையடுத்த வாலிபங்கள், பெற்றார்- ஆசிரியர்களுக்கென அவரவர் துறை சார்ந்து தனித்தனி இதழ்களைத் தருவிக்கவேண்டிய உடனடித் தேவையொன்று இருப்பதை சமூக அக்கறை கொண்டவர்களாலேயே உணர முடியும். ஆனால் இத்தேவையை தனித்தனியே நிறைவு செய்வதற்கு எமது வலிமை போதியதாக இல்லை. அத்தகைய ஒரு தேவையை நுகர்வதற்குச் சமூகமும் தயார்நிலையில் இல்லை என்பதும் கவலையே! ஆனால் இத் தேவையின் ஒரு சிறு பங்கையாவது ஊசியிலை நிறைவு செய்யவேண்டும் என்பது எமது ஆதங்கம்.

ஐரோப்பியச் சூழலில் குடும்பச்சுமை நேரத்துடன் சேர்த்துக் காலத்தையும் தின்றுகொண்டிருக்க, வானொலிகள், தொலைக் காட்சிச் சட்டகங்கள் எம்மவரின் வாசிப்புத்திறதினை விழுங்கிக் கொண்டிருக்கின்றன. விடயங்களைக் கண்களால் பார்ப்பது, காதால் கேட்பது என்பது வேறு! வாசிப்புத் திறன் என்பது வேறொன்று! வாசிப்பு! அது மனிதனின் மொழிநடையைச் செழுமைப் படுத்துகிறது. அறிவுத்திறனை வலுப்படுத்துகிறது. விடயங்களை அலசி, ஆராய்ந்து மூளையில் பதிவுசெய் வதற்கான பயிற்சியைக் கொடுக்கிறது. றேடியோக்களும், வீடியோக்களும், தொலைக்காட்சிச் சட்டகங்களும் மூளையைச் சலவைசெய்யும் வேலையையே செய்கின்றன. இத்தகைய மூளைச் சலவைகளில் இருந்து எம்மை முறித்துக்கொள்ளவும், சுய புனைவுத்திறனை வலுப்படுத்தவும் கட்டாயம் வாசிப்புப் பயிற்சி அவசியமாகிறது. சுருங்கக் கூறின் வாசிப்புத்திறன் மனிதனை முழுமையாக்குகிறது.

எமது சிறார்கள் தாம் கல்வி பயிலும் இந்நாட்டு மொழிகளிலேயே பல விடயங்களையும் வாசித்துவிடுகிறார்கள். அதைவிடத் தமிழில் எதைப் புதிதாய்க் கற்றுவிடப்போகிறார்கள். இந் நிலையில் எமது பிள்ளைகளுக்கு என்று தமிழ்ப்பத்திரிகை தேவைதானா? போன்ற வினாக்களும் முணுமுணுக்கப் படுகின்றன.

இக் கேள்விக்கிடையே "எமது பிள்ளைகள் எம்மிடமிருந்து, எமது தேசத்திடமிருந்து, கீழைத்தேசங்களிடமிருந்து அறிந்து கொள்வதற்கு எதுவுமில்லை" என்று எம்மை நாமே இழிவு

செய்கின்ற கருப்பொருள் தொனிக்கின்றதல்லவா? வெள்ளைக் காரனை உயர்வாகப் பார்க்கும் அடிமைப் புத்தி எம்மிடமிருந்து இன்னும் விடுபட்டுவிடவில்லை.

வெள்ளையர்கள் கீழைத்தேய விடயங்களை கீழைத்தேச மொழிகளுக்கப்பாற்பட்ட வேற்றுமொழிகளுக் கூடாகவே கற்றுக் கொள்கின்றனர். அதனால் உண்மைச் சுவையை ருசிக்க முடியாத அவலத்தைப் பெறுகின்றனர். ஆனால் எமது பிள்ளைகளுக்கு இது வரப்பிரசாதம். மேற்குலக எழுத்துக்களை, இலக்கியங்களை அதே மொழியில் அல்லது அம்மொழிக்குப் பரிச்சயமான இன்னோர் மொழியில் கற்றுக்கொள்கிறார்கள். அதேவேளை கீழைத்தேசத்தின் படைப்புக்களை எமது மொழிக்கூடாகவே கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுவதற்கும் தமிழ்மொழிப் பரிச்சயம் அவசியமாகிறது. எமது பிள்ளைகளின் இத்தகைய ஆற்றல்களைப் படரவிடுவதற்கான கொழுகொம்பாக ஊசியிலை பரந்துவிரியும். இங்கு வாழும் அனைத்துத் தமிழ்ப் பிள்ளைகளும் இவ் ஆற்றலைப் பெறுவார்கள் என்பதற்கில்லை. நாட்டுக்கு 50, 100 சிறார்கள் இப்படித் தேறினால் போதும். பாரதி கூறிய

"வெளிநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத்
தமிழில் பெயர்க்கவும்
தமிழின் நல்லிலக்கியங்களை வெளிநாட்டார்
செவ்வனே அறியவும்"

புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர் வழிவகுப்பர்.

எமது எதிர்காலச் சந்ததி எதிர்காலத்தில் வெள்ளைக்காரருடன் ஒன்றித்த வாழ்வை வாழ்ந்தபோதும் நிறத்தால் வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாததே! இந்நிலையில் அவர்கள் கூனிக் குறுகிவிடாது தமது நெஞ்சை நிமிர்த்திக்கொள்வதற்கும், அடுத்தடுத்து வரும் எமது தலைமுறை உறவுகள் எமது தொன்மைபற்றி அறிந்திருக்க வேண்டுமல்லவா? தாய்மொழியை, மொழியின் வளத்தைப் புரிந்திருக்கவேண்டும். ஜேர்மனியில் அரசின் அனுசரணையைக்கூடப் பெறமுடியாது அலைந்து திரியும் நாடோடி இனத்தைப் போன்றதோர் நிலை எமது சந்ததிக்கும் ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்கும் இப்புரிதல்கள் அவசியமாகும்.

° ° ° ° °

## ஊசிஇலை...

இது ஒரு களம்
இது ஒரு வலைப்பின்னல்
இது ஒரு தொடர்புப் பாலம்
இது ஒரு சந்திப்பு மையம்

எங்கள் எதிர்காலத் தலைமுறை உறவுகளின் வாசிப்புத் திறனுக்கும், படைப்பாற்றலுக்கும் ஊசி இலை உரமிடும்.

பிள்ளைகளே!

உங்கள் பிஞ்சுக் கரங்களின் கைவண்ணங்களை – ஓவிய மாகவோ, எழுத்து வடிவிலோ- வெளிக்கொணர்வதற்கு ஊசியிலை முதலிடம் வழங்கும். ஆனால் அவை உங்கள் சிந்தனையை, வாழும் சூழலைப் பிரதிபலிக்க வேண்டும். உங்கள் ஆற்றல்களை இயல்புடன் புலப்படுத்தவேண்டும்.

வளர் இளம்பருவ வாலிபங்களே!
இளந் தலைமுறை உறவுகளே!

உங்கள் விடலைப் பருவ வாலிப வயதைப் புரிந்துகொண்டு பெற்றார், பெரியவர், உறவினர் என்று உங்களை மதித்தவரும் உண்டு. வேற்றுக் கலாச்சாரத்தில் தம்மைச் சீரழித்துக்கொள்ளப் போகிறார்களே என்ற மன ஏக்கத்துடன், பலவித நெருடல் களுக்கு மத்தியில் மன அழுத்தங்களைச் சுமத்திய 'பெரிய வர்கள்' பலர் இருப்பர்.



இத்தகைய சூழலில் ஏற்பட்ட உங்கள் வாலிப அனுபவங்களை வெளிக் கொண்டுவாருங்கள். பெற்றாருக்கு நேரடியாகக் கூறமுடியாத உங்கள் மனஉணர்வுகளை எழுத்துவடிவில் முன்வையுங்கள். உங்களதும், ஏனையோரதும் பெற்றோர்கள் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கான பல சந்தர்ப்பங்களை வழங்கக் காத்திருக்கிறது ஊசியிலை.

பெற்றோர்களே! ஆசிரியர்களே!

புலம்பெயர் வாழ்வில் எங்கள் பிள்ளைகளுடன் எமக்கு ஏற்படும் சிக்கல்களை, நெருக்கடிகளை, வேறுபட்ட கலாச்சார மையத்தில் அவர்கள் கால்பதிக்கும்போது எமக்கு ஏற்படும் மன உளைச்சல்களை, சமூகத் தாக்கங்களை, அனுபவங்களாகத் தொகுத்துத் தாருங்கள்..

இவ்விதம் பெற்றார், ஆசிரியர், பிள்ளைகளின் உணர்வுகளைப் பரஸ்பரம் புரிந்துகொள்வதற்கும், கல்வி, கலை, இலக்கியம், கலாச்சார விழுமியங்கள் குறித்த உங்கள் படைப்புக்களை வெளிக்கொணர்வதற்குமான வலைப்பின்னலாக... தொடர்புப் பாலமாக... சந்திப்பு மையமாக... ஊசியிலையின் பணிகள் விரிந்துசெல்லும்.

செல்வதற்கு உங்கள் உள்ளங்களைத் திறந்துவையுங்கள்!

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை, மாலை நேரம். காரைவிட்டு இறங்கினேன். லேசான குளிர் முகத்திலடித்தது. உடல் ஒருகணம் சிலிர்த்தது. மார்கழி என்பதை உணர்ந்தேன். வெயில் அடித்துக் கொண்டிருந்தது. குளிருக்கு காரணம் Pilatus மலை வெள்ளை ஆடை மாற்றாமலிருந்ததுதான்.

நேரத்தைப் பார்த்தேன். இன்னும் 10 நிமிடத்தில் அந்தப் பெண்ணை சந்திக்க வேண்டும். அந்தப்பெண் சுரேந்தினி.


இரண்டு தம்பி, தங்கை, நான் என அழகான குடும்பம் 13 வயது வரை இலங்கையில் படித்துக் கொண்டிருந்தேன். அதாவது 7 ம் வகுப்புவரை. அது ஒரு அழகிய காலம். வகுப்பில் எப்போதும் 1-4 நிலைக்குள் வருவேன். அங்கு என்றும் படிப்பைப்பற்றியே சிந்தனை. அற்புதமான நண்பிகள். வீடு பாடசாலை என படிப்பு பற்றியே சிந்தனை வாழ்வு. 13 வயதுவரை இனிமையான காலங்கள்.

# உறங்கிப்போகும் நினைஞ் உணர்வுகள்

- சாமி சுரேஷ்

20 வயதாகிக்கொண்டிருந்தது. இலங்கையிலே பிறந்து 10-13 வயதுகளில் இங்கு வந்து கல்வி- மொழி-கலாச்சாரம் இவற்றுக்கிடையில் தட்டுத்தடுமாறி நடந்து கொண்டிருப்பவள். இந்த மூன்றிற்குமான முகம் கொடுப்புக்கள் பற்றி இவருடன் சிறிது கலந்துரையாட உத்தேசித்திருந்தேன்.

எனக்காக காத்திருந்தார். 20 வயதிற்கே உரித்தான தோற்றம். மெலிதாய் இருக்க வேண்டும், என்ற இளம் பெண்களின் கனவுகளில் இவரும் சங்கமித்திருந்தார். சம்பிரதாயபூர்மான உரையாடலின் பின் சொன்னேன், "என்னுடன் மனம்திறந்து கதையுங்கள். உங்களைளைப் பற்றி சொல்லுங்கள்." சொன்னார். சொல்லிக் கொண்டே இருந்தார். ஒவ்வொரு விஷயங்கள் சொல்லும்போதும் அவரது முகம் பல கோணங்களுக்கு மாறியது. இலங்கை வாழ்வு பற்றி கூறும்போது பிரகாசித்தது. மீண்டும் இங்கு வரும்போது முகமிழந்து போனது.



சுவிற்சர்லாந்திற்கு வந்தபின்னர் நான் போன கிராமத்துப் பாடசாலையில், நான்தான் முதல் தமிழ் மாணவி. இங்கு பாடசாலையில் எனது தரத்தை அறியும் பொருட்டு முதலில் கணித பாடத்தில் ஒரு தேர்வு வைத்தார்கள். பின்னர் 3 மாதம் டொச் மொழி வகுப்பு. ஒவ்வொரு நாளும் 3 மணித்தியாலங்கள். இதன் பின்னர் 6 ம் வகுப்பில் சேர்த்தார்கள்.

6ம் வகுப்பு முதல் நாளை என்னால் மறக்க முடியாது. நண்பர்கள் இல்லை. இருக்கும் சக மாணவர்களோடு பழக முடியாது. புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு மொழி அறிவு இல்லை. அப்பப்பா அந்தக் கஷ்டம் இன்று நினைத்தாலும் கவலையாக இருக்கிறது. பாடசாலை முடிந்து வீடு வந்து ஒவ்வொரு நாளும் அழுவேன் என்னை திரும்பி இலங்கைக்கு அனுப்புங்கள் என்று. இப்படியே ஒன்றரை வருடங்கள் ஓடியது.

ஓரளவு மொழி தெரிந்தபின் அவர்களின் கேலிகள் மனதைத் தைத்தது. சொக்கி என்றும் நேகர்(Negar) என்றும் சொல்வார்கள். குறிப்பாக ஆண்மாணவர்கள். ஆனால் இந்த நேரத்தில் தான் இரண்டு நண்பிகள் எனக்கு உதவினார்கள். அவர்கள் வீடுவரை போய் படித்தல், மொழியில், கதைப்பதை புரிந்து கொள்ளல், போன்றவற்றிற்கு உதவினார்கள். எனக்கு மட்டும் இரண்டு வருடத்திற்கு எந்தத் தேர்வும் இல்லை. புள்ளிகளும் இல்லை.

என்னை Real இற்கு அனுப்பினார்கள். இங்கு மீண்டும் புதிய நண்பர்கள், புதிய ஆசிரியர்கள், புதிய முகங்கள். ஆனால் இங்கு ஆசிரியரினதும், மாணவர்களினதும் உதவிகள் மறக்கமுடியாதவை. புதிய புத்தகங்கள், பாடங்களை புரியவைத்தல் போன்ற உதவிகள் செய்தார்கள். Real இல் 2வது முடிவில் தான் எனக்கு முதல் அறிக்கை தந்தார்கள். எனது முதல் மொத்தப்புள்ளிகள் 4.3 . நான் கடைசியாக Real ஐ விட்டு வெளியேறும் போது புள்ளிகள் 5.5 . இந்த இரண்டுக்கும் இடையிலுள்ள பெரிய இடைவெளி மறக்கமுடியாதவை.

சிறிது மௌனமானார். அறைக்குள் வெப்பமாக இருந்தது. போய் யன்னலைத் திறந்தேன். இதமான குளிர் வந்து முகத்திலடித்தது.

என்னைப் பொறுத்தவரை இலங்கை பாடத் திட்டம்தான் நல்லது என்பேன். 5ம், 6ம் வகுப்பிற்குப் பின்புதான் நன்றாகப் படிக்கத்தொடங்குவார்கள். சிறுவயதில் விளையாட்டு என்று திரிந்து விட்டு பின்தான் படிப்பில் ஊக்கம் வரும். ஆனால் இங்கு அப்படியில்லை. சின்னவயதிலேயே படிப்பைப்பற்றி சிந்திக்க வேண்டும்.சிறிய வயதிலேயே ஊக்கமாக படிக்கவேண்டும். இந்த நாட்டவர்க்கு இந்தப் பிரச்சனை இல்லை. ஆனால் எமது தமிழ் பெற்றோருக்குத்தான் பிரச்சனை. அவர்களிடமும் பிழை இல்லைத்தான். அவர்கள் இந்தப் பாடத்திட்டத்தில் படித்தவர்கள் இல்லையே.

உங்கள் பெற்றோருக்கும், உங்களுக்குமிடையிலான கலாச்சாரப் புரிந்துணர்வு சிக்கல்கள் எப்படிப்பட்டவை. அதற்கு எப்படி முகம் கொடுக்கிறீர்கள் என்று கேட்டேன். அவர் முகம் இறங்கிப் போனது. தொடர்ந்தார். நானும் சரி, எனது பெற்றோர்கள் சரி ஒன்றில் உறுதியாக இருந்தோம். எங்கு வாழ்ந்தாலும் எமது கலாச்சாரப் பண்புகளை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதே அது. ஆனாலும் எமது தமிழ்பெற்றோரிடம் உள்ள பிழைகளையும் கூறத்தான் வேண்டும். சிறிய வயதிலேயே டொக்டர் அல்லது இஞ்சினியார் ஆகத்தான் வரவேண்டும், என்ற எண்ணத்தை குழந்தைகள் மனதில் தைத்து விடுவார்கள். எப்போதும் படி படி என்று விரட்டிக் கொண்டிருப்பார்கள். எதற்கெடுத்தாலும் குழந்தைகளுக்கு

அடிப்பார்கள். விளையாட்டிற்கு விடுவது குறைவு. என்னைக் கேட்டால் அந்தந்த வயதில் செய்யவேண்டியவை செய்யத்தான் வேண்டும்.

பெற்றோருக்கும் எமக்கும் இடையில் ஓர் நம்பிக்கை வேண்டும். சில பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளில் நம்பிக்கை குறைவு. ஒரு சிறிய பிழை செய்தாலே அதை பெரிதாக எந்த நேரமும் சொல்லிக்காட்டிக்கொண்டிருப்பர். சரி பிழைவிட்டாய் அதைவிட்டு மீண்டு வந்து முன்னேறமுடியும் என்று நம்பிக்கை ஊட்டுவது குறைவு.

நட்பைப் பொறுத்தவரை இங்குள்ள வாழ்வியல் முறையோ என்னவோ எல்லாம் போலியாகவே உள்ளது. எனக்கு இரண்டு நண்பிகள்தான் உள்ளார்கள். அதுவும் தூரதூரமாய்.

காதல் வாழ்வு பற்றி கூறுங்கள் என்றேன். சிறிதாக வெட்கப்பட்டுக் கொண்டே தொடர்ந்தார்.
என்னைப்பொறுத்தவரையில் அது தப்பில்லை என்றுதான் சொல்வேன். இந்த நாட்டவர்களைப் பொறுத்தவரையில் 13-14 வயதில் ஒன்றாக இருப்பார்கள். திரிவார்கள். அப்போது எங்கள் உணர்வுகள் பாதிக்கப்படுவது உண்மைதான். இங்கு அடிக்கடி மாறி மாறிக் காதலித்துக்கொண்டேயிருப்பார்கள். நம் கலாச்சாரங்களில் அந்தக் காதல் இல்லை. ஆனாலும் சில தடுமாற்றங்களையும் ஏமாற்றங்களையும் காணக்கூடியதாக இருக்கிறது. இங்கு தான் பெற்றோரிடம் மனம் விட்டுப் பேச வேண்டும். பெற்றோரில் ஒருவரோடாவது நண்பரைப்போல் பழக வேண்டும். அது ஆண்பிள்ளையானாலும் சரி. பெண்பிள்ளையானாலும் சரி.

இறுதியாக சொன்னார் எனதருமை நண்பர்களே நாம் இரண்டு கலாச்சாரங்களுக்கிடையில் வாழ்கிறோம். கஷ்டம்தான். இரண்டு மனங்களையும் புண்படுத்தாதீர்கள். நமக்கு கல்வி முக்கியம். நம்மால் எதையும் சாதிக்க முடியும். கையில் ஒரு தொழில் இருந்தால் நல்லது. பெற்றோரே பிள்ளைகளில் நம்பிக்கை வையுங்கள் வெளியேபோன பிள்ளை, எங்கள் மகளாக திரும்பி வருவாள், என்று நம்பிக்கை வையுங்கள். அதுதான் எங்கள் அச்சாணி, முடித்துக்கொண்டார்.

என்னோடு கதைத்ததில் அவர் மனம் லேசானது போல் இருப்பதாக சொன்னார். நன்றி கூறி விடைபெற்று வெளியே வந்தோம். வெளியே இரவாகியிருந்தாலும் நிலவு இரவைப்பகலாக்கிக் கொண்டிருந்தது.


---

*Pilatus- மலையின் பெயர்*
*Real- தொழிற்கல்விக்கான பாடசாலை*
*Negar- கறுப்பர்*

---

## அறிந்து கொள்ளுங்கள்!
## **Kennen Sie!**

ஒரு வருடத்தில் ஒரு கோழி சராசரியாக எத்தனை முட்டைகளை இடுகிறது?
Wie viele Eier legt ein huhn im Durchschnitt jaehrlich?



# இலையல்ல வேர்!

நினைத்தேன்
எனக்குள் நீயும்
உனக்குள் நானுமாய்
இரண்டறக் கலந்துவிட்ட
ஒருயிராய்
உனைநினைத்தேன்

நீயோ
இலைகளை உதிர்த்துவிட்டு
அடுத்துவரும் வசந்தத்துக்காய்
காத்துநிற்கும் இறுமாப்பில்
குதூகலிக்கிறாய்
குளிர்காலத்துக்கு முந்திய
மரத்தைப்போல

ஆனால்
நான் இலையல்ல
வேர்
ஆணிவேர்

ரதிமகள்
யாழ்ப்பாணம்

# பெற்றவரே உற்ற வைத்தியராக...



பாதுகாப்புணர்வை உங்கள் வீடு குழந்தைகளுக்குத் தருகிறதா ?

சுவிற்சர்லாந்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பல தமிழ்க் குழந்தைகள் உளவியல் வைத்தியரிடம் அனுப்பப்பட்டு வருவதோடு உரிய பாடசாலையிலிருந்து வேறு பிரத்தியேக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதையும் காணக் கூடியதாயக உள்ளது.

இதற்கான காரணங்களை ஆராய அதற்குரிய குழந்தைகளிற்கான வைத்தியப்பிரிவு, குடும்பப்பிரிவு, குடும்ப அங்கத்தவர் அனைவரையும் அணுகி அவர்களது மொழிபெயர்ப்பிற்காக போன எனக்கு பல அதிர்ச்சிகள் காத்திருந்தன. அங்கு எனக்கு கிடைத்த தகவல்களை வைத்து தொகுக்கப்பட்டதே இக் கட்டுரை.

- நளாயினி தாமரைச்செல்வன்

*சிறுவனுக்கு போதிய பாதுகாப்பு உணர்வை அந்த வீடு தரவில்லை என்பது இறுதியாக தெரியவந்தது. குழந்தைகளிற்கான பாதுகாப்பு வீடு தானே. வீடே சிறைவாசமாகிறபோது எப்படி பாதுகாப்புணர்வு அவர்களுக்குள் தோன்றும்.*

அந்தச் சிறுவன் மிகவும் அழகானவன். ஆனாலும் அடிக்கடி சோர்ந்து போவதாக பாடசலை ஆசிரியர் கூறினார். எந்தப்பாடத்திலும் கவனமில்லையாம். படம் கீற கொடுத்தாலும் தாளை வாங்கிவைத்து விட்டு எங்கோ ஆழ்ந்த யோசனையில் இருப்பது நித்திய பழக்கமாகிவிட்டது. ஆசிரியர் அந்த குழந்தையின் பெயரைக் கூப்பிட்டாலும் கேளாதது போல் இருப்பது அவனது வழமை. கிட்ட வந்து என்ன படம் கீறவில்லையா? என்கிறபோதுதானாம் மலங்க மலங்க விழித்தபடி படம் கீற தொடங்குவாராம்.

> பெற்றோர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். பல புத்திமதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. குழந்தைகளிற்கு முன்னால் சண்டை பிடிப்பதை தவிர்க்கவும், அடிப்பதை நிறுத்தவும், ஆண் குழந்தையாதலால் அங்கே தந்தையில் வெறுப்பு அதிகமாகலாம் என...

அவர் கீறும் படங்களைக் கூட ஆசிரியர் சேகரித்து வைத்திருந்தார். அத்தனையும் பல குழப்பங்களாலான சித்திரங்கள். சித்திரங்களை வைத்தே ஒருவரது மனநிலையை அறிந்து கொள்ளலாம் என்கிறார் குழந்தைகளிற்கான வைத்தியர்.

அனேகமானவை மாறி மாறி கிறுக்கல்களாய் அழுவதாய் சோகத்துடன் இருப்பது போன்றதான கிறுக்கல்படங்கள். சிலதில் கண்டபடி தாறுமாறாக கிறுக்கி உள்ளான். அந்த நாட்களில் மிகுந்த சிந்தனை வயப்பட்டவாராகவும் கவலை தோய்ந்த முகத்துடனும் சிறுவன் இருந்ததாக வகுப்பாசிரியர் கூறினார். (வகுப்பாசிரியர் அந்த சிறுவன் பற்றிய அத்தனை தரவுகளையும் திகதி நேரப்படி எடுத்து வந்தது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.) அன்புடன் சிறுவனோடு வைத்தியர் அளவளாவினார்.



விளையாடி விளையாடியே அந்த சிறுவனிடம் கேள்விகளை கேட்டது எனக்கு இன்னும் ஆச்சரியம்தான். சிறுவன் சோர்ந்து போகும் போதெல்லாம் கலர்ப் பென்சில்களைக் கொடுத்து படம் கீற சொல்கிறார். அதற்கூடாக அந்த குழந்தையின் மனநிலையை அறிய முடிந்தது.

அனேகமான முந்திய படங்களில் தனி உருவத்தை கீறிய சிறுவன் இப்போ இருவர் மூவரது படங்களை கீறத் தொடங்கி இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. இப்படியாக இரண்டு கிழமைகள் தினமும் 2 மணிநேரம் வைத்தியரோடும் ஆசிரியரோடும் என்னோடும் சிறுவன் சுமூக நிலைக்கு கொண்டு வரப்பட்டான்.

அந்தச் சிறுவனுக்கு வயது ஏழு. தமிழை நன்கு பேசத் தெரிந்திருந்தான். சிறுவனுக்கு பாதுகாப்பு உண்டென உணரவைக்க வைத்தியருக்கு இரண்டு கிழமைகள் எடுத்தது.

அதன் பின்னர்தான் அந்த சிறுவன் தனது வீட்டு நிலமையை மெதுமெதுவாக சிறு தயக்கததுடன் கூறினான். வீட்டில் தாய் தகப்பன் அடிக்கடி சண்டை பிடிப்பதாகவும். தந்தை தாயை அடித்தே துன்புறுத்துவதாகவும். தகப்பன் புகை பிடிப்பது. மதுபானம் அருந்துவது. தாய்க்கு பிடிப்பதில்லை எனவும். அதுவே சண்டை சச்சரவுகளுக்கு காரணம் எனவும் எம்மால் ஊகிக்க முடிந்தது. இதனால்

அம்மா வீட்டில் சமைப்பது குறைவெனவும் தான் சாப்பிடாமலே பல தடவை பாடசாலைக்கு வருவதாயும் ஒரே அறையில்தான் தாம் எல்லாம் படுத்துறங்குவதாயும் கூறினான் (இவ்வளவு கருத்தையும் சிறுவன் சித்திரத்திற்கூடாகவே புரியவைத்தான் என்பது எனக்கு பெரிய வியப்பாக இருந்தது.)

விளக்கம் கேட்கும் போது மட்டும் தயங்கித் தயங்கி கூறுவதால் சிறுவர்களுக்கு படம் வரைதல் தான் அவர்களின் மன உணர்வை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த வழி என வைத்தியர் கூறினார்.

வீடு எப்போதும் குழந்தைகளுக்கான நந்தவனமாக காட்சி தரவேண்டும். அந்த நந்தவனத்தை உருவாக்குவது தாய் தந்தையரின் கடமை ஆகிறது.

பெறறோர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். பல புத்திமதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. குழந்தைகளிற்கு முன்னால் சண்டை பிடிப்பதை தவிர்க்கவும், அடிப்பதை நிறுத்தவும், ஆண் குழந்தையாதலால் அங்கே தந்தையில் வெறுப்பு அதிகமாகலாம் என அறிவுரையும் கூறப்பட்டது. உடனடியாக வேறு வீடு மாறும்படி பணிக்கப்பட்டது. மகனுக்கு தனித்த அறை கொடுக்கும்படி கூறப்பட்டது. வெளியில் கூட்டிச்செல்வது குறைவாதலால் குழந்தைக்கு தேவையான ஒட்சிசன் கிடையாததால் சிறுவன் துடினமாக சுறுசுறுப்பாக இல்லாதது தெரியவந்தது. வீட்டு யன்னல்களை ஒரு நாளைக்கு முன்று தடவை திறந்து விடும்படியும் ஆலோசனை வழங்கப்பட்டது.

சிறுவனுக்கு போதிய பாதுகாப்பு உணர்வை அந்த வீடு தரவில்லை என்பது இறுதியாக தெரியவந்தது. குழந்தைகளிற்கான பாதுகாப்பு வீடு தானே. வீடே சிறைவாசமாகிறபோது எப்படி பாதுகாப்புணர்வு அவர்களுக்குள் தோன்றும்.


வீடு எப்போதும் குழந்தைகளுக்கான நந்தவனமாக காட்சி தர வேண்டும். அந்த நந்தவனத்தை உருவாக்குவது தாய் தந்தையரின் கடமையாகிறது.

குழந்தைகள் சற்று குழம்புகிறார்களா? உடனடியாக பேப்பர்களையும் கலர் பென்சில்களையும் கொடுத்து அவர்களை தனிமையில் இருக்க விடுங்கள். இடைக்கிடை தட்டிக்கொடுங்கள். ஆதரித்து அரவணைத்துக் கொள்ளுங்கள். தங்கள் மன உணர்வை சித்திரமாக்கி சந்தோச மனநிலைக்கு வருவார்கள் என கூறிய வைத்தியரை கரம் கூப்பி கைகுலுக்கி விடைபெற்றேன்.

சிறுவனுள் இப்போ ஒரு பாதுகாப்பு உணர்வு வந்ததை என்னால் உணர முடிந்தது. ஆனாலும் தாய் தந்தையருடன் போகும்போது என்னையே அடிக்கடி பார்ப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது. பாதுகாப்புணர்வை கட்டாயம் அந்த வீடு சிறுவனுக்கு கொடுக்கவேண்டும் என இறைவனை பிராத்திக்கிறேன்.



***



கறுத்த தலைமுடிக்கிடையே தெரியும் நரைபோல் இடையிடையே வெள்ளையாகவும் அதன் மேலே ஏறி ஓடிக்கொண்டிருக்கும் கேபிள் ரயில்களும் இவ்வளவு பாரத்தையும் சுமக்க முடியாமல் சுமந்து அப்பப்போ பெருமூச்சை உஷ்ணமாக விடுவது போல் உச்சியிலிருந்து வெளிக்கிளம்பும் பனிப்புகாரும் அடிவாரத்தைத் தழுவிக் கழுவி எங்கோ அவசரமாக ஓடிக்கொண்டிருக்கும் நதியுடன் அந்த Pilatus மலை.

``இன்னும் எத்தனை தரம் ஸ்ரட்டை சுத்தப்போகிறாய் காவ்யா நேரமும் போய்கொண்டிருக்கு. அங்கபார் இருண்ட முகில்கூட்டத்த! மழை வரப்போறமாதிரி இருக்கு நீ இன்னும் ஒண்டும் வாங்காமல் திரிகிறாய். பூ வாங்கன் காவ்யா``

``அது 2 நாளில் வாடிவிடும்``

``அப்ப சொக்கி``

``நான் நினைவா வைத்திருக்கிற பொருள் வாங்கோணும் அபி. நீ சொக்கி அது இது எண்டுறாய். எப்பவும் என்னை நினைக்கிற மாதிரி கெசெங் இருக்கவேணும்``




# GROSS

``நீ கெதியெண்டு என்ன வாங்கிறதெண்டு யோசிச்சுமுடிவெடு``

``என்ன முணுமுணுக்கிறாய் அபி``

``எனக்கு நடந்து நடந்து காலெல்லாம் நோகுது காவ்யா. இந்த ஆத்தங்கரையில கொஞ்ச நேரம் இருப்பமே``

``அம்மா சொல்லி விட்டவா போனமா வந்தமா எண்டு கெதியெண்டு வரச்சொல்லி. இனி பின்னேரம் அம்மா வேலைக்கு இறங்கிறதுக்குள்ள நான் வீட்டில நிக்கோணும் அபி``



# MUTTER

- ஆனந்தி சுரேஸ்

´´ஏன் எனக்கு மட்டும் தனிச்சட்டமே! நானும்தான் வீட்டில சொன்ன நேரத்துக்கு நிக்கோணும். தம்பியும் தனிய இருப்பான்´´

´´ஏன் அவனுக்கு வயது காணாதே தனியா இருப்பான் தானே´´

´´தனிய இருப்பான். ஆனா நான் பிந்தி வீட்ட வந்தனான் எண்டு அப்பாட்ட மாட்டி விடுறதில மன்னன். சும்மா எனக்கு ரெலிபோன் வந்தாலே தெரியாதமாதிரி இருந்திற்று பிறகு அம்மாட்ட போட்டுக்குடுப்பான். பிறகு

அம்மா வறுத்து எடுத்திடும். ஆர்.., எவை.., என்ன..,
ஏன்.. ரெலிபோன் எடுத்ததெண்டு´´.

´´அன்ரி வேலைக்கு இறங்க இன்னும் நேரம் கிடக்கு காவ்யா! ஏன் பயப்படுற? எனக்கு ஸ்ரட்டுக்கு வந்தா இந்த ஆத்தங்கரையில அமைதியாயிருந்து Pilatus மலைய கொஞ்ச நேரமாவது பார்க்கமாட்டமா எண்டிருக்கும். ஆனா எங்க நேரம். ஓட்டமும் நடையுமா நேரம் கிடைப்பதில்லை. எவ்வளவு வடிவாக இருக்கு இந்த ஸ்ரட்டை ஓட்டி ஓடுற ஆறும் அதோட ஐஸ்கிறீமுக்குள்ள குத்தி வைச்ச பிஸ்கட் மாதிரி ஒரு சைட்டில முக்கோணமா இந்த Pilatus மலை. ஆனா முக்கோணமா இருக்கிற இந்த மலைக்கு தெரியாம ஆம்பிளைப் பெயரை வைச்சிட்டாங்கள்´´

´´ஏய் அபி உன்ர கடி காணும்´´

´´ஏன் காவ்யா நீ ஒண்டும் உன்ர அம்மாவுக்கு வாங்கிக்கொடுக்கேல்ல. ஆதுவும் நீ முதல்முதல் Schnupper வேலை செய்து உழைத்த காசு. நானெல்லாம் முதல் வந்த Schnupper Geld இல அப்பா அம்மாவுக்குத்தான் கெசெங் வாங்கிக்குடுத்தனான்´´

´´எப்ப நான் முதல்முதல் வேலை செய்து உழைக்கிறனோ அப்ப வாற முதல் சம்பளத்தில Gross Mutter க்கும் Gross Vatter க்கும் ஏதாவது கெசெங் வாங்கிக்குடுக்கிறதெண்டது எப்பவோ எடுத்த முடிவு அபி´´

´´ஏன் காவ்யா அப்படி முடிவு எடுத்தனி´´

´´அது உனக்கு தெரியாது அபி. எங்களுடைய சின்ன வயது வாழ்க்கை. அம்மா வேலைக்குப் போய்விடுவா. அப்ப Gross Mutter தான் எங்களப் பார்க்கிறவா´´

´´பார்க்கிறதுக்கு உன்ர அம்மா மாதாமாதம் காசு குடுத்திருப்பா தானே காவ்யா´´

´´காசென்னகாசு காசைக் குடுத்தாலும் அதுவும் இந்த சுவீஸ்காரராக இருந்தும் தன்ர பேரப்பிள்ளைகள் மாதிரி எங்கள அன்பாக பார்க்க ஒரு மனம் வேணும்.

ஒவ்வொரு விசேசத்திற்கும் எங்களுக்கு கெசெங் தந்து அம்மா விட்டிற்றுப்போற நேரமெல்லாம் எங்களையும் பார்த்து.. அது ஒரு தனிக்கதை''

''இந்த நாட்டில கெசெங் குடுக்கிறதும் அவர்கள் தருவதும் இயற்கை தானே காவ்யா''

''அது இயற்கைதான் அபி. ஒவ்வொரு முறையும் அம்மா அப்பாவிடம் அடி வாங்கும் போதும் நானும் அண்ணாவும் எங்கட வீட்டு மேசைக்குக்கீழ ஒளிஞ்சு பயந்து நடுங்கிக்கொண்டிருப்பம். கீழ் உடுப்பெல்லாம் நனைஞ்சிரும் ஆரேனும் கதைத்தாலும் கதைக்கப் பயம். பள்ளிக் கூடத்தில் பிள்ளைகளுடன் சேர்ந்து பழக, விளையாட, தட்டிக்கதைக்கப் பயம். ஒண்டைச் சொல்லி கதைச்சு முடிக்கிறதுக்குள்ள வாய் திக்கித்திணறிவிடும்''

நேரமும் போய்க்கொண்டிருந்தது. கேபிள் கார்கள் மலையைவிட்டு இறங்கிக்கொண்டிருந்தன. பனிப்புகாரும் கொஞ்சம்கொஞ்சமாய் விலகிக்கொண்டிருந்தது.

''உனக்குள்ள இவ்வளவு கனமான ஒரு பக்கம் இருக்குதெண்டு எனக்குத்தெரியாது காவ்யா ஆனா நீ இப்ப ஆக்களோட நல்லாத்தானே கதைக்கிற பழகிற. அதைவிட முக்கியம் நல்லாப் படிக்கிற''

''அது எங்களுக்கு Gross Mutter செய்த உதவி எங்களோட அன்பாகப் பழகி எங்கள Spazieren செய்யக் கூட்டிற்றுப்போய் பாடங்களப் படிக்க உதவி செய்து... இன்னும் எவ்வளவோ அளவிடவும் முடியாது அளக்கவும் கூடாது. இப்பிடிச் சொல்லிக்கொண்டே போகலாம். அதை விடு பழைய கதை. இப்ப தெரியுதா அபி நான் ஏன் அவர்களுக்கு முதல் கெசெங் குடுக்கப் போறனெண்டு. நேரமும் ஆகுது. வா கெசெங் வாங்கிக் கொண்டு நேரத்துக்கு வீட்ட போவம் அபி''

''அங்க பார் காவ்யா Pilatus மலைய இப்ப கொஞ்சம் வெளிச்சு வெதரும் மாறி வருகுது''

பெரிய மாறுதல் எதுவும் இன்றி சிறிய வெயிலுடன் அதே இடத்தில் அமைதியாக Pilatus மலை.

***

Pilatus - மலையின் பெயர்
Gross Mutter - அம்மம்மா/ அப்பம்மா
Gross Vatter - தாத்தா
Schnupper - வேலையை பரீட்சார்த்தமாகச் செய்துபார்த்தல்
Geld - காசு
Geschenk(கேசெங்)-பரிசுப்பொருள்
Stadt (ஸ்ரட்)- நகர்
Spazieren - உலாச்செல்லல்

சுவிஸில்

# பரத நாட்டியப் பயிலரங்கு

## ~ ஓர் அலசல்

உள்ளத்திற்கும் உடலுக்கும் இடையில் ஆத்மார்த்தமான உறவு கலந்து ஆற்றப்படுவதே ஆற்றுகைக் கலை. அதிலும், பரதநாட்டியம் விசேடமாக ஆத்மார்த்தமான உறவுகொண்ட கலை. அதன் ஊற்றுமூலமே ஆத்மீகம் என்றால் கூட மறுப்பதற்கில்லை.

பரதநாட்டியம் பயில்வதனால் எமது சிறார்களுக்குக் கிடைக்கக்கூடிய சமூக விழிப்பு நிலைப்பட்ட அனுகூலங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.



புலம்பெயர் சூழலில், குறிப்பாக எமது பெண்பிள்ளைகள் பாடசாலை நேரம் தவிர்ந்த சந்தர்ப்பங்களில், வெளிக்காற்றினைச் சுவாசித்து வருவதற்கும், இதே பெண்பிள்ளைகள் தமக்கிடையிலான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்குமான, அரிய சந்தர்ப்பமாக பரதநாட்டியப் பயிலரங்கு இருப்பது மகிழ்ச்சியே!

எமது பிள்ளைகள் வெளியில் வேற்றுமொழியிலும், வீட்டில் பெற்றார், சகோதரங்களின் தொடர்பிலுமே அதிக நேரங்களைச் செலவிடுகிறார்கள். இவர்களுக்கு, எமது வீடுகளில் காணப்படும் பெரியவர் — சிறியவர்களுக்கு இடையிலான உறவுமுறைகளும், ஒழுக்கநெறிகளும் மனந்திறந்து பேசுவதற்கான தடைச்சுவர்களாக இருப்பதை நாம் உணர்வோம். இந்நிலையில் இப் பிள்ளைகள் தமது வயதை ஒத்த தமிழ்ப் பிள்ளைகளுடன் சிரித்து, மகிழ்ந்து, மனந்திறந்து பேசுவதற்கும், நெருங்கிய உறவை வளர்த்துக்கொள்வதற்குமான ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும். அமைவதற்கு பரதநாட்டியப் பயிலரங்கில் இடமிருக்கறது.

பாடசாலையில் பயிலப்படும் Drill போன்ற உடற்பயிற்சியைத் தவிர்ந்த வேறு எந்தவிமான பயிற்சியையும் பயில்வதற்கு அனுமதி அற்றவர்களாகவே எமது பிள்ளைகள் பொதுவாகக் கணப்படுகிறார்கள். ஆகையினால் பரதநாட்டியப் பயிற்சிநெறி அவர்களுக்கான இன்னோர் உடற்பயிற்சியாகவும் திகழமுடியும்.

சுவிஸில் பாரிய அளவிலான பரதநாட்டியப்போட்டி ஒன்று ஆண்டுதோறும் இடம்பெற்று வருகிறது. சொலத்துாண் நலன்புரிச் சங்கத்தால் சுமார் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து நடாத்தப்படும் இப்போட்டியின் அதி உச்ச நிகழ்வாக நாட்டியமயில் - அந்த ஆண்டுக்கான சிறந்த நாட்டிய நங்கை- தேர்வு இடம்பெறுகிறது. வருடந்தோறும் கிட்டத்தட்ட ஐந்நூறு பிள்ளைகள் வரை இப் போட்டியில் பங்கெடுக்கிறார்கள். அனைவரும் பெண் பிள்ளைகளே! பயில்வதற்க்குரிய ஆசிரியர் கட்டணம் நீங்கலாக, இப்போட்டியில் பங்கெடுப்பதற்கான தொகையாக ஒரு பிள்ளைக்கு சுமார் 1000 சுவிஸ் பிராங் வரை செலவாகிறது. உடுப்பைத் தயார் செய்வதற்கான ரெயிலரும், சங்கீத வித்துவான்களும் இந்தியாவில் இருந்து

வரவழைக்கப்படும் பட்சத்தில் இத்தொகை இன்னும் அதிகரிக்கும். இவ்வகையினால், ஐரோப்பாவில் பரதநாட்டியத்தின் பயிற்சிக் களமாக சுவிஸ் திகழ்கிறது என்றால் மிகையாகாது.

உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையிலான ஆத்மார்த்த உறவைப் பேணுவதென்பது லேசுப்பட்ட விடயமல்ல. இது பலவித பயிற்சிகளின் ஊடாகவே நிகழமுடியும். ஆற்றுகைக்கு மட்டுமன்றி, உண்மை வாழ்வை உறுதிப்படுத்தவும், உடல் ஆரோக்கியத்தைச் செழுமைப்படுத்தவும்கூட இப் பயிற்சிகளுக்கு மிகுந்த ஆற்றல் உண்டு. உடற்பயிற்சி (Drill) வேறு. ஆற்றுகைக்கான பயிற்சி என்பது வேறு. இப் பயிற்சியில் யோகாசனத்திற்கும் குறிப்பிடத்தக்க அளவுக்கு இடமுண்டு என்பது உண்மையே! ஆனால் ஆற்றுகைக்கான பயிற்சியும் யோகாசனப் பயிற்சியும் ஒன்றாகிவிட முடியாது. யோகாசனம் உள்ளத்திற்கும், உடலுக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவை உள்ளார்ந்த ரீதியில் தக்கவைக்க..., ஆற்றுகைக்கான பயிற்சிகள் உள்ளத்திற்கும், உடலுக்கும் இடையிலான ஆத்மார்த்த உறவை, உணர்வுடன் வெளித்தள்ளுகின்றன.

பொதுவாகக் கலைப் பயிற்சிகள் உளரீதியில் பலவித நன்மைகளைப் பிறப்பிக்கின்றன. மன அமைதி, சுமைகளைக் களைந்த உளத்தளர்ச்சி (Relax), மனதில் மகிழ்ச்சி, என்பவற்றுடன், கள்ளங் கபடம் அற்று வெளிப்படையாகப் பேசும் மனநிலை ஊற்றெடுக்கவும் வழிசெய்கிறது. ஆனால் சுவிஸில் இடம்பெறும் பரதநாட்டியப் பயிற்சிநெறிகளில் மேலே குறிப்பிட்டது போன்ற — உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையிலான ஆத்மார்த்த உறவைப் பேணும் பயிற்சிகள் எந்தளவுக்குக்கு அல்லது எவ்வகையில் அளிக்கப்படுகின்றன என்பதை அலசுவதே இக்கட்டுரைப் பொருளின் நோக்கம்.

இன்றைய நவீன உலகில் குறிப்பாக மேற்கு நாடுகளில், எந்தவொரு ஆற்றுக் கலையைப் பயில்வதாக இருந்தாலும், குறிப்பிட்ட கலையைப் பயில்வதற்கு முன்பாக குறைந்த பட்சம் உடம்புக்கு உஷ்ணமேற்றும் (warming up) பயிற்சியை முடித்துக்கொள்கிறார்கள். சண்டைக் கலைகளான கராட்டியில் இருந்து உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக் கலைகள் வரையும், மேற்குலக நடனக் கலைகளில் இருந்து நாடகக் கலைகள் வரை இது பேணப்படுகிறது. இவ் அனைத்துப் பயிற்சிகளின் முடிவிலும் தாம் குறித்து வந்த கலைப் பயிற்சிகளுக்குப் பின்பு மீண்டும் உடம்பைச் சமநிலைக்குக் கொண்டுவந்து, தளர்வுநிலையை (Relax) ஏற்படுத்த வேண்டியதும், அவசியமாகும். (சங்கீதம், பாடல், இசைக்கருவிகளை மீட்டுவதற்கான கலைப்பயிற்சிகளில் கூட மனதை ஒருமுகப்படுத் துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்பது இன்னோர் விடயம்.)

ஆனால் இத்தகைய நிகழ்வுப்போக்குடன் சுவிஸில் எத்தனை ஆசிரியர்கள் இணைந்து கொள்கிறார்கள்? ஆய்ந்து பார்த்தாலும் சரி, ஓடியோடிச் சுற்றித் தேடினாலும் சரி ஒருவர் கூடத் தேறமாட்டார். ஒருசில ஆசிரியர்கள் ஒருசில பயிற்சிகளை ட்றில் போன்று வழங்கக் கூடும். ஆனால் அவை ஆத்மார்த்த உணர்வுகளைக் கிளறுபவைகளாக அமைவதில்லை.

உடம்பு இலகுபடுத்தப்படாத அல்லது தளர்வுக்குட்படுத்தப்படாத நிலையில்...

எமது சிறார்கள் நாட்டியத்தின் ஆரம்ப அசைவுகளில் கூட முழுமைபெற முடியாதவர்களாகவே காணப்படுகிறார்கள்.

அரை மண்டியில் இருக்கும்போது முதுகை வளைத்துக்கொள்கிறார்கள். உடலின் ஓர் அங்கத்தை மட்டும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பத்தில், அல்லது உடம்பைக் காட்சிப்படுத்தும் வேளைகளில் முழு அங்கங்களையும் இறுக்கிக்கொள்கிறார்கள்.

விதிவிலக்காக ஒரு சில பிள்ளைகளைத் தவிர, அனேகமான பிள்ளைகள் தமது இதழ்களில் புன்னகையைத் தவழவிடுவதற்காக எவ்வளவோ வில்லங்கப்படுகிறார்கள். கண்களில் சிரிப்பை அல்லது மகிழ்ச்சியை வரவைப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள்.

உடல் ரீதியில்...



நாட்டியத்தைப் பயில்வதனால் உடலுறுப்புக்களின் அசைவுகள் அதிகரித்து தசைநார்கள் இறுகிப்போகின்றன. (இதனால் சிறுவயதுச் சிறார்களின் உடல்கள் குறுகித் தறுக்கடித்து விடுவதற்கும் வாய்ப்புண்டு.)

குதிக்கால்களை அடிப்பதில் முறைமைகள் பேணப்படாதவித்து, இடுப்புத் தொடங்கி முள்ளந்தண்டின் ஊடாக உடம்பு முழுவதுமே பாதிப்படைகிறது.

திரிந்து பறந்து வரும் இளமைப் பருவத்தில் உடல் ஆரோக்கியம் சார்பான இதன் பக்கவிளைவுகளை இப்போதைக்கு எம்மால் தெரிந்துகொள்ள முடியாதுதான். முப்பது வயது தாண்டி முழுப் பெண்ணாக மிளிரும்போதுதான் இதன் பக்கவிளைவுகள் துல்லியப்படும். ஆனால்...?

மனம் சார்ந்த பாதிப்புக்களை எம்மால் உடனுக்குடன் உய்த்துணர முடிகிறது. எமது பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகளை நுனித்து நோக்குங்கள். நாட்டிய வகுப்புக்குச் செல்லுகின்ற பிள்ளைக்கும், ஏனைய பிள்ளைகளுக்கும் இடையில் ஒரு கோட்டைக் கிழித்துப் பாருங்கள். பல விடயங்கள் புலனாகும்.

உடல் இறுக்கம் பெற்றது போன்று உள்ளமும் இறுகிக் காணப்படுகிறது. தாய் சகோதரங்களுடன் மனம்விட்டுப் பேசுபவர்களாக இல்லை எமது பிள்ளைகள். உண்மையை மறைக்கிறார்கள்.

வீட்டில் மனம் திறக்காதவிடத்து வேளைக்கே நண்பர்களைத் தேடுகிறார்கள். அங்கும் அதே நிலைதான்.

மனம்விட்டுப் பேசாதவிடத்து பிள்ளைகளிடம் கோபம் அதிகரிக்கிறது. நரம்புத் தளர்ச்சிக் (Nervous) காரர்களாகக் காணப்படுகிறார்கள். பக்குவமாகப் பேசும் மனப்பான்மையை இழக்கிறார்கள்.

உண்மையைச் சொன்னால் திறந்த மனதினை இழந்து உளரீதியிலும் கூனிக் குறுகிப் போகிறார்கள்.

பாரதி சொன்னான்... அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு... இவை நாய்களுக்கு வேண்டியவை என்று. ஆனால் நாம் இங்கு சந்தேகிக்கவேண்டி இருக்கிறது... நவீன உலகுக்குப் பொருந்தாத அல்லது ஆணியச் சமூகத்திற்கு இசைவான "அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு..." என்று நாற்குணங்களைக் கொண்ட பெண்மையைச் சிருஷ்டிப்பதுதான் பரதநாட்டியத்தின் உள்ளார்ந்த நோக்கமோ என்று?

இவ் அபாயத்தில் இருந்து எமது பிள்ளைகளை மீட்பதற்கு இரண்டு வழிகளே உண்டு.


ஒன்று: பிள்ளைகளைப் பரதநாட்டிய வகுப்புக்குச் செல்லாமல் தடுப்பது. இது பானையை உடைப்பதற்குப் பதிலாக ஆட்டின் தலையை வெட்டிவிடுவது போன்றது.

இரண்டு: பரத வகுப்புப் பயிற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்பும், முடிந்த பின்பும் உடம்பின் சமநிலையைப் பேணும் நோக்கிலும், உடல், உளரீதியில் தளர்ச்சிகளை ஏற்படுத்தும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.

அதற்கான புறநிலை நிர்ப்பந்தத்தை உண்டு பண்ணுவதில், இத்துடன் தொடர்புகொண்ட சமூக சக்திகளும், பெற்றாரும் பொறுப்பு மிக்கவர்களாகத் திகழவேண்டும்.



- ஏ.ஜி.யோகராஜா



விளையும் பயிர்:
K.கமீலன்(8)





விளையும் பயிர்:
B.பிரசன்னா(8)

# ஆறுதலில்லா அழுத்தங்கள்

நெஞ்சு படபடக்க வீட்டினுள் நுழைந்தேன். வழமையான கேள்வியோடு அம்மா காத்திருந்தாள்.

''இண்டைக்கு சோதனை நடந்ததே?''

''இல்லை''

தயாராய் வைத்திருந்த பொய்யை விட்டேன். என் முகத்தை உற்றுப் பார்த்து விட்டு

''யோசிச்சுப் போட்டு சொல்லுறதைப் பார்த்தா பொய் சொல்ற மாதிரிக் கிடக்குது. Frau Stübi க்கு ரெலிபோன் அடிச்சுக் கேட்டா உண்மை தெரிஞ்சிடும்.''

''கேட்கிறதண்டால் கேளுங்கோவன்''

தப்பித்துக் கொள்ள பொய்களை உண்மையாக்க முயன்றேன்.

இறுதியாக அம்மாவிடம் கையெழுத்து வாங்க பேப்பரை நீட்டியபோது புள்ளிகளை பார்த்துவிட்டு

~ திவ்வியா சண்முகராஜா



''அம்பிகை, அலைகள் - எண்டு நாடகங்கள் பார்கிறதாலை தான் உன்னாலை படிக்க முடியுதில்லை. எந்த நேரமும் T.V.க்கு முன்னாலை இருக்கிறது''
என்று சத்தம்போட்டாள்.
அதுவும் ஒருவகையிலை உண்மை தான். தமிழ் T.V. தொடர்பு எடுத்த பிறகு கொஞ்சம் மாறித்தான் போனேன்.

இது நடந்துவிட்ட பிறகு நடந்த இரண்டு கணக்குப் பரீட்சைகளிலும் நல்ல விதமாக புள்ளிகளைப் பெற முடியவில்லை. ஏதோ ஒருவித குற்றவுணர்வில் மனம் எப்போதும் படபடத்துக் கொண்டேயிருந்தது.

முதல் இரண்டு தடவைகளும் இரவு வேலை முடித்து காலை ஆறரை மணிக்கு அரைத் தூக்கத்தில் வரும் அப்பாவின் தயவில் கிடைத்த கையெழுத்தில் தப்பிக்கொண்டேன். அம்மா 7 மணி வேலைக்கு இறங்கிய பிறகு ஏழரை மணிக்குள் அப்பாவிடம் கையெழுத்து வாங்குகிற நிகழ்வுக்கும் அப்பா முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இறுதி எச்சரிக்கை தந்து இனிமேல் தன்னால் இப்படிச் செய்யமுடியாது. நேரே அம்மாவிடம் காட்டி வாங்கிக் கட்டிக்கொள் என்று சொல்லி விட்டார்.



எவ்வளவு முயன்று படித்தாலும் இறுதிக் கட்டத் தேர்வில் கணக்குப் பாடத்தில் அதி விசேட புள்ளிகளைப் பெறமுடியவில்லை. Sekundar தெரிவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் மேற்படி பாடத்தை நினைத்தாலே அடிவயிற்றைக் கலக்குகிறது. பாடசாலையில் மட்டுமன்றி படுக்கையிலும் நிம்மதியாக படுக்க முடியவில்லை.



*புத்தகப்பையின் சுமை தோளை அழுத்துவதை விட மனதின் சுமை அதிகமாகவே இருந்தது. இப்படியானதொரு நிலமை தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டும்தான் இருக்கிறதா? என் போன்ற தமிழ்ப் பிள்ளைகள் ஒவ்வொரு வரும் பெற்றோர்கள் முன்னிலையில் எங்கள் குழந்தைத்தன ஆசைகளை முட்டைகட்டி வைத்து படிப்பு என்ற ஒன்றை மட்டும் திணிக்கப்பட்ட வர்களாகத்தான் வாழ வேண்டுமா?*

இறுதியாக நடத்தப்பட்ட இரண்டு பரீட்சைத் தாள்களையும் பெற்றோர்களின் கையெழுத்தை வாங்காமலே வகுப்பு ஆசிரியரிடம் ஒப்படைத்து விட்டேன். வகுப்பாசிரியரிடமும் எச்சரிக்கை வாங்கியாகிவிட்டது. இனிமேல் பரீட்சை நடந்தால் அம்மாவின் கையழுத்தை நானே வைத்துவிட்டுத்தான் கொடுக்க வேண்டிவரும். அது எவ்வளவு பிழையான விடயம் என்பதுவும் எனக்குத் தெரியும். ஏதோ ஒருவித கிரிமினல் குணங்கள் எனக்குள் வளர்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏன் இந்த நிலமையென்று யோசிக்கையில் மூளையே கலங்கிவிடும் போல் தோன்றியது. இதன் விளைவாகவே சில விபரீத எண்ணங்கள் ஏற்படுவதுமுண்டு. எனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் பாதையின் வலதுபுறமாக ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றில் குதித்து விட்டால் என்ன என்றுகூட நினைப்பதுண்டு.

அன்று வகுப்பாசிரியர் நினைவுபடுத்திய செய்தியுடன் பாடசாலையைவிட்டு நடக்கிறேன். புத்தகப்பையின் சுமை தோளை அழுத்துவதை விட, மனதின் சுமை அதிகமாகவே இருந்தது. இப்படியானதொரு நிலமை தமிழ்ப் பிள்ளைகளுக்கு மட்டும்தான் இருக்கிறதா? என்போன்ற தமிழ்ப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் பெற்றோர்கள் முன்னிலையில் எங்கள் குழந்தைத் தன ஆசைகளை மூட்டைகட்டி வைத்து, படிப்பு என்ற ஒன்றை மட்டும் திணிக்கப்படவர்களாக வாழ வேண்டுமா?

இது எவ்வளவு காலம் தொடரப் போகின்றது என்ற கேள்விகள் மீண்டும், மீண்டும் எழுந்து சுவாசத்தையே நிறுத்திவிடும் போல இருந்தது. என்னுடன் வகுப்பில் மொத்தம் ஒன்பது நாட்டுக்காரப் பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால் யாருமே பெற்றோருக்குப் பயந்து நடுங்குவது என்னளவுக்கு இல்லை. அது அவர்களுடன் கதைக்கும்போது தெரிந்துகொள்ள முடிந்தது.

எங்கடை நாட்டிலை நூறு புள்ளிகள் என்றால் இங்கை ஆறு புள்ளிகளுக்குச் சமம் என்று சொன்னதை வைத்துப் பார்த்தால் எனக்குக் கிடைத்த $4^1/_2$ எங்கட நாட்டில் 75 க்குச் சமம். அப்படியென்றால் ஏன் என் பெற்றோர்கள் என்னைத் திட்டவேணும். என்னுடைய சின்னச் சின்ன ஆசைகளைக்கூட மறுத்து எப்பவும் படி! படி! என்று துரத்தவேணும். இல்லையெண்டால் எதிர்காலத்திலை கஸ்டப்படுவாய் என்று சாபம் போடவேணும். குழப்பம் குழப்பமான பல புரியாத கேள்விகளுடன் வீட்டின் முன்வாசலை கடந்து படிகளில் ஏறி பெல்லை அழுத்தினேன். யன்னல் திறக்கப்பட்டபோது அப்பாவும் அம்மாவும் குளித்துவிட்டு பெற்றோர் ஆசிரியர் சந்திப்பிற்காக வெளிக்கிட்டு பாடசாலைக்கு செல்ல தயாராய் நிற்பது தெரிந்தது.

இன்று இரவு ஏதோ ஒரு விபரீதத்திற்கு நான் முகம் கொடுக்க வேண்டி வரும்.

***

---

Frau Stübi- ஆசிரியரின் பெயர்
Sekundar- மேல்நிலைப் பாடசாலை

---

ஆயிரத்துத் தொள்ளாயிரத்தி எண்பதுகளின் ஆரம்பத்திலும் அதனைத்தொடர்ந்தும், இலங்கையில் ஏற்பட்ட இனக் கலரவங்களும், படுகொலைகளும் அது எற்படுத்திய அரசியல், பொருளாதார, சமூகத் தாக்கங்களும், ஆயுதப்படைகளின் கெடுபிடிகளும் உழைக்கும் வலுக் கொண்ட இளைஞர்களையும், குடும்பத்தவர்களையுங்கூட ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் புலம்பெயர் வாழ்வுக்கு இட்டுச்சென்றது.

ஆரம்பத்தில் இந்நாட்டு மக்களின் மனங்களை வெல்வது கடினமாக இருந்தாலும் நம்பிக்கை, கடினஉழைப்பு, கலாச்சாரக் கலப்பின்மை போன்றவற்றால் படிப்படியாக வேலைவாய்ப்புக்களில் உள்வாங்கப்பட்டு தானும் தன்னைச் சார்ந்தவர்களுக்குமான கடும்உழைப்பாளர்களாகவே இருந்தார்கள். பொறுப்புணர்ச்சியும், கலாச்சாரஇறுக்கமும், உறவுகள் சார்ந்த ஒரேபார்வையும், மீண்டும் தேசம்சார்ந்த வாழ்வின் கற்பனையும், புலம்பெயர்நாட்டு அகப் புறக்காரணிகளால் குறிப்பிடத்தக்க எந்த மாற்றத்தையும் அவர்களிடம் ஏற்படுத்த முடியவில்லை.

ஆனால் காலப்போக்கில் போராட்டத்தின் கால நீட்சி, பொருளாதார சீர்குலைவு என்பன இளைஞர்களை புலம்பெயர் நாடுகளிலேயே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டபோது

# குற்றம் சொல்லின் ...

எண்பதுகளின் இறுதியிலும் அதனைத் தொடர்ந்து தொண்ணூறுகளிலும் படிப்படியாக புலம்பெயர்ந்த தனிப்பட்ட பெண்களும், குடும்பங்களும் தங்களுக்கே உரித்தான கலாச்சாரப் பண்பாட்டு பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் என்ற விருட்சத்தை அப்படியே ஆணிவேருடன் ஆழப் புதைப்பதற்கு முற்பட்டார்கள். இது இன, மத, மொழி, வேறுபாடும் கலாச்சாரம், பண்பாடு என்பவற்றின் தாக்கமும் கொண்ட, புலத்தில் எவ்வாறு சாத்தியமாகும் அல்லது சாத்திய மாக்கலாம் என்ற சிந்தனையற்றிருந்தது எமக்கு விருப்பமான செம்பாட்டு மண்ணில் வளர்ந்து பயன்தரும் மாங்கன்றை சுவாத்தியம், காலநிலை மண்வளம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது ஆப்பிள் தோட்டத்திலே பயிரிடுவதைப் போலாகியது. இவ்வாறுதான் இங்கே பிறந்த குழந்தைகளும், வந்த குழந்தைகளும், இளவயதினரும் இரட்டைக் கலாச்சார வாழ்வினுள் வலியப்பட்டார்கள்.

இந்நிலையில் அதிகரித்த செலவுகளும், எமக்கே உரித்தான உறவுகளுக்கு உதவும் மனப்பான்மையும், எதிர்காலத்திற்கான சேமிப்பு என்பனவும் ஒன்று சேர்ந்து இங்குள்ள வேலைவாய்ப்பை நாட தாய், தந்தை இருவரும் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இதுவே குழந்தைகளின் வாழ்விலும் தாக்கங்களை உண்டுபண்ணத் தொடங்கியது. குழந்தைகள் சிறுபராயம் முதல் பிறமொழி கலாச்சாரப் பின்னணியிலான குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களிலும், தனியாரிடமும் தள்ளப்பட்டார்கள். அவர்கள் நீண்ட நேரத்தை அங்கேயே கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இது பாடசாலை வயதுவரையும் தொடர்ந்தது.

ஆனால் பாடசாலைக்கான மொழியறிவைப் பெறுதல் என்ற ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான காரணம் கூறப்பட்டாலும் குழந்தைப்

பருவத்திற்குத் தேவையான பெற்றோரின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கியதோடல்லாமல் எதையும் சீக்கிரம் உள்வாங்கும் பராயத்தில் அந்நிய கலாச்சாரத்தையும் பழக்கவழக்கங்களையும் படிப்படியாக உள்வாங்கியது என்பதும் உண்மையே. இவ்வாறு பாடசாலைப் பராயத்தில் புலம் பெயர்ந்த சிறார்களை நோக்குமிடத்து ஆரம்பத்தில் மொழி ஒரு சிக்கலாக இருந்தாலும் இறுக்கமான கலாச்சார பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்தவர்களுக்கு புலத்தில் காணப்பட்ட திறந்த கலாச்சாரம், நாகரீகம், வசதியானவாழ்வு, கூடுதல் சுதந்திரம் என்பன அவர்களிடத்தில் மிகையான தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

இந்த நிலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இரட்டைக் கலாச்சார வாழ்வுக்கு இட்டுச்செல்லப்பட பெற்றோர்கள் வேலைப்பழு போன்ற பல காரணிகளால் தாங்கள் பிள்ளைகளுக்காக செலவிடும் நேரத்தைக் குறைத்ததோடல்லாமல் வீடுகளில் நீண்டநேரம் தனித்திருக்கும் சந்தர்ப்பத்தையும், அச்சந்தர்ப்பத்தில் தொடர்புசாதனங்களை தம்விருப்பப்படி பாவிக்கவும் பல்கலாச்சார சமூகத்தில் இனம்காணாத நண்பர்களைப் பெற்றுக்கொள்ளவும் வாய்ப்பளித்தது எனலாம். இச் சூழ்நிலையில் தாய்மொழி, கலாச்சாரம், எமது வாழ்வியல், அந்நியகலாச்சாரச் சூழல் ஏற்படுத்தும் எதிர்கால விளைவுகள் என்பவற்றை பிள்ளைகளுக்கு அறிவுறுத்தி உங்கள் மேல் அதிக அக்கறையும் அன்பும் கொண்டவர்கள் நாங்கள் என்பதைத் தெளிய வைத்திருத்தல் வேண்டும்.

*- செல்வத்துரை மாணிவாசகர் -*

பிள்ளைகள் தங்கள் மேல் அன்பு செலுத்தயாருமில்லை என உணரும்போது மூன்றாம் இடத்தில் அன்பு கிடைக்கும்போது அதன் ஆழத்தையும் உண்மைத்தன்மையையும் உணராமல் பெற்றோருக்கிடையேயான இடைவெளியை அதிகரித்துக் கொள்வது இயற்கையே. இது பருவ வயதினர் மத்தியில் பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடும். எது எவ்வாறாயினும் வயதுப் பருவத்திற்கேற்ப பெற்றோராய், நண்பராய், ஆசிரியராய் ஒவ்வொருவரையும் உள்வாங்குவதே புலத்தில் எம் எதிர்காலம் நோக்கிய ஆரோக்கிய வாழ்வுக்கு இட்டுச்செல்லும். தம்பொருள் என்பர் தம்மக்கள் என்ற வள்ளுவர் வாக்குக்கமைய பிள்ளைகளை மதிப்போமானால் அவர்களும் எம் பொருளாகவே இருப்பார்கள் என்பது திண்ணம்.



இந்த நிலைமை புலம்பெயர் சூழல் ஏற்படுத்திய தாக்கமே தவிர இதை யாரும் வலிந்து ஏற்றுக்கொண்ட விடயமல்ல. பெற்றோர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும், அவர்கள் தாங்கும் சுமைகளும் தங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் நோக்கியதே என்பதை சுய சிந்தனையுள்ள எந்தப் பிள்ளையும் புறந்தள்ளிவிட முடியாது. எனவே இது சம்பந்தமான விவாதங்களுக்கும் கருத்தாடல்களுக்கும் அப்பால் பாடசாலைகளில் கற்பவர்களும் அதைத் தாண்டியவர்களும் தங்கள் தங்கள் கற்கைநெறிகளுக்கமைவாக இந்த நாடுகளில் இருக்கின்ற வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தங்களைத் துறைசார்ந்து பலப்படுத்திக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இது உங்களால் முடியும். நீங்கள் விடாமுயற்சியும், கடின உழைப்புங்கொண்ட தேசத்தின் மைந்தர்கள். பாரதி கூறியதுபோல திக்கெட்டும் வந்தோம் கலைச் செல்வங்கள் கொண்டு அங்கு சேர்ப்போம். உங்களது அறுவடைகள் விதைக்கப்படுவதற்கு எமது தாய்மண்ணிலே நிலங்கள் தயாராகவேயுள்ளது.

***

# உறக்கங்கள் தீரட்டும்

கூவாத செங்கொண்டை
சேவல்களுக்காய்
பொழுது புலர்ந்திட
மறப்பதில்லை

போர்வைக்குள் புகுந்து
கொண்ட
என் இனமே
ஒட்சிசனை உள்ளிழுக்க
உங்கள் சன்னல்களை
திறந்து வையுங்கள்

- ஜெயந்தி ஜீவா

# பெற்றோர் ஒருபுறமும் இளம் தலைமுறை மறுபுறமுமாக முட்டி மோதிக் கொள்ளும் சூழலில்...

- நயினை பாரதி

புலத்து வாழ்வில் இருவேறுபட்ட கலாச்சார பண்பாட்டுச் சூழல் விழுமியங்கள் ஒரே குடும்பத்தில் நுழைந்துவிட்ட நிலையில் பெற்றோர் ஒருபுறமும் இளம் தலைமுறைகளாக பிள்ளைகள் மறுபுறமும் முட்டி மோதிக் கொள்ளும் சூழல் காணப்படுகிறது. இதனைக் கருத்திற்கொண்டு பெற்றோர்கள் பிள்ளைகள் இடையிலான இடைவெளியை நிரப்பிக்கொள்ள சில ஆலோசனைகள்

1. என்ன வேலைகளில் நீங்கள் ஈடுபட்டிருந்தாலும் ஓய்வு நாட்களை பிள்ளைகளுடன் செலவிடுங்கள்.

2. வீட்டிலிருக்கின்ற குறைந்தபட்ச நேரமாவது பிள்ளைகளுடன் மகிழ்வாகப் பேசி மனக்குறைகளை அறிந்து அவற்றை நீக்குகின்ற வழிமுறைகளை கண்டுகொள்ளவேண்டும்.

3. உணவு உண்ணும்போது இயன்றளவு பிள்ளைகளுடன் ஒன்றாக இணைந்து கொள்ள முற்படுங்கள். ஏனெனில் நாளாந்தம் மூன்று சந்திப்புகளை குடும்பத்திற்காக அமைத்துக் கொள்ளும் களம் இதுவே.

4. பெற்றோர்களே நீங்கள் எதிர்பார்ப்பதை உங்கள் பிள்ளைகளிடம் பெற்றுவிடவேண்டும் என்பதற்கு மாறாக பிள்ளைகளின் எண்ணங்களை அபிலாசைகளைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாக உங்களை மாற்றிக் கொள்ளவேண்டும்.

5. உங்களது பெற்றோர்கள் உங்கள் எண்ணங்களுக்கு மதிப்பு அளித்து அவற்றைப் புரிந்துகொண்டு பழக வேண்டும் என்று நீங்கள் எதிர்பாத்தீர்களோ அவற்றையெல்லாம் உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் செய்யவேண்டும். அதுவே அவர்களது எதிர் கால வாழ்விற்கான நம்பிக்கைப் படிகளாக அமையக் கூடும்.

6. குடும்ப அங்கத்தவர்கள் வாரத்தின் ஒரு தடவையாவது ஒன்றிணைந்து ஆத்மார்த்த தளங்களில் புரிந்துணர்வுகளை உண்டுபண்ணக் கூடிய தியானம், யோகாசனம், இயற்கையை வெளியே சென்று ரசித்தல், காலாற நல்ல காற்றோட்டத்தில் நடத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாம். இந்தக்கூட்டு சக்தியானது தனிப்பட்ட வாழ்வு நிலைகளில் சந்திக்கும் இன்னல்கள், அவை கொடுக்கும் இன்ப துன்ப மனஅழுத்தங்களிலிருந்து விடுபட ஏதுவாகவிருக்க உதவும் மருந்துகளாக அமையக்கூடும்.

7. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் குடும்பத்தினர் அனைவரும் கலந்து உரையாடுங்கள். கருத்துப்பரிமாற்றம் செய்யுங்கள். ஒவ்வொருவரையும் அவரவர்களுடைய தனித்துவங்கள் ஊடாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள முற்படுங்கள்.

8. எல்லாவற்றையும் விட உங்களையும் மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க மனம் விட்டு சிரித்துப் பழகுங்கள். இதுவே சமூகத்தில், உங்கள் ஒவ்வொரு சிந்தனைகளும், சொல்லும், செயலும் சக்திமிக்க ஆயுதங்களாகி உலகை வெல்ல உறுதுணையாக அமையும். ■

அன்பின் உருவம் அம்மா
ஆசையின் வடிவம் அம்மா
இன்பத்தின் இனிமை அம்மா
ஈகையின் பிறப்பிடம் அம்மா
உண்மையின் உருவம் அம்மா
ஊக்கத்தின் உறைவிடம் அம்மா
எளிமையின் பிறப்பிடம் அம்மா
ஏக்கத்தைத் தீர்ப்பவள் அம்மா
ஐயம் இன்றி வளர்ப்பவள் அம்மா
ஒவ்வொரு உயிரும் அழைப்பது அம்மா
ஓதும் சொல்தான் அம்மா

- பு.ரவிசாந் (14)



என்னைப் பெற்றவர் அம்மா
நான் சொன்ன முதல் வார்த்தை அம்மா
எனக்கு உயிர் தந்தவர் அம்மா
என்னைச் சுமந்தவர் அம்மா
என்னை ஆராட்டிச் சீராட்டி
நித்திரைசெய்ய வைத்தவர் அம்மா
எனக்கு அறிவை ஊட்டியவர் அம்மா
என்னை முதன் முதலாக
அடித்தவர் அம்மா
என்னை முதன் முதலாக
அணைத்தவர் அம்மா

- ம.பவித்திரன் (11)



# அம்மா

# யார்......
# யாருக்கு?



\- சி. சிவாஜி

1

தமிழ் ஆசிரியை மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அன்று எதிர்ச்சொற்கள் பற்றி விளக்கம் அளித்தார்.

´´சந்தோஷம்´´என்பதற்கு எதிர்ச்சொல் ´´கவலை´´.
இதை விளக்குவதற்கு ஒரு உதாரணத்தையும் சொன்னார்;
´´நாங்கள் கலியாண வீட்டுக்குப் போகும்போது சந்தோசமாகப் போவோம். ஒரு செத்த வீட்டிற்குப் போகும் போது கவலையாகப் போவோம். இப்போது எல்லோருக்கும் விளங்கிவிட்டது தானே?´´

ஒரு மாணவன் குழப்பத்துடன் ஆசிரியையிடம் சொன்னான்;
´´ரீச்சர்... எங்கடை அப்பா சொல்லுவார், கலியாணவீடு எண்டால் கவலை எண்டும், செத்தவீட்டை போறதெண்டால் சந்தோஷம் எண்டும்.´´

´´என்ன கதை இது? அப்பிடியும் ஆரும் சொல்லுவினமே´´என்றார் ஆசிரியர்.

´´இல்லை ரீச்சர், கலியாணவீடு எண்டால் அங்கே நூறோ... இருநூறோ... குடுத்திட்டுத் தான் வரவேணும். செத்தவீடு எண்டால் ஒண்டும் குடுக்காமல் வந்திடலாம்´´ என்றான் மாணவன்.

மாணவர்கள் எல்லோரும் சிரிக்க, ஆசிரியை வாயடைத்துப்போய் நின்றார்.

# 2

*முப்பது வருடங்களுக்கு முந்திய சஞ்சிகை ஒன்றில் இருந்து....*

நவராத்திரி காலத்தில் ஆசிரியர் மாணவர்களுக்கு நவராத்திரி பற்றி விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார்.

கல்வி, செல்வம், வீரம் ஆகியனவற்றின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். முடிவில் ஒரு மாணவனிடம் கேட்டார்;
''உன் முன்னிலையில் திடீரென கடவுள் தோன்றி கல்வி, செல்வம், வீரம் என்ற மூன்றில் ஏதாவது ஒன்றைக் கேள், அதனை உனக்கு நான் தருகிறேன் என்று சொன்னால் நீ எதனைக் கேட்பாய்?''

''நான் செல்வத்தைத் தரும்படி கேட்பேன்'' என்றான் மாணவன்.

ஆசிரியர் சொன்னார்;
''அது தவறு. எப்போதும் கல்வியைத்தான் கேட்கவேண்டும்.''

உடனே மாணவன்...
''சார்... யார் யாருக்கு எது இல்லையோ, அதைத்தானே சார் கேட்பாங்க.''



# ''விடுதலையை நோக்கி சென்று கொண்டிருக்கின்ற ஓர் சமுதாயத்தில் நானும் ஒரு பிரதிநிதி''

> சிறுவர் பராமரிப்பு எம்மீது சுமத்தப்பட்ட சுமை. இதைச் செய்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் செய்கிறோம். ஏனெனில் குழந்தைகள் காப்பாற்றப்படவேண்டும். ஒரு குழந்தையாவது பட்டினியால் சாகக்கூடாது.

*உங்களை ஒரு மதகுருவாக அறிமுகம் செய்து கொள்ளலாமா?*

அடக்கப்பட்டு நசுக்கப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் அனுபவத்தை பகிர்ந்துகொண்டிருக்கும் ஒருவனாக என்னை அறிமுகப்படுத்துகிறேன். ஒட்டுமொத்தமாக விடுதலையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்ற ஒரு சமுதாயத்தில் நானும் ஓர் பிரதிநிதி. அத்துடன் நான் மதகுருவாக இருப்பதனால் மக்களை இலகுவாக ஒருங்கிணைத்து இந்தப்பயணத்தில் இணைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.



*இன்றைய போர்ச்சூழலில் உங்கள் செயற்பாட்டை எப்படி கட்டமைத்துக்கொள்கிறீர்கள்?*

போராட்டத்தின்போது சிறீலங்கா அரசு என்ன செய்தது? பொருளாதாரத் தடைவிதித்தது. குழந்தைகளுக்கான உணவைத் தடைசெய்தது. கல்வியைத் தடைசெய்தது. அதாவது மக்களின் அடித்தளக்கட்டுமான குழந்தைகளின் போசாக்கு, கல்வி போன்றவற்றிற்கு தடைவிதித்தது. இதனால் அவர்களை பட்டினியை எதிர்கொள்ளவைத்து ஒன்றுமேயில்லாத, பலவீனப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் சமுதாயத்தை உருவாக்க அரசு விரும்பியது. விடுதலைப் போராட்டத்தை இனிவரும் தலைமுறை தொடர்ந்து நடத்தாதபடி, இனிவரும் காலங்களில் யாரும் இணைந்துகொள்ளாதபடி தடுப்பதற்கான பாரிய அழிவுத்திட்டமாக குழந்தைகள் அழிப்புத்திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்தியது. அந்த வகையில் 20000 இற்கும் மேற்பட்ட குழந்தைகள், இளைஞர்கள் பட்டினியால் இறக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்தவகையில் நாங்கள், நான் சில வாய்ப்புக்களைப் பயன்படுத்தி, சர்வதேசத்திற்கு அழைப்பை விடுத்து சில உதவிகளைப் பெறமுடிந்தது. புலம்பெயர்மக்களின் உதவியினால்தான் அங்கு இளஞ்சமூகம் ஓர் ஆரோக்கியமான சமூகமாக நிமிர்ந்துநிற்கிறது என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

பாரிய இன அழிப்புகளாலும், அடக்குமுறைகளாலும் அழுத்தங்களாலும் சிதைந்துகொண்டிருக்கும் ஓர் இனம், விடுதலைப்போராட்டத்தில் தம்மை இணைத்து போராடிக்கொண்டிருக்கிறார்கள். பண்பாட்டுக் கட்டுமானங்கள், வாழ்வியல் கட்டுமானங்கள், பொருளாதாரக் கட்டுமானங்கள் போன்ற கட்டுமானங்களை இழந்துவிடாமல் பாதுகாக்கும் நடவடிக்கையில் T.R.O செயற்படுகின்றது. எனவே

நானும் நசுக்கப்படும் இனத்தின் அங்கத்தினனாக T.R.O உடன் சேர்ந்து செயற்படுகிறேன்.

*போர்ச் சூழலினால் அங்குள்ள மாணவர்களின் வாழ்வியல் மனநிலை எப்படி?*

அங்கு மாணவர்களைப் பற்றி சொல்வதானால் எல்லாம் இழந்த நிலை. எங்கள் எதிர்காலம் என்னவென்று தெரியாத நிலை. வெளிச்சமூகத்தில் (வன்னிக்கு வெளியே) நடக்கும் செய்கைகளை இழந்துவிட்டோம் என்ற ஏமாற்றம். இதுதான் அங்கு காணப்படுகின்றது.

*நீங்கள் வன்னியிலிருந்து வந்தவர் என்ற வகையில், சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் மாணவர்களின் கல்வி நிலையை சுருக்கமாகக் கூறமுடியுமா?*

அங்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைதான் செயற்படுகிறது. இது செயற்படாமல் இருந்திருந்தால் இன்று வன்னியில் கல்வி பூஜ்ஜியம்தான். ஆசிரியர்களுக்கு பயிற்சி நடக்கின்றது. பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளுக்கு மாணவர்கள் தேர்வுபெறும் அளவிற்கு கல்வி செயற்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள் விடுமுறையில் வரும்போது, அவர்களை ஒழுங்குபடுத்தி ''பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்" ஒன்றை உருவாக்கி அவர்கள் மூலமாக பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கிறார்கள். பேரவையைப் பாராட்டத்தான் வேண்டும். அவர்கள் செயற்படவில்லையென்றால், அரசு எதிர்பார்த்தபடி கல்வி பூஜ்ஜியமாகத்தான் போயிருக்கும்.

*வன்னியிலுள்ள சிறுவர்கள் பராமரிப்பு எவ்வாறு உள்ளது?*



-அருட்தந்தை ம.செ.கருணாரெத்தினம்-

யாழ். மாவட்ட கல்வி ஆணைக்குழுத் தலைவர்.
வன்னி பிரஜைகள் குழுத்தலைவர்.
அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைத் தலைவர்.
வெரித்தாஸ் தமிழ்பணியகத்தின் வன்னித் தொடர்பு இயக்குனர்.
ஆகிய பணிகளுக்கிடையிலும், தனியே மதத்தலைவராக மட்டுமல்லாது, மக்களின் வாழ்வியலுடன் தன்னையும் இணைத்துக்கொண்ட இவர் வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் (T.R.O) சேர்ந்து, ஈழத்தமிழ் மக்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்து வருகிறார். இவரது ஐரோப்பிய சுற்றுப் பயணத்தில், சுவிஸ் வருகையின் போது இவரைச் சந்திக்கச் சென்றோம். அவசரப்பயணங்கள், உறவினரின் சந்திப்புகள், தொலைபேசி அழைப்புகள் இவற்றிற்கிடையே, எங்களோடு அளவளாவினார். நள்ளிரவு நேரம், முகத்தில் சற்றே அசதிக்களைப்பு ஆனாலும் தனது கருத்தில் ஆணித்தரம். மனமுவர்ந்து அளித்த பேட்டிக்காய், ``ஊசிஇலை`` இன் சார்பில் நன்றிகள்.

இந்தச் சிறுவர் பராமரிப்பு எம்மீது சுமத்தப்பட்ட சுமை. இதைச் செய்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் செய்கிறோம். ஏனெனில் குழந்தைகள் காப்பாற்றப்படவேண்டும். ஒரு குழந்தையாவது பட்டினியால் சாகக்கூடாது.

*தங்கள் விருப்புகளைத் திணிப்பதில் பெற்றோர்,*
*கனவுகளைச் சுமந்துதிரியும் பிள்ளைகள்*
*இவர்களுக்கிடையிலான போராட்டம் பற்றி?*

நாம் சுவிஸ் நாட்டிலேயே இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளலாம். இவர்கள் பிள்ளைகளை அப்படி வளர்ப்பதில்லை. அவர்களின் ஆற்றலுக்கு சுயமாக சிந்திக்க விட்டுவிடுகிறார்கள்.

ஈழத்திலிருந்து வந்த எல்லோருக்கும் நான் சுயமாக விடுகின்ற கோரிக்கை என்னவென்றால், எமது தேசத்தில் நீர்வளம், விவசாயவளம், கனிவளம், நிலவளம், கடல்வளம், வனவளம் என்று எல்லாம் இருக்கிறது. புலம்பெயர் நாடுகளில் இவற்றில் ஏதாவது ஒருவளம் பற்றி கற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்பங்கள், வழிவகைகள் இருக்கின்றன. ஆகவே நீங்கள் இந்த வளங்கள் பற்றிய அறிவை வளர்த்தெடுப்பதில் கவனமெடுங்கள். இவற்றில் இரண்டு லாபங்கள் இருக்கின்றன.
தாயகக் கட்டுமானங்கள் கட்டியெழுப்பப்படுகின்றன,
இவ்வளங்களைப் படிக்கும் பிள்ளைகள் தாயகம் வந்து நல்ல வருமானம் ஈட்டக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

*எங்கள் பிள்ளைகள் மேற்கத்தைய கலாச்சாரத்தில் மூழ்குவதாக நிலவுகின்ற கருத்துபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?*



இது தவிர்க்க முடியாதது. தமிழகத்தை எடுத்துக்கொண்டால் மேற்கத்தைய சூழல் இல்லாமலே கலாச்சாரச்சீரழிவு நடக்கின்றது.
இதை மீடியா ஊடாக மேற்கத்தைய சமூகம் திணிக்கிறது. முக்கியமான நோக்கம் வர்த்தகப்பொருளாதாரம். விடுதலையுணர்வு, புரட்சிகர உணர்வு தலைதூக்காமல் இருக்க இக்கலாச்சாரத்தை மீடியாவுக்குள் புகுத்தி தனிமனித உணர்வுகளை அழிக்கும் செயற்பாடுதான் இது. சுவிசில் வாழும் பிள்ளைகளை இதற்குள் விழாமல் பாதுகாக்கமுடியாது. ஆனாலும் கடுமையான போராட்டத்தினால்தான் வெல்லமுடியும்.

*புலம்பெயர் தமிழர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

என்னுடைய பார்வையில் புலம்பெயர் தமிழர்கள்தான், தமிழீழத்தின் பாதுகாவலர்கள். அதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தமிழீழத்தில் நடக்கும் அனர்த்தங்கள், அழிவுகள் வேளையில் இங்குள்ள தமிழர்கள் கொடுக்கின்ற குரல், சர்வதேச அங்கீகாரம் பெற நடக்கின்ற போராட்டங்கள் இங்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பது போல், தமிழீழத்தில் வாழும் எங்களுக்கும் தெம்பையும், தைரியத்தையும் தருகிறது. இங்கு வந்து பார்க்கும்போது இவர்களின் ஆர்வம் எக்காலத்திலும் போராட்டம் நசுங்கப் போவதில்லை என்பதும் தெரிகிறது. அந்த வகையில் இங்கு வாழும் அடுத்த தலைமுறையைப்

இங்குள்ள அடுத்த தலைமுறைக்கும் ஈழத்தின் இளந் தலைமுறையினர்க்குமான தொடர்பைப்பேண வழிகளையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அந்தத் தேவையும் உள்ளது.

பொறுத்தவரை நான் கூற விரும்புவது, இந்த விடுதலைப் போராட்டத்தை தனியே ஆயுதப்போராட்டமாகப் பார்க்காமல், ஒட்டுமொத்த தேசத்திற்கான போராட்டமாகப் பாருங்கள். நீங்கள்தான் சகல கட்டுமானங்களையும் சீர்செய்யவேண்டும்.

அடுத்து மீடியா. இன்று சர்வதேசத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரேயொரு நிறுவனம் மீடியாதான்.

இந்த மீடியாவுக்குள் பலம்வாய்ந்த ஊடுருவலை நீங்கள் செய்யவேண்டும்.

பாரிய வல்லரசுகளின் கையாட்களாக ஊடகங்கள் இருக்கின்றன.

அதற்குள் நீங்கள் ஏதொவொரு வகையில் ஊடுருவவேண்டும். அப்போதுதான் நாளை புதிய புதிய நெருக்கடிக்குள் இருந்து தேசத்தைக் காப்பாற்ற முடியும்.

நீங்கள் இங்கு வாழ்கிறீர்கள். இந்நாட்டுப் பிரஜைகளாக மாறுங்கள்.

அந்தந்த நாடுகளில் அரசியலில் சேருவது நல்லது.

அப்போதுதான் உங்கள் இருப்பை உறுதிப்படுத்த முடியும்.

இந்த அரசைத் தூண்டி தேசத்தின் இருப்பை நிலைநிறுத்தமுடியும்.

இங்குள்ள அடுத்த தலைமுறைக்கும் ஈழத்தின் இளந்தலைமுறையினர்க்குமான தொடர்பைப்பேண வழிகளையும் ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

அந்தத் தேவையும் உள்ளது.



புகைப்படம்- TRO சுவிஸ்

## நண்பியின் கடிதம்..

*Hi, How are you.............*

எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பாடசாலை காலத்திற்கு பிறகும் எங்களுடைய நட்பு தொடர்வது. அன்று எமது பிரச்சனைகளை பரிமாறிக் கொண்டது போல் இன்றும் அதை தொடர்வதால் மனதுக்குள் ஒரு ஆறுதல் கிடைக்கிறது.

தற்பொழுது எனக்கு நிறைய மனக்குழப்பங்கள் வந்துள்ளன. தொழிற்கல்வியிலும் கவனம் செலுத்த முடியாமல் உள்ளது.

நான் உனக்கு முதல் எழுதியிருந்தேன்தானே. எனக்கு ஒருவரை பிடித்திருக்கென்று. அதை எனது பெற்றோருக்கும் தெரிவித்தேன். அதனால் விளைவுகளை அனுபவிக்கிறேன்.

எனக்கு, எனது பெற்றோரை மிகவும் பிடிக்கும். அவர்களோடு நான் பல விடயங்களை பற்றி கலந்துரையாடுவதாலும், அவர்களின் அபிப்பிராயங்களை கேட்பதாலும் பிரியந்தனைப் பற்றியும் தயங்காமல் கூறினேன். அவரைப் பற்றிய விபரங்களை தெரிவித்தேன். நான் கூறும்போதே அம்மா அப்பா, அவர்களது முகத்தில் மாற்றங்கள் கூடிக்கொண்டே இருந்தன. என்னால் இடையில் கதையை மாற்றமுடியவில்லை. ஆனால் சொல்லவந்ததை சொல்லிவிட்டேன்.

அவர்கள் கூறினார்கள்: படிக்கவேண்டிய வயதில் படிக்காமல் வேறு சிந்தனையில் இருந்தால் எப்போது

படிப்பது? நாங்கள் தான் மொழிப் பிரச்சனையால் பல துன்பங்களை அனுபவிக்கிறோம். பிள்ளைகள் நீங்கள் நல்லா இருக்கவேணும் என்று தானே ஓய்வில்லாமல் வேலை என்று ஓடி திரியிறம். நீ என்னமோ எல்லாம் சொல்லுறாய். காலம் போற போக்கில் நீ பார்த்தவனும் நல்ல ஆள் தானா என்பது கேள்விக்குறி.
தேவையில்லாத எண்ணங்களை மனதில் எடுக்காமல் படிக்க எடுத்ததை ஒழுங்காய் படித்து முடி; அதன் பிறகு பல விடயங்கள் உனக்கே விளங்கும் என்றார்கள்.

பெற்றோர் சொல்வதிலும் நியாயமிருக்கிறது. படிப்பும் முக்கியம். பெற்றோரிலும் அன்பு இருக்கிறது. பிரியந்தனையும் பிடித்திருக்கு. என் மனதுக்கு ஒரே பிரச்சனையா இருக்கு. பிரியந்தனை பற்றி சொன்னதிலிருந்து அம்மா, அப்பா என்னோடு முன்பு மாதிரி கதைப்பதில்லை. என்னை அரவணைப்பதில்லை.

சுயா, எனக்கு எனது பெற்றோருடன் முன்பு மாதிரி கதைக்க வேணும். அவர்கள் என்னை அரவணைக்க வேணும். அப்போதுதான் எனக்கு நல்ல மன ஆறுதல் கிடைக்கும். என்னால் ஒழுங்காக படிக்கவும் முடியும். எல்லா விடயத்திலும் ஒரு தெளிவான முடிவு எடுக்கவும் முடியும். இதற்கு என்ன செய்யலாம்?

உனது கருத்தை எதிர்பார்த்து நிற்கும்

என்றும் உனது நண்பி
சீக்குயின்

# பனிச்சறுக்கலில் முதல் நாள்...

எமது பாடசாலைச் சுற்றுலாவில் நாங்கள் செவ்வாய்க்கிழமை அன்று Schlittenfahrenக்கு பேருந்தில் சென்றோம். என்னோடு பாடசாலையில் படிக்கின்ற எல்லா மாணவர்களும் சென்றோம். அங்கே சென்ற பின் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஒரு அனுமதி அட்டையைத் தந்திருந்தார்கள். அந்த அனுமதி அட்டையுடன் உள்ளே போன பின் கேபிள் காரில் சென்றோம். மேலே இருந்து கீழே பார்க்கும் போது அழகாக இருக்கும். சிறிது நேரத்தின் பின் கீழ் இறங்கி கொஞ்ச தூரம் நடந்து சென்றோம்.

அங்கே பனிக்கட்டிகள் சிதறிக் கிடந்தன. பார்ப்பதற்கு சந்தோசமாக இருந்தது. பனிப் படிவுகள் மிகவும் இறுக்கமாக காணப்பட்டன. அந்த இறுக்கமான பனிப் படிவுகளில் Schlittenfahren செய்தோம். முதல் தடவை எனக்கு மிகவும் பயமாக இருந்தது. பயத்தை நீக்கிவிட்டு இயன்றவரை ஓடிப்பார்த்தேன். ஏனென்றால் இவ்வளவு உயரமாக இருக்கும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. என்னோடு படிக்கின்ற அனைத்துப் பிள்ளைகளும் மேலிருந்து கீழே வெகு வேகமாக சறுக்கிக்கொண்டிருந்தார்கள்.

பின்பு சிறிது நேரம் Pause விட்டார்கள். அப்போது எல்லாருமாக சேர்ந்து உணவு உண்ணத் தொடங்கினோம். பின் மீண்டும் Schlittenfahrenக்கு போனேன். நான் போகும்போது என்னுடைய Schlitten வெகு வேகமாக ஓடிச்சென்றது. அதனுடன் சேர்ந்து நானும் ஓடினேன். கீழே விழுந்தேன். விழுந்த இடத்தில் முரசில் அடிபட்டு எனக்கு இரத்தம் கொட்டியது. ஒரு பிள்ளை என்னைக் கண்டதும் ஆசிரியருக்கு போய்க் கூறினார்.

ஆசிரியர் உடனே வந்து என்னைப் பார்த்ததும் பேப்பரால் இரத்தத்தை துடைத்துவிட்டார். காயம் ஆழமாக இல்லை என்று கூறினார். ஆசையும் சந்தோசமும் என்னை விடவில்லை. மீண்டும் பலதடவைகள் Schlittenfahren செய்தோம். பின்பு கேபிள் காரில் கீழே வந்தோம். கீழே பேருந்து நின்றது. அனைத்து சக மாணவர்களும் அதில் ஏறினோம். பாடசாலைக்கு அருகில் வந்து இறங்கினோம். எல்லோரும் தங்கள் வீடுகளுக்கு சென்றார்கள். நானும் எனது வீட்டுக்கு வந்தேன். என்னைக் கண்டதும் அம்மா மிகவும் பயந்துவிட்டார். ஏனென்றால் மூக்கில் இருந்து பல இடங்களிலும் வீக்கமும் உரசுப்பட்ட காயங்களும் காணப்பட்டன. எவ்வளவு காயப்பட்டாலும் சகமாணவர்களுடன் சேர்ந்து இந்த சுற்றுலாவிற்கு சென்றதும் அங்கு எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும் என்னால் என்றும் மறக்க முடியாதவை.

Schlittenfahren - பனிசறுக்குதல்
Schlitten- பனியில் சறுக்கும் இருக்கை
Pause - இடைவேளை

- ம.மயூரி (10)



# Sorry (ச்)சேட்டை


- ஜெ.ஜனனி

ஒரு புகையிரத நிலையத்தின் ரக்சி நிறுத்துமிடத்துக்கு இரண்டு பெட்டிகளுடன் ஒருவர் வந்தார். ரைக்சி சாரதியிடம் விலாசத்தைக் கொடுத்து இந்த விலாசத்தில் உள்ள இடத்திற்கு போகவேண்டும். இரண்டு பெரிய பெட்டிகளையும் காட்டி எனக்கு எவ்வளவு தொகை இந்தப் பெட்டிகளுக்கு எவ்வளவு என்று கேட்டார். சாரதியோ நீங்கள் போவதற்கு இவ்வளவு தொகை தரவேண்டும். ஆனால் பெட்டிகள் இரண்டுக்கும் நீங்கள் பணம் தரத்தேவையில்லை என்றார். உடனே இரண்டு பெட்டிகளையும் காரில் ஏற்றி அந்த விலாசத்துக்கு இதனை கொண்டுபோய் இறக்கிவிடச் சொல்லிவிட்டு தனது கைப்பையுடன் தான் பஸ்ஸில் வருவதாக கூறிச் சென்றார்.

# இளமை வலிகள்...

- தயா லோகதாசன்


1




## ஈர்ப்பு விசை

விஞ்ஞானியே நியூட்டா!
புவியீர்ப்பு விசையை
கண்டுபிடித்த நீயேன்
கன்னியீர்ப்பு விசையை
கண்டு பிடிக்க
மறந்துவிட்டாய்?

# நி
# ஜ
# ம்



உன் கண்களில்
நான்
மையெழுதிப் பார்த்தேன்
கனவில் தான் உன்
கண்கள் எனக்கு
தெரிந்தன!

2

# 3 முத்தமிட்டவள்




கண்ணடித்தாள் தன்
இதழ் கடித்தாள்
கட்டியென்னை முத்தமிட்டாள்
சின்னச்சிரிப்பில்
எனை சிலிர்க்க வைத்தாள்
கண்ணே என்றேன்
கனியமுதே என்றேன்
என்னுயிர் நீயே என்றேன்

நான் செய்ய எண்ணியவை
அத்தனையும் அவள் செய்தாள்
என்ன தவம் செய்தேனோ
பெண்ணே உன்னைப் பெறுவதற்கு
கிளிச் சொண்டை திறந்து அவள்
குட்நைட் டாடியென்றாள் ஐந்து
வயது அடையாத என் மகள்
ஆரணி...!

# விதிகள்

பைதகரசின் விதியினால்
செம்பக்கம் காண்கிறோம்
யார் சொன்ன விதியால்
பெண்பக்கம் பார்க்கிறோம்?




4



விளையும் பயிர்:
N.வினோஜி(10)




விளையும் பயிர்: மம்தா(11)

# அவர்கள் அவர்களாகவே...

- ஜெக்கி-


என் குடும்பத்தினரும்
எனது நண்பி
குடும்பத்தினரும்
விருந்திற்கு
அழைக்கப்பட்டிருந்தோம்
பள்ளித்தோழி ஒருத்தியால்
புலம் பெயர் வாழ்வில்
நட்புகள் மட்டும்
புலம் பெயராது
நம்மோடு, நம்
நெஞ்சங்களோடு
இன்றும் இணைந்துள்ளதை
நினைக்க பெருமையும்
இன்பமும்
எமக்குள்...
என்ற புதுமையில்

எம் வாழ்க்கையை
பள்ளிப்பருவ நினைவுகளை
மீட்டியவண்ணம்
நானும் நண்பியும்
ஒருவர் மடியில்
ஒருவர் கால்போட்டபடி
புகைவண்டியில் இருந்து
அரட்டை அடித்தபடி...

வண்டி தன் தாளத்தோடும்
எங்கள் வாரிசுகள்
தங்கள் கீதங்களோடும்
மணிக் கணக்கை
தாண்டுவது கூட தெரியாமல்

பட்டம் வாங்கும் வயதில்
பட்டம் வைத்த
வாத்தியார்களின் நினைவும்
அன்றைய நிகழ்ச்சிநிரலை
பட்டியல் படுத்திய வண்ணம்
எம்மை மறந்து
சிரித்தும் அழுதும்
கொண்டபோதுகளில்
இடையிட்ட
அம்மா Hunger
என்ற வார்த்தையில்
நாம் நிஜத்திற்கு வந்தோம்
கவனங்கள்
இடையிடையே எம்
பிள்ளைகள் மீதும் செல்ல
உரையாடல்கள்
திசை திரும்பும்
அடிக்கடி...

கற்கை மொழிகளில்
எமது சந்ததியினர்
உரையாடும் போது
நானும் நண்பியும்
அவர்களின்
5ம் 6ம் வயதினையும்
கருத்தாழத்தினையும்
வாக்கிய அமைப்பையும்
கேட்டும் பார்த்தும்
சிரித்து ரசித்தோம்...





விருந்து நன்றாயிருந்தது
விடைபெற்று மீண்டும்
புகைவண்டியில் நாம்...
மிக அருகாமையில்
மூன்று சீன பருவமங்கைகள்
பயணித்தனர்....
அவர்களின் முகங்களும்
உருவங்களும்
அவர்கள் எந்த நாட்டவர்
என்று சொல்லித்தந்தன....


வாசிற்றி வாரிசுகள்
என்பதை
கையிலிருந்த புத்தகங்கள்
காட்டித் தந்தது....

நானும் நண்பியும்
நீண்ட நேரம்
அவதானித்தோம்
அவர்கள்
மணிக்கணக்கில்
அரட்டைஅடித்தார்கள்
கொல கொல என்ற
வயது சிரிப்பு
எம்மையும்
இடையிடையே
விளக்கமில்லாமல்
சிரிக்கவைத்தது

அவர்கள் பேசுவது
புரிந்தது
ஆனால்
என்ன பேசினர்
என்பது மட்டும்
புரியவில்லை
அவர்களின்
தாய்மொழியில்
மிக நன்றாக உரையாடிக்கொண்டனர்

நானும் நண்பியும்
உள்ளூர
வெந்துகொண்டோம்
எம்மையும்
எம்வாரிசுகளையும்
எம்சந்ததியினரையும்
எண்ணி எண்ணி
துன்பப்பட்டோம்
நமக்குள்
இன்றும் அந்த
நெருடல்
ஆதங்கம்
ஏன் முடியாது
எங்களால் முடியும்
சொல்கிறோம்
ஆனால்...?

*Hunger - பசி*



# புத்திசாலித் தாத்தா

சல சலவெனும் ஆற்று நீரில் தூண்டிலைப் போட்டுவிட்டு ஏதாவது மீன் பிடிபடுகிறதா என ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த வழியாகப்போன மற்றொருவர் தூண்டிலையும் அவரையும் பார்த்துவிட்டு

“வழமையாக மீன் பிடிப்பதற்கு தூண்டில் ஊசியில் புழு- ஒன்றைக்குத்தி தண்ணீருள் விட்டிருப்பார்கள். ஆனால் நீங்களோ அப்பிள் பழத்தைக் குத்தியிருக்கிறீரகளே எப்படி தூண்டிலில் மீன் அகப்படும்” என்று கேட்டார்.

“நான் ஒன்றும் முட்டாள் அல்ல. அந்த அப்பிள் பழத்துக்குள் ஏற்கெனவே புழு உள்ளது” என்று பதிலளித்தார்.

- வ.தர்மின்


# SHELVA ZUG

## வங்கிக்கடன்

## காப்புறுதிகள்

T: P 041 760 64 63
041 790 64 66
079 514 64 28
Fax: 041 790 64 68

**SHELVA ZUG, Thangarajah**
**Buonaserstr. 02,**
**6343 Rotkreuz,**
**Switzerland.**



*விளையும் பயிர்:*
யோ.கிருசா(9)



*விளையும் பயிர்:*
சூ.யேக்கப்(10)

# விழுதுகள் விழுங்கிய ஆலமரம்

எத்தனையோ அறைகளுள்ள அந்த வயோதிப விடுதியில் மற்றெந்த அறையைத் திறக்கும்போதும் இல்லாத ஒரு மனக்கஸ்ரம் கடந்த மூன்றுவார காலமாக, அந்த ஒன்பதாம் இலக்க கதவுக்குமிழியைக் கை திருகும்போது எனக்கு ஏற்படுவதுண்டு. கூடவே ஏதோ என்னுடைய தாத்தாவை அழைத்துப் போனது போல் பெரியவர் பாலையா அவர்களைத் "தளிர்மணி" உணவகத்திற்கு சாப்பிட அழைத்துப்போன அந்த நாளையும் இன்றுவரை என்னால் மறக்கமுடியவில்லை.

கத்தரிக்காய்ப் பிரட்டல், மைசூர்ப்பருப்பு, உருளைக்கிழங்கு, பூசணிபோட்ட சாம்பார். அதில் சின்னச் சின்னதாய் முருங் கக்காய் துண்டுகள் வேறு. தக்காளிச்சம்பல், எண்ணெயில் மினுக்க வறுத்த மோர்மிளகாய் மூன்று, வடகம் இரண்டு சாப்பிட்ட பிறகு கசுக்கொட்டை, முந்திரிகை வற்றல் சேர்த்து சிறிய அன்னாசித் துண்டுகள் மிதக்க பாயாசம் கூட தம்ளரின் விளிம்புவரை நிரம்பி வழிந்தது.



**- ஊரெழுவூர் சண்-**

சாதாரண மதிய உணவு மட்டுமே போதுமென்ற பாலையா விற்கு தனக்கும் சேர்த்து விசேட உணவுக்கு நான் பணம் கொடுக்கிறேன் என்றபோது பூரிப்பில் நெஞ்சம் நெகிழ்ந்து போனார். பசிக்கொடுமையால் உழலும் ஒருவரை ஒரு பெரிய கல்யாண வீட்டுப்பந்தியில் அமர்த்தினால் எப்படியிருக்குமோ, அதே மனநிலையில் பாலையா அவர்கள் "தளிர்மணி" உணவகத்தில் என்னுடன் உட்கார்ந்து இருந்தார்.

*என்னைக் கொண்டு வந்து, இந்த வயசில என்ர மகன் இப்பிடி ஒரு பழைய விடுதியிலை விட்டிட்டுப்போட்டானே. நியாயமா இது? சொல்லுங்கோ... நேர்மையான காரியமே இது?*

சாதாரணமாக "தளிர்மணி"யில் வாடிக்கையாளர்கள் என்றாலே விசேட கவனிப்புண்டு. அந்தக் கவனிப்பு அவ்வப் போது நான் அழைத்துப்போகும் விருந்தாளிகளுக்கும் கனி வதுண்டு. பெரியவர் பாலையாவுக்கு இது இரட்டிப்பாகவே கிடைத்தது. அதற்குக் காரணம் அவரது வயோதிபம்.

அன்று பெரியவர் பாலையா சாப்பிடுவதையே கவனித்துக் கொண்டிருந்ததால் நான் சாப்பிடவில்லை. அதற்கும் சேர்த்தாற் போல் அவரே மிகச்சரியாக சாப்பிட்டார். இரண்டாவது முறை சோறு போடுவித்தார். கறிகளை மேலும் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார். திருப்தியாக, ஆனந்தமாக, இரசித்துச் சாப்பிட்டார்.

சாப்பிட்டு முடித்து நடந்து வயோதிபர் விடுதிக்குப் போய் சேர்வதற்குள் பாலையா நாலைந்து தடவைகள் ஏப்பம் விட்டார். தளிர்மணி உணவகத்தின் சாப்பாட்டை உண்மை



யிலே ஒரு கல்யாணச் சாப்பாடுதான் என வெகுவாகப் புகழ்ந்தார். சமையல் அப்படியே தன் மனைவியின் கைப் பக்குவத்தைக் கொண்டிருந்தது என நினைவு கூர்ந்தார்.

பெரியவர் பாலையாவிற்கு வீட்டுச்சமையல் போன்ற நல்ல தொரு சாப்பாட்டை வாங்கிக் கொடுத்துவிட்ட திருப்தியுடன் விடுதியுள் நுழைந்து அலுவலகக் கதவைத் திறந்து மின் விளக்கு வெளிச்சத்தைப் படரவிட்டு எனது கதிரையில் அமர்ந்தேன். பாலையாவும் என் பின்னே நுழைந்து அரு கிலுள்ள கதிரையில் அமர்ந்தார்.

சட்டென பக்கவாட்டில் திரும்பி எனது இரு கைகளையும் பற்றிக்கொண்டார். கடந்த மூன்று மாதகாலமாக நான் இங்கு பணியாற்றிய போதும், அவருடன் நெருங்கிப் பழகியதுவோ அலுவலகத்துக்குள் அவர் நுழைந்ததுவோ இல்லை. அதனால்தானோ என்னவோ அவரின் கைகள் லேசாக நடுங்கின. கண்களில் மெல்லிய நீர்ப்படலம் கலங்கி உருண்டு திரண்டு பொழியக் காத்திருந்தது. வார்த்தைகளால் எதையோ சொல்ல அவருடைய மனம் துடித்தாலும் சொற்கள் எதுவும் பாலையாவின் தொண்டையை விட்டு வெளிப்படவில்லை. அவரின் கண்களிலிருந்து நீர் ததும்பி கன்னங்களில் வழிந் தோடியது. நானும் பரிவுடன் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

"எதுக்காக இவ்வளவு உணர்ச்சிவசப்படுகிறீங்கள்" என்றேன் கனிவுடன். உடனே பாலையா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். விருட்டென கண்ணீரைத் துடைத்தார். கணத்து நீண்ட பெருமூச்சை விட்டார். நன்றியுடன் என்னை நோக்கினார்.



"எப்படி உங்களுக்கு நன்றி சொல்றதுண்டு தெரியல்லை சுந்தர். நான் இன்னும் எத்தனை வருசம் உயிரோடை இருப்பேனோ தெரியாது. இருக்கிற வரைக்கும் உங்களையும் மறக்கமாட்டான். நீங்கள் வாங்கித் தந்த சாப்பாட்டையும் மறக்கமாட்டன். என்ன அருமையான சாப்பாடு. ஒருவேளை இதெல்லாத்தையும் அவள்தான் பண்ணியிருக்கிறாளோ எண்டு சந்தேகமே வந்திட்டுது. உண்மையாகவே இப்படியொரு மங்களகரமான சாப்பாட்டை வாழ்க்கைபூராக அனுபவிச்சுச் சாப்பிடுகிறதுக்கும் ஒரு கொடுப்பினை வேணும் சுந்தர்..... மனிசருக்கு இதுகளெல்லாம் கிடைக்கிறதே கூட ஒரு வரப்பிரசாதம் தானென்று நான் சொல்லுவன். இந்தக் குடுத்து வைப்பனவு எனக்குக் கிடைக்க இல்லை."



இந்த இடத்தில் நான் சற்றுக் குறுக்கிட்டேன். "தளிர்மணியிலே சாப்பாடு ஒரு மாதிரியான சுத்தமான, வீடுகளிலை சமைக்கிறது போல நல்ல சாப்பாடுதான். நானும் ஒப்புக்கொள்ளுறன். ஆனா அந்தச் சாப்பாட்டையே வரப்பிரசாதம், கொடுப்பினை எண்டு எல்லாம் புகழ்ந்து தள்ள வேணுமோ என்றதிலை எனக்கு கேள்விக்குறியாத்தான் கிடக்குது".

இதற்கு பெரியவர் பாலையா மிகவும் அழுத்தமாகவே பதில் சொன்னார். "வரப்பிரசாதமெண்டு தாராளமாய் சொல்லலாம் சுந்தர். இதெல்லாம் நாங்கள் வாங்கிவாற வரம்தான் தம்பி.

பாருங்கோ நான் வாங்கி வந்திருக்கிற வரத்தை...." நீண்ட பெருமூச்சு இடைவெளியாகியது.

"எழுபத்திரண்டு வயதாகுது. எனக்கு ஒவ்வொரு வேளை சோத்துக்கும் உந்தக்குளிரெல்லாம் நடந்து அந்தச் சரவணனிலை போய், வெந்ததையும் வேகாததையும் போடுகிறதைச் சாப்பிட்டு வாழ வேண்டியிருக்கு. என்ர தலையெழுத்தில்லாம, வேறென்ன இது? சொல்லுங்கோ... இப்பிடி வயோதிப மடத்திலை தங்கிக் கொண்டும் உணவு விடுதிகளிலை சாப்பிட்டுக் கொண்டும், திரியிற வயசே எனக்கு! எனக்கென்று மனுசர் இல்லையே, குடும்பம் இல்லையே ... இப்பிடி இஞ்சை வந்து தன்னந்தனியாக கிடந்து சாகிறத்துக்கு! இஞ்சை பிள்ளையள் இருக்கினம். எல்லாரும் நல்லாத்தான் இருக்கினம் சுந்தர்.

என்னைக் கொண்டு வந்து, இந்த வயசில என்ர மகன் இப்பிடியொரு பழைய விடுதியிலை விட்டிட்டுப்போட்டானே. நியாயமா இது? சொல்லுங்கோ, நேர்மையான காரியமே இது?

*இரண்டு வருசம் ஓடிப்போட்டுது. ஓடித்....... திசைதெரியாம இங்கை வந்து கிடக்கிறன். இந்த இரண்டு வருஷத்திலை திருப்பியும் என்ர மகன்ர வீட்டிலை போய்... அவங்களோட எல்லாம் சேர்ந்திருக்கப் போறேனோ இல்லையோ எண்டு தெரியலை எனக்கு. ஒருவேளை, என்ரை பிராணன் இங்கைதான் போகப்போகுதோ என்னவோ.. கடைசியிலை இவங்களை எல்லாம் பெத்து ஆளாக்கினத்துக்கு எனக்கு கிடைச்ச கதி இதுதான்.*

இருபத்தைந்து வருசத்துக்கு முன்னாலே நான் அவனை இஞ்ச கூப்பிடேக்குள்ளை என்ரை மகனுக்கு வயசு அஞ்சு. மனுசியை வேலைக்குக்கூட அனுப்பாமல் நான் மட்டும் சனி ஞாயிறு எண்டு பார்காமல், இரவு பகலெண்டு பார்காமல் உழைச்சுத் தான் இதுகளை வளர்த்து படிக்க வைச்சனான். வளர்ப்புத் தாய்மாரிட்டை விட்டால் பிள்ளைகளை கவனிக்காமல் விட்டிடுவினம் எண்டு நினைச்ச எனக்கு கிடைச்சிருக்கிற பரிசைப் பார்த்தியளே...?"



இந்த இடத்திலை பெரியவர் பாலையா இரண்டு நிமிடங்கள் நிறுத்தினார். அவரின் உணர்வுப் பிரவாகம் மற்றொரு முக்கிய திசையை நோக்கித் திரும்பியிருப்பது தெரிந்தது. அதில் குறுக்கிடுகிற அவசியம் எதுவும் அந்தக்கணம் எனக்கு இல்லாததனால், நான் மௌனமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பெரியவர் பாலையா தொடர்ந்து பேசத் தொடங்கினார்.



"நாலைஞ்சு பேர் இருக்கிற வீட்டிலை ஆளுக்கு ஆள் நாலுவித அபிப்பிராயம் இருக்கத்தான் செய்யும். எல்லாமே அவையள் சொல்லுறதுதான் சரி நான் சொல்லுறதெல்லாம் பிழை... இப்பிடிப் பேசினால் ஆர் என்ன பண்ணமுடியும். உதாரணத் திற்கு ஒண்டு சொல்றன், மகனுக்கு மூண்டு பிள்ளையள். பள்ளிக்கூடத்திலையிருந்து வந்தவுடன் எப்பவும் ரி.வி க்கு முன்னுக்குத் தான். நான் பேசினால் மருமகள்காரி

வேலையாலை வந்தவுடனேயே போட்டுக் குடுத்திடுங்கள். உதை ஏன் இஞ்சை வீட்டிலை வைச்சிருக்கிறாய் எண்டு சொல்லுதுகள். இதிலை ஆகவும் கவலை என்னென்றால் என்ர மகன்காரன் வேற அவையளின்ர சொல்லைக் கேட்டு என்னை திட்டித் தீர்க்கிறான்.

அதுவும் என்ரை மனுசி செத்த பிறகு நான் என்ர மகன் மகள்மாரிட்டை பட்டிருக்கிறபாடு இருக்கே, பகவானுக்குத்தான் அது வெளிச்சம். நிறைய விசயங்களிலை எனக்கும் அவங்களுக்கும் அபிப்பிராய பேதம் வந்தாச்சு. என்ர மனிசி என்னை விட்டுபோன கையோட மகனும் மருமகளுமாய் அன்பாய் பேசினாங்கள். பழகினாங்கள். "அம்மா போன பிறகு இனியென்ன அப்பா கடைசிக்காலம் வரையும் எங்களோடைதான் இருக்கப்போகிறீர்கள். நாங்கள் நிறைய வாடகை கட்டிக் களைச்சுப்போனம். அதாலை பெரிசாய் ஒரு வீடு பார்த்து வாங்கப்போகிறம். பிள்ளைகளுக்கும் நசனாலிற்றி எடுத்துப் போட்டு இஞ்சை வைச்சிருக்கப்போறம். அதாலை உங்கடை, அம்மாவின்றை பென்சன் காசுகளை எழுதி எடுத்தால் கடன் எடுக்காமலே வீடு சொந்தமாக வாங்கலாம், எண்டு நல்ல விதமாக கதைத்ததிலை நானும் கையெழுத்தை வைச்சுக் குடுத்திட்டேன். புது வீடு வாங்கின பிறகுதான் அவையின்ர உண்மைநிலை விளங்கிச்சுது.

*விடுதியிலிருக்க பெரியவர் பாலையாவுக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லைத் தான். ஆனால் அதை வாய்திறந்து மகனிடம் சொல்லவோ வீட்டுக்கு வந்து விடுகிறேன் என்று கேட்கவோ அவருக்குப் பிடிக்கவில்லை.*

அவைகளின்ர அபிப்பிராயத்துக்கு எதிராக நான் ஏதாவது சொன்னால் "நாங்கள் சொல்றது இதுதான், கேட்டுக்கொண்டு இருக்கிறது என்றால் இரு. இஷ்ரமில்லையெண்டால் எங்கையாவது வயோதிபமடம் பார்த்து தாறம்; உன் இஷ்ரத்திற்கு அங்கை போய் இருந்து கொள்... ஆரும் உன்னை எதுவும் கேட்கமாடினம்..." என்ற ஒரே பாட்டுத்தான்.

நானும்தான் என்ன பண்ணுவன் சுந்தரம், சரியடாப்பா... சரிப்படயில்லையெண்டால் என்னை ஒரு வயோதிப விடுதி பார்த்துச் சேர்த்துவிடு என்று ஒரு நாள் ரொம்பவும் முடியாமல் சொல்லிப் போட்டன். அதுக்காவே காத்திருந்தவன் மாதிரி உடனே என்னை இஞ்சை சேர்த்து விட்டதோட ஆக விலை குறைவான சாப்பாட்டுக் கடையிலையும் கணக்கும் வைச்சுப் போட்டான். என்ர உறவுக்காரரிட்டையும் போய்.... நான்தான் வீட்டை இருக்க முடியாதென்று விடுதிக்கு கிளம்பிப் போயிட்டன் எண்டு அப்பிடியே கதை மாதிரி மாத்திப் போட்டான். ஊருக்கும் அப்படியே வேண்டியவை எல்லாருக்கும் எழுதிப் போட்டிட்டான்.

ஓய்வூதியத்திலை தங்களுக்கு எந்தப் பணமும் தரவில்லை என்கின்ற கோபத்திலை மகள்மார் இரண்டு பேரும் என்னைச் சந்திக்கிறதேயில்லை. என்னை தலைமுழுகியாச்சு எண்டும்

*அவருக்குள்ளும் ஒரு சுயமரியாதை இருக்கிறது. சுய கௌரவத்தை இழந்து எதையும் கேட்க பாலையா தயாரில்லை.*

சொல்லித்திரியினாமாம். விடுதிக்கு வந்தபிறகு உறவுக் காரரின்ரை கல்யாணத்திற்குகூட போய்க் கலந்துகொள்ள முடியவில்லை. ஒரு நரக வாழ்க்கையை இஞ்சை நான் அனுபவிக்கிறன். தெரிஞ்சவையை பார்க்கவே வெட்கமாய் போச்சுது. விடுதியிலை ஒருநாள் போறது ஒரு யுகம் போறது மாதிரி இருக்ககுது.

ஒருத்தருக்கொருத்தர் எத்தனையோ அபிப்பிராய பேதத்திலை இருந்தாலும் வீட்டிலே இருக்கிறபோது எனக்கு ஒரு உள ரீதியான பாதுகாப்பு இருக்கிற மாதிரி இருந்தது. ஆனால் இங்கை அந்த பாதுகாப்பு இல்லை. அதாலை இரவிலை படுத்தாலே நெடு நேரமாய் நித்திரை இல்லை. ஏதோ ஒருவித உள்ளார்ந்த பயம்...... இந்தப் பயம் பகலிலை இன்னும் கூடிடும். அனேகமாய் பகலிலை விடுதியிலை என்னைத்தவிர யாரும் இருக்கமாட்டினம். பேச்சுத்துணைக்குகூட ஆளிருக்காது. இந்தப் பய உணர்வைப் போக்குறதுக்காகத்தான் பகல் நேரங்களிலை நீண்ட நேரம் விடுதி வாசலிலை உட்கார்ந்து போகிற வருகிறவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே இருப்பேன். யாருக்காவாது இதெல்லாம் தெரியுமே?

ஏழு வருசத்திற்கு முன்பு என்ர மனிசி இறந்து போனபோது பயமும் பாதுகாப்பின்மையும் வரத்தான் செய்தது. ஆனால், அது கவலைப்படும்படியான பெரிய பயம் கிடையாது. இப்ப விடுதி வாழ்வு என்ர மனநிலையை மோசமாய் பாதிக்குது. இப்படியே விடுதி வாழ்வும், பிடிக்காத உணவுச்சாலை சாப்பாடும் சாப்பிட்டு வாழ வேணுமென்டிறது, என்ர தலையிலை எழுதியிருக்குப் பாருங்கோ.

நானும் கல்யாணத்துக்குப் பிறகும் எத்தனையோ வருஷங்கள் கூட்டுக் குடும்பமாய் இருந்திருக்கிறேன். அபிப்பிராய பேதங்களும் நிறையவே வந்திருக்கிறது. கஸ்ர நஸ்ரங்களும் தராளமாய் இருந்தன. ஆனால் ஆரும் ஆரையும் வீட்டை விட்டு போயிடெண்டு ஒரு நாளும் சொன்னது கிடையாது. என்ர மனுசி மாமன் மாமியாரை ஒரு வார்த்தையாவது தப்பாய் பேசியிருப்பாளே? ஆனால் என்ர மருமகள் என்னைப் பார்த்து

நேரத்துக்கு நேரம் விழுங்கிறத்திற்கு இதென்ன மடமே........ எண்டு அலட்சியாமாய் கேட்கிறாள். மனுசன்காரனோட சேர்ந்து வயோதிப விடுதிக்கு போயிடு. அது தான் உத்தமம் எண்டிட்டாள்.

இரண்டு வருசம் ஓடிப்போட்டுது. ஓடித்... திசைதெரியாம இங்கை வந்து கிடக்கிறன். இந்த இரண்டு வருஷத்திலை திருப்பியும் என்ர மகன்ர வீட்டிலை போய்... அவங்களோட எல்லாம் சேர்திருக்கப் போறேனோ இல்லையோ எண்டு தெரியலை எனக்கு. ஒருவேளை, என்ரை பிராணன் இங்கைதான் போகப்போகுதோ என்னவோ! கடைசியிலை இவங்களை எல்லாம் பெத்து ஆளாக்கினத்துக்கு எனக்கு கிடைச்ச கதி இதுதான். என்ர மூச்சு அடங்கிறவரைக்கும் இங்கைதான் கிடக்கப் போகிறேன். அந்த நேரம் நான் வந்து உழைச்சுப்போட்டு போயிருக்கவேணும். மனுசி பிள்ளையளெண்டு எல்லாரையும் இந்த நாட்டுக்குக் கூப்பிட்டு... குளிரடிச்சு படிப்பிச்சுவிட, பணத்துக்காக பாசத்தை விக்கிற மனிதாபிமானமேயில்லாத மரங்களாய் வளர்ந்து பெற்றவரையே அநாதையா ஒரு வேளை சோத்துக்கே வழியில்லாது அலைஞ்சுதிரியப் பண்ணிப் போட்டுதுகள்.''



இதற்குமேல் பேசமுடியாது பாலையா முற்றிலும் உடைந்து விட்டார். கைகளால் முகத்தை மூடியபடி விம்மிவிம்மி அழுதார். நான் அவசரமாக எழுந்துபோய் அலுவலகக் கதவை மூடினேன். ஆனால் வார்த்தையாலோ, செயலாலோ அவரை நெருங்கி எந்த ஆறுதலையும் சொல்லவில்லை. எந்தக் குறுக்கீடும் செய்யாமல் நான் அவரை அழவிட்டபடி என் கதிரையில் அமர்ந்தேன். பல நிமிடங்களுக்கு தன்னை இழந்து அவர் அழுதுகொண்டே இருந்தார். சூழல் எனக்கு மிகவும் கொடுமை யாகவே இருந்தது. அந்தச் சூழலில் என் வயதும் அனுபவக் குறைவும் மிகவும் திகைத்துப்போயிருந்தன. என்ன செய்வதென்று தெரியாது என் அறிவு மலைத்துப் போயிருந்தது. சில நிமிடங் களுக்குப் பிறகு பாலையா அவரைச் சுதாகரித்துக்கொண்டு விட்டார். அவசரமாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு அலுவலகக் கதவைத் திறந்து தனதறைக்கு விரைந்தார். சற்று நேரத்தில் முகத்தைத் தண்ணீரால் கழுவிவிட்டு துவாயால் துடைத்தபடி திரும்பி வந்தார். அலுவலகக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டார். என்னைச் சின்னப் புன்முறுவலுடன் பார்த்தார். மன்னித்துக் கொள்ளும்படி சொன்னார். ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் எதையெதையோ மனம் திறந்து கொட்டிவிட்டதாகச் சொன்னார்.

இந்த மாத வாடகையையும், சாப்பாட்டுச் செலவினையும் தந்துவிட்டுப் போக நாளை வரப்போகும் மகன் சிவராஜனிடம்

தான் சொன்ன எதையும் மறந்தும் ஒரு வார்த்தைகூடச் சொல்லிவிடக்கூடாது என்றும் அவர் கெஞ்சி கேட்டுக் கொண்டார்.

விடுதியிலிருக்க பெரியவர் பாலையாவுக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லைத்தான். ஆனால் அதை வாய் திறந்து மகனிடம் சொல்லவோ வீட்டுக்கு வந்துவிடுகிறேன் என்று கேட்கவோ அருக்குப் பிடிக்கவில்லை. அவருக்குள்ளும் ஒரு சுயமரியாதை இருக்கிறது. சுய கௌரவத்தை இழந்து எதையும் மகனிடம் கேட்க பாலையா தயாரில்லை. அவர் கேட்கவேண்டாம் என நினைத்து சிவராஜனிடம் அவர் சார்பாக நான் கேட்டாலும் அதற்கு எதிர்மறையான பலன்தான் இருக்கும் என்று பாலையா அபிப்பிராயம் சொன்னார். வேற்று மனிசர்களிடமெல்லாம் அவர், வீட்டுச் சங்கதிகளைச் சொல்லித்திரிவதாக அவரது மகன் பெண்டாட்டியிடம் போய்ச் சொல்வானாம். பிறகு அதற்கும் சேர்த்து மருமகள்காரி பெரிதாகப் பாடித் தள்ளுவாளாம். வேறு ஒரு செத்தவீடும் நடக்காதாம். அதனால் சிவராஜன் வரும்போது இன்றுதான் சொன்ன எதையும் மறந்தும் மூச்சுவிடவேண்டாம் என்று திரும்பத் திரும்ப கேட்டுக் கொண்டார். படுத்துக்கொள்ள விரிப்பை விரித்த நிமிசத்திலும் மறுபடி ஒருமுறை கேட்டுக்கொண்டார். எல்லாம் தன்னுடைய விதியென்று கூறி வரண்ட புன்முறுவல் செய்தபடி படுக்கையில் அன்று அவர் படுத்துக்கொண்டார். விளக்குகளை அணைத்துவிட்டு அலுவலகத்திற்குச் சென்று நானும் தூங்கிப் போனேன்.

தலைமாட்டில் அலாராம் உதறல் எடுத்து சமிக்கை செய்து எனது பணியை முடித்துக்கொள்ளும் காலை ஏழு மணியை நினைவுபடுத்தியது. எழுந்து ஒவ்வொரு விடுதி, அறைக் கதவுகளையும் தட்டி திறந்து காலை வணக்கம் சொல்லுதலை இறுதிப் பணியாக மேற்கொள்வது என் வழமை. அன்றும் அவ்வாறே செய்து வந்து எனது அலுவலப் பக்கமாயுள்ள பாலையாவின் அறைக் கதவைத் தட்டியபோது பெரியவர் பாலையாவினுடைய பதில்குரல் வராதுபோகவே கதவைத் திறந்து உள்ளே போனேன். மீண்டும் அழைத்தேன். பதில் வரவில்லை. போர்வையை விலக்கியபோது உடல் சில்லிட்டிருந்தது. மூக்கிலிருந்து உதிரம் வழிந்து முகத்தில் உறைந்து போயிருந்தது. என் நெஞ்சத்திலும் தான். ▌



# நிலையான வழிகாட்டுவோம்

அன்பாலே ஒன்றாகினோம்
ஆற்றாமை நீக்குவோம்
அறிவுச் சுடர் ஏற்றுவோம்
அறியாமை இருள் நீக்குவோம்

கலை கணணி பயில்வோம்
உயர் கல்வி தொடர்வோம்
கற்றவழி நாம் வாழ்ந்துமே
பெற்றோர்க்குப் பெருமை சேர்ப்போம்

வள்ளுவன் குறள்வழி நின்று
வையம் போற்ற வாழ்வோம்
அறத்தோடு இன்பம்
பொருளோடு வீடும்
என்று வழி வகுத்து வாழ்வோம்

அந்நியரின் பழக்கமதில்
அடிமையாகமல்
அசையாத மனங்கொள்ளுவோம்
நம் பண்பாடு தனைப்பேணி பெற்றோரின்
கனவுதனை
நனவாக மாற்றுவோம்

தடைகள் பல வந்தாலும்
தளராத மனங்கொண்டு
எதிர் நீச்சல் போடுவோம்
இடர்கள் பல நேர்ந்தாலும்
எடுத்திட்டஇலட்சியப்
பாதையை நோக்குவோம்

நாமழிந்து போனாலும் நமக்கென்று சிலபேரை
இன்றே நாம் உருவாக்குவோம்
பைந்தமிழர் பரம்பரைக்கு பழியேதும் வராமல்
அழியாத புகழ் நாட்டுவோம்
நிலையான வழி காட்டுவோம்.

- நிர்மலா பரராஜசேகரம்

# முயற்சி

- கோ. மஞ்சுளா

சிறுவர்களே! உங்களால் பல வெற்றிகளையும், சாதனைகளையும் செய்யமுடியும். எதையும் என்னால் செய்யமுடியும் என்று தன்னம்பிக்கையுடன் இரு! உறுதி கொள்! முயற்சி செய்! பின் நிற்காதே!
இதோ! உதாரணத்துக்குச் சின்னஞ் சிறிய கதையொன்று...

ஒரு பள்ளிச்சிறுவன் நடைபாதையிலே நடந்து செல்கிறான். அவனுக்கு கிட்டத்தட்ட 11 வயதிருக்கும். அவன் பாதையில் உள்ள கல்லைக் கவனிக்காமல் நடந்து செல்லும் போது கல்லிலே கால் தடக்கி விழுந்துவிடுகிறான். அவன் ஒரு நிமிடம் சிந்திக்கின்றான். இக் கல் என்னைத் தடக்கி விழ வைத்து விட்டதென நினைத்து தன்பாட்டில் சென்றிருக்கலாம். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. கல்லை அகற்றாமல் விட்டால் மற்றவர்க்கு ஏற்படும் பாதிப்பைப்பற்றி ஒருகணம் சிந்தித்தான். கல் அருகே சென்று சின்னஞ்சிறு பிஞ்சுக் கரங்களால் கல்லைத் தள்ளுகின்றான். கல் அசையவில்லை. இரண்டு, மூன்று தடவை முயற்சி செய்தும் எவ்வித பயனுமில்லை.

என்னால் இக் கல்லை அகற்ற முடியவில்லையே என்று மனச்சோர்வு அடையாமல், இதற்கு என்ன செய்யலாம் என்று யோசிக்கிறான். சுற்றிலும் பார்க்கிறான். உதவிக்கு எவரும் இல்லை. சிறிது தூரத்திலே ஒரு மரக்கட்டை அவன் கண்ணுக்குத் தென்பட்டது. ஓடிச்சென்று அக்கட்டையை எடுத்து வந்து கல்லுக்குக் கீழ் வைத்து நெம்புகின்றான். கல் இலேசாக அசைகிறது. கல் அசைகிறதென சந்தோசப்பட்டு மீண்டும் மீண்டும் முயற்சி செய்து, இறுதியில் அவன் கல்லை அகற்றி விடுகிறான். கல்தடக்கி விழாமல் பலரை தன் காப்பாற்றிவிட்டதாக நினைந்து ஒரு பெரும் போட்டியில் வெற்றிபெற்ற வீரனைப்போல் மகிழ்வுடன் வீட்டை நோக்கிச் செல்கிறான்.

பார்த்தீர்களா சிறுவர்களே! அச்சிறுவனின் முயற்சியை! அதேபோல் நீங்களும் வாழ்க்கையில் முயற்சி செய்து வெற்றி பெற வாழ்த்துகிறேன்!

## வாசக நெஞ்சங்களே!

*இப்பகுதி கருத்தாடலுக்கு உரியது. இப்பகுதியில் வரும் கட்டுரையின் கருப்பொருள் சார்பாக உங்கள் கருத்துக்களை வாதப் பிரதிவாதங்களாக முன்வையுங்கள். மாற்றுக் கருத்துக்களையும் வாதம் பிரதிவாதங்களுக்குரிய உங்கள் ஆக்கங்களையும் அனுப்பிவையுங்கள்.*

# கருத்தாடல்....

வீட்டில் வைத்து தமிழ் படிப்பித்த காலம் மலையேறிவிட்டது. பின்பு தனியார் நிறுவனங்கள் சில இப்பொறுப்பை ஏற்று நடாத்தின. இப்போது தமிழ்ப்பாடசாலைகள், சங்கீத, பரதநாட்டிய, நாடக வகுப்புகளென நிறுவனம் சார்ந்து வளர்ச்சிப் போக்கில் செல்கின்றமையைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. உலகத்தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் கீழுள்ள பாடசாலைகள் மட்டும் சுவிசில் எழுபதுக்கு மேற்பபட்டவை உள்ளன. இவற்றை விட தனிப்பட்ட பாடசாலைகளும் உள்ளன.

இப்படிப்பட்ட பல வசதிகள் இருந்தாலும் இங்குவாழும் அனைத்து தமிழ்ப்பிள்ளைகளும் தமிழ்பாடசாலைக்குச் செல்கிறார்களா? அப்படியாயின் பாடசாலை செல்லாத பிள்ளைகள் எல்லோரதும் எதிர்காலம் என்ன? இவர்கள் தாய் மொழி முகவரியை தொலைத்தவர்களா? இவர்களுக்கு தாய்நாட்டுப்பற்று இருக்காதா? இவர்கள் மொழியை பண்பாட்டைத் தொலைத்தவர்களாக கணிக்கப்படுவர்களா? அப்படியாயின் தமிழ் படிக்காத அல்லது கீழ்வகுப்புகளில் மட்டும் தமிழைப் படித்துவிட்டு நின்றுவிடுபவர்கள் அல்லது அவர்களது பெற்றோர்கள் என்ன கருத்தை சொல்கிறார்கள் என்று வினவினேன். இவர்களது கருத்துக்களினை அடிப்படையாக எடுத்துக் கொண்டே மேற்படி ஆய்வினை செய்ய வேண்டியது அவசியமாகும். தற்போதைய புலம்பெயர் சூழலில் பெற்றோர் ஆசிரியர், மொழி வளத் தேடலர்கள் அனைவருக்கும் இந்த ஆய்வு பொருந்தும். இப்போது களத்தில் இறங்கலாம்.

சுவிற்சர்லாந்தினைப் பொறுத்தவரை குறிப்பிட்ட வகுப்புக்களுக்குள் மூன்று மொழிகள் அவசியம் கற்கப்படல் வேண்டும். இந்த முயற்சியே பெரும் சுமையாக இருக்கிறது. (கனடாபோல் தமிழும் பாடசாலைப் பாடங்களில் ஒன்றாக சேர்த்துக் கொள்ளப் பட்டிருந்தால் அவசியம் கற்கவேண்டி அமைந்திருக்கக்கூடும்.)

புலத்தில் பாடசாலை போய்வருகின்ற பிள்ளைகளுக்கான வீட்டுப்பாடங்கள் (Hausaufgaben) நிறையவே. இவை எவரது உதவியுமின்றி செய்யப்படுவதற்கு போதிய நேரம் தேவைப்படுகிறது. இதற்கு பெற்றோர்கள் உதவமுடியாத துர்ப்பாக்கிய நிலையையும் இங்கு கருத்தில் கொள்ளவேண்டும். இந்நிலையில் மேலதிக வகுப்புக்களை ஒதுக்கினாலும் அதற்கென பிரத்தியேக நேரம் தேவைப்படுகிறது.

எதிலும் நேரடிப்பலன்களை எதிர்பார்க்க வேண்டிய தேவையுள்ளது. இயந்திரமயமான உலகின் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க எம்மை நாம்

## சிறார்களின் சிறப்பறிவோம்

– *தில்லை நந்தினி*

தயார்படுத்த கல்விப்போட்டி, தொழிற்போட்டி, நவீன பொருளாதாரத் தேடல் என்ற தளங்களில் அனைத்துப் போட்டிகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய நேர ஒதுக்கீடுகளில் தமிழ் படித்தலுக்கான தேவை தூரப்படுத்தப்பட்டு விடுகிறது.

மேலும் தாய்மொழிக் கல்வி அனேகமாக வாரத்தில் ஒருமுறை நடைபெறுவது போதுமானதாக இல்லை. வீடுகளில் வைத்துச் சொல்லிக்கொடுப்பதற்கும் பெற்றோருக்கு நேரம் போதுமானதாக இல்லாத வேலைச்சுமை.

இதனையும் மீறி பாடசாலைக்குச் சென்றாலும் 247 எழுத்துக்களை கற்றுக்கொள்வது கடினமானது என்பதற்கு அப்பால், தாங்கள் எப்படிக் கற்றார்களோ அதே பாணியில் பிரம்பும், மிரட்டலும், புதுவகையான கற்பித்தல் முறைகள் எதுவுமேயில்லாத ஆசிரியர்களின் வழிநடத்தல்கள் மொழியின் தேவையை மேலதிகமாக பயங்கரப்படுத்திவிடும் நிலமையுள்ளது.

மேலும் தமிழ் வகுப்புக்கள் நடாத்தப்படும் இடங்களில் போதியளவு வசதிகள் இருப்பதில்லை. இரண்டு வகுப்புக்களை ஒன்றாக

நடாத்துதல். அளவுக்கு அதிகமான பிள்ளைகளை ஒரே வகுப்பில் அமர்த்துதல், குளிர்காலங்களில் கூட சிறுபிள்ளைகளை நிலத்தில் இருத்தி வைத்துப் படிப்பித்தல் போன்றவையும் கவனிக்கதக்கவை.

பிள்ளைகளை அழைத்துச் சென்று வரவேண்டி இருப்பதால் சனி, ஞாயிறு வேலைகளில் உள்ளவர்கள், போக்குவரத்து வசதிக் குறைவானவர்கள் நிலமைகள் முடியாததாகிவிடுகிறது. இன்னமும் அனைத்து விசேட நிகழ்வுகளும் வார இறுதி நாட்களை மையப்படுத் தப்படுவதனல் பெற்றோர்களின் உதவியின்றி பிள்ளைகள் வகுப்பிற்கு செல்வதும் இயலாததாகி விடுகிறது.

*நாங்கள் தாய்மொழி அன்றி வேறெந்த மொழியும் தெரியாதவர்களாக வாழ்ந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இங்குவாழும் பிள்ளைகள் மூன்று நான்கு மொழிகளை தெரிந்து வைத்திருப்பது பிரமிப்புக்குரியதே. எங்களைவிட பல நாட்டவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய மொழி ஊடகத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமே.*

இன்னும் பிள்ளைகள் தமிழ் படிப்பதில் அக்கறை கொள்ளாத நிலமை மறுபுறத்தில் பெற்றோர்களது ஊக்குவிப்பில்லாத நிலமை போன்ற இன்னோரன்ன காரணங்கள் முன் வைக்கப்பட்ட நிலையில் இவையாவும் சூழல் தேவைகருதியே ஆய்விற்குட்படுத்திப் பார்க்கப் படவேண்டும். வெறுமனே இவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை வீசி எறிவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. ஏனெனில் மொழி என்ற வகையில் அதன் சிறப்பில் வைத்துப்பார்க்கையில் உண்மையில் மொழி ஒரு ஊடகமே. அப்படிப்பார்க்கையிலும் கூட நாங்கள் தாய்மொழி அன்றி வேறெந்த மொழியும் தெரியாதவர்களாக வாழ்ந்த காலங்களுடன் ஒப்பிடும் போது இங்குவாழும் பிள்ளைகள் மூன்று நான்கு மொழிகளை தெரிந்து வைத்திருப்பது பிரமிப்புக்குரியதே. எங்களை விட பல நாட்டவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய மொழி ஊடகத்தை அவர்கள் பெற்று இருக்கிறார்கள் என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமே.



***

## அறிந்து கொள்ளுங்கள்!
## **Kennen Sie!**

எறும்புகள் நாளென்றுக்கு எவ்வளவு நேரம் நித்திரை கொள்கின்றன?
Wie lange schläft eine Ameise täglich?



# ஏக்கம் எண்ணம்தான்

ஒரு குளத்தில் யானை ஒன்று ஆனந்தமாக குளித்து விளையாடியபடி இருந்தது. ''யானை யானை'' என்று தன்னை யாரோ கூப்பிடுவது கேட்டது. மெல்ல நிமிர்ந்து பார்த்த போது ஒரு எலி தன்னை நோக்கி கோபமாக வருவதை அது கண்டது. ''உடனே வெளியே வா'' என்று எலி மிரட்டியதைகேட்டு ஒன்றுமே புரியாது நீரை விட்டு வெளியேற எழுந்தபோது ''வேண்டாம் நீ போய் குளி'' என்று கட்டளை இட்டது எலி. யானைக்கு கோபம் வந்தது. ''என்ன என்னுடன் விளையாடு கிறாயா ஒரே நசுக்காய் நசுக்கிடுவேன்'' என்றது யானை. ''மன்னித்துக் கொள் என்னுடைய நீச்சல் உடையை காணவில்லை சிலவேளை நீ எடுத்துப் போட்டு இருப்பாயோ என்று நினைத்தேன்'' என்றது எலி.



- வ. தர்மின்

# தவிப்பு

யாதுமாகி
நாமாகி
நீயாகி விழித்தேன்

என் கைகளில்
உன் கண்கள்
முடியவில்லை
முற்றமில்லா செடிகளுக்குள்
மறைத்துவைக்க
பூக்கவில்லை
அழுகிமணக்கிறது

எங்கு தொலைக்க
கொத்திச்செல்ல
காக்கை குருவிகளில்லை

நீண்ட வருடங்கள்தான்
ஆனாலும்
தேயாத நிலவுகள் அவை

நீயும் கண்கள் போலத்தான்

ஏதோ ஒன்றிற்காய்
ஒற்றையடிப்பாதைகளில்
விழிகளைக் கொட்டிவைத்திருப்பாய்

அவைகளை இப்போ
முட்கள் மூடியிருக்கலாம்
அல்லது
நீண்ட இரும்புச் சப்பாத்துகளுக்குள்
நசுங்கிப்போயிருக்கலாம்

மிஞ்சிய
சில கண்கள் மட்டும்
என் கைகளில்

அவைகளைத் தொலைக்க வேண்டும்
அல்லது தூரத் தூக்கியெறிய வேண்டும்


அந்த விழிகளையும்
என் கால்களையும்
என்னால்
சுமக்கமுடியவில்லை

அதனால்தானோ
இப்போ தனியனாய்
இருப்பினும்
என் கைகளில்
இன்னும் உன் ஈரப்பசை

-சாமி சுரேஷ்

# மதிலோரச் சந்திப்ப

அன்று வெள்ளிக்கிழமை... ஓய்வாய் உட்கார்ந்திருந்த வேளை என் கண்களில் ஒரு சஞ்சிகை தட்டுப்பட்டது. எடுத்துப் பிரித்த வேளைதான் ''எடை போடுங்கள்'' என்ற தலைப்பு என்னை கவர்ந்திருந்தது. படித்தபோது என் மனதை வருத்திய அந்த நிஜத்தினை இளைய சந்ததியினரான உங்களிடம் பகிர்ந்து கொள்வதுதான் அந்த வேதனைக்கு கிடைக்கும் நல்ல மருந்து என்று தோன்றியது. என் மனதை வருத்திய அந்த சம்பவம் என்னவென்று நீங்களும் படித்துப் பாருங்களேன்.



அன்று வீசிய காற்றின் விசையை தாங்க முடியாத டொச்மொழிப் பத்திரிகை ஒன்று காற்றில் அகப்பட்டு மதிற்கரையோரமாகச் சென்றது. ஏற்கனவே அங்கே ஒதுக்கப்பட்டிருந்த தமிழ் தினசரிப் பத்திரிகை ஒன்றைக் கண்டு இறுமாப்புடன்
"வீ கோற்ஸ்?" என வினாவியது.
"குட்" என்று பதிலளித்த தமிழ் பத்திரிகை பதிலுக்கு
"உண்ட் செல்பர்?" என்று வினவ... ஒன்றும் கூறாது இருந்தது டொச் பத்திரிகை.

இதைக் கவனித்த தமிழ்ப் பத்திரிகை
"இந்தா பார்! நீ டொச் பத்திரிகை என்று பெருமை கொள்ளாதே. இது உனது தேசம். இதோ இங்கே தமிழன் டொச் பேசுகிறான். ஆங்கிலம் பேசுகிறான். தமிழ் பேசுகிறான். ஆனால் உமது நாட்டு மக்களுக்கு பெரும்பான்மையாக டொச் தான் தெரியும். இதை நீ கவனிக்கவில்லையா?" என்று கேட்டது.

டொச் பத்திரிகை சிரித்துக்கொண்டு
"இது இருக்கட்டும் ஒருபுறம். இப்போது இங்கு வாழும் தமிழ் மக்கள் உட்பட ஏனைய வெளிநாட்டவர் தம் தாய்மொழியை தம் பிள்ளைகளுக்கு போதிப்பது குறைவு. எனது நாட்டுக் குழந்தைகள் தங்கள் தாய்மொழியைச் சரளமாக எழுதப் பேச தெரிந்து வைத்திருக்கின்றனர். உமது நாட்டு குழந்தைகளோ தமிழ் கற்றால் அநாகரிகம் என்று டொச்சிலே கதைப்பதும் நகைச்சுவை கூறிச் சிரிப்பதும் எனக்குத்தான் தெரியும். இப்படி இவர்கள் பேசுவதைப் பார்த்து பெற்றோர்கள் எத்தனை ஆனந்தமடைகின்றனர் என்பதெல்லாம் உமக்கெங்கே தெரியப் போகிறது. எத்தனை பிள்ளைகள் பன்னிரண்டு வயதிலும் தமிழ் மழலை பேசுகின்றனர். தமிழ் வாய்க்குள்ளே நின்று சிக்குப் படுகின்றது. இதெல்லாம் எனக்குத் தெரியாததா? நீர் பெயருக்குத்தான் அன்னை மொழியாக இருக்கிறீர். உம்முடைய இடம் இனி எனக்குத் தான். பெற்றதாய், செவிலித்தாய் என்ற மாதிரி மொழித்தாய்களும் இருக்கப் போகின்றனர்" எனக் கூறி முடித்தது.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த தமிழப் பத்திரிகைக்கு ஆத்திரமும் அழுகையும் வந்தது. மௌனமாய் தலைகுனிந்தது தமிழ்ப் பத்திரிகை.

நன்றி - சு. பாக்கியநாதன்

---

*வீ கேற்ஸ்- எப்படி சுகம்*
*உண்ட் செல்பர்- உங்கள் சுகம்*

---

## மரபை மீறிய இசைஞர், கர்நாடக சங்கீத விதியையும் மீறலாம்...

தழுவல்களை மீறிய எனது இசையின் இன்றைய ஊற்றுமூலம் கவிஞர் புதுவை இரத்தினதுரை தான். கவிதைகளை மிக உணர்ச்சிவயப்பட்டு எழுதுவார். நேரிலும் பார்ப்பதுண்டு. எந்தச் சொல்லை, எந்த வரியை எவ்வித உணர்வு வேகத்துடன் எழுதுகிறார் என்பதை அவரது எழுத்தில் கண்டுகொள்வேன். எழுத்தில் எனும்போது வார்த்தைப் பிரயோகத்தில் அல்ல. அவர் வரிகளை எழுதுகின்றபோது, தாள்களில், பேனாவை எவ்வளவு ஆழத்தில் பதிக்கிறார் என்பதையே இங்கு குறிப்பிடுகிறேன். பேனாவை ஆழப்படுத்தும் முறைமை உணர்வுவெளிப்பாட்டைத் துல்லியப்படுத்தும் குறியீடாக அமைந்துவிடுகிறது.





எனது தந்தை ஒரு சங்கீதக்காரனாக இருந்தார். இருந்தும் நான் இசை பயில்வதற்குத் தடையாகத்தான் இருந்தார். நான் ஒரு டாக்டராகவோ, எஞ்சினியாராகவோ வரவேண்டும் என்ற யாழ்ப்பாணத்துக் கல்விச் சிந்தனை அவரிடமும் ஆழப்பதிந்திருந்தது. ஆகையினால் ஒழித்தும், மறைத்தும், இரகசியமாகவுமே எனது இசைக் கல்வி ஆரம்பமானது.

இவ்வாறுதான், இசைக்கும் தமக்கும் இடையிலான தொடக்கப்புள்ளி இருந்தது என்பதை மிகவும் லாவகமாக வெளிப்படுத்துகிறார் ஈழத்து இசைவாணர் கண்ணன் அவர்கள்.

# இசைவாணர் கண்ணனுடன்

------------- *ஒரு நேர்காணல்*

இவ்வாறு இன்றைய, அன்றைய தமது இசையனுபவத்தை மிகவும் சுவாரசியமாக வெளிப்படுத்துவார் என்பதை,-24.05.2003ல் அவரைச் சந்திக்கும் வரை- நாம் அறிந்திருக்கவில்லை. தமது இசைப் பயிற்சியை சினிமாப் பாடல்களுக்கூடாக ஆரம்பித்தபோதும், ஈழத்துப் பாடல்களுக் கூடாக தமக்கென்று ஒரு தனித்துவத்தைத் தக்கவைத்துக் கொண்டவர் திரு. கண்ணன் அவர்கள். இன்று சினிமா இசையையும், மெல்லிசையையும் மீறி போர்ச் சூழலுக்கேற்ப புதிய இசைகளைப் பிழிவதில் முனைப்புப் பெற்று விளங்குகிறார்.

மேலிதான உயரம், கறுப்புமின்றி சிவப்புமின்றி, வெள்ளையர் கூறும் சொக்லேற் கலர். நரைத்த முடி, சிரித்த முகம், விரிந்தமனம். இந்துமத, சைவசித்தாந்தத்தில் இருந்து சற்றுக் கரைந்துபோன ஆன்மீகப் பற்று.

விடுதலைப் போராட்டத்துடன் ஆன்மீகச் சித்தாந்தத்தை சங்கமிக்க வைக்கும் சிந்தனைத் திறன். இவற்றின் ஒன்றித்த வடிவமாக, பழுத்த அனுபவத்துடன் காணப்படுகின்றார் ஈழத்து இசைவாணர்.

சுமார் பத்து மணிக்கு வரவைத்து, வழக்கம்போல் ஒரு மணி நேர தாமதத்தின் பின் திரு.கண்ணன் அவர்களுடனான எமது சந்திப்பை ஊசியிலை சார்பில் மேற்கொண்டோம்.

1960களுக்கு முன்புவரை எமது கலைச் செயற்பாடுகள் பல (நாடகமாக இருக்கட்டும், இசையாக இருக்கட்டும்) இந்தியச் சினிமாவுடன் தொடர்புபட்டதாகவே இருந்தது. எனக்கு இசையில் பிரியத்தை ஏற்படுத்தியதில் ஆரம்பகால இந்தியச் சினிமாவுக்குப் பெரும் பங்குண்டு. ஆரம்பத்தில் எமது இசை வளர்ச்சிக்கு இந்திய இசைக் கலைஞர்களின் வருகை மிகவும் உதவியாக இருந்தமையை மறுப்பதற்கில்லை. ஆனால், காலப்போக்கில் அவர்களின் வருகை தடைப்பட்டமையே எமது வளர்ச்சிக்கும் உந்து சக்தியாக அமைந்தமையையும் குறிப்பிட்டாக வேண்டும். அதன் பின்பே ஈழத்து இசையில் தனித்துவமான முத்திரையைப் பதிப்பதற்கான காலமும் சூழ்நிலையும் உருவானது என்றால் பொய்யாகாது. ஆரம்பத்தில் ஒரு சிறிய இசைக்குழுவாக இருந்து, கோவில் திருவிழாக்களிலும், சனசமூக நிலைய ஆண்டு விழாக்களிலும், சிறிய சிறிய நிகழ்ச்சிகளிலும் சினிமாப் பாடல்களுடன் எமது இசைப் பயணத்தை ஆரம்பித்தோம். சில கால இடைவெளியில், ஒரு சில பாடல்களை நாமே இசையமைத்து இவ் விழாக்களில் பாட ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் வரவேற்பில்லாத நிலையும், இடையில் நிகழ்ச்சியைக் குழப்புகின்ற சூழலும் ஏற்பட்டிருந்தது. இவற்றை மீறி ஒன்றிரண்டாக ஈழத்து மெல்லிசைப் பாடல்களை அறிமுகஞ் செய்வதில் ஓரளவு வெற்றியும் பெற்றோம். எமது இம் முயற்சிகளைச் செவிமடுத்த இலங்கை வானொலிக்காரர்கள், எமது பாடல்களை ஆகாய வெளிகளில் தவழவிட்டனர். வானொலியில் எம்மைப் பயிற்றுவதற்கும் ஒழுங்கு செய்தனர். பலவித பரீட்சார்த்த முயற்சிகளுக்கும் இடமளித்தனர். கீழை, மேலைத் தேச இசைகளை இணைத்து அன்று மேற்கில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்த jazz இசையையும் சேர்த்து புதிய புதிய பாடல்களைப் பிரசவித்தோம். வானலைகளின் ஊடாக எமது பாடல்கள் சனங்களின் செவிப்பறைகளைத் தழுவியதோடு, அவர்களின் ரசிப்புத் திறனும் மேலோங்கியது.

இதே காலகட்டத்தில் பொப் இசையின் வருகையும் அதன் செல்வாக்கும் அதிகரிக்கத் தொடங்கியது. நாட்டின் பல பாகங்களிலும் இசை நிகழ்ச்சிகளும், பொப்பிசை நடனங்களும் மண்டபங்கள் நிறைந்த மக்களுடன் நுழைவுச் சீட்டுக்களை விற்று நிகழ்த்தப்பட்டன.

வெளியில் வெப்பநிலை எப்படி இருந்ததோ தெரியாது. ஆனால் மெல்லென வீசிய இளம் காற்று குளிர்ச்சியுடன் வெப்பத்தையும் குழைத்து தேகத்திற்கு இதம் சேர்த்துக்கொண்டிருந்தது. அப்போதுதான் சிறிது நேரம் இசைவாழ்வுடன் கலந்த அவரது சொந்த வாழ்வைத் தரிசிக்க முற்பட்டோம். "எதிர்பார்ப்புகள் அற்ற செயற்பாடுதான் எனது உயர்ச்சிக்குக் காரணம். இசைக்கான எனது வாழ்வியல் அர்ப்பணிப்பின் இன்னொரு வார்ப்புத்தான் எனது மகன் முரளி" இச்சந்திப்பதில் கண்ணனின் இசையா, முரளியின் இசையா என்று திண்டாடுமளவுக்கு முரளியின் இசைத் திறன் இருப்பதை விபரித்தோம். தொடர்ந்து...

"போராட்டச் சூழலில் எல்லோர்க்கும் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்னையும் ஆட்கொண்டிருந்ததுதான். ஆனால் துணிந்து முகங்கொடுத்தேன். மனதில் தாக்கத்தை உண்டுபண்ணும் அளவுக்கு நான் சோர்ந்துவிடவில்லை. பற்றறு நிலைக்குட்பட்ட எனது ஆன்மீக வாழ்வும் இதற்கொரு காரணம்."

மீண்டும் இசைக்குள்...
சமூக விழிப்புச்சார்ந்து விடுதலைப் பாடல்கள் பலவற்றிற்கு 80களின் ஆரம்பத்தில் இசையமைத்திருக்கிறேன் என்றவர் வி.எம்.குகராஜா, முருகையன், மௌனகுரு ஆகியோரின் நாடகங்களிலிருந்து மண்சுமந்த மேனியர் வரையிலான நாடகங் களுக்கான தமது இசை அனுபவத்துடன் எம்மையும் இணைத்துக்கொண்டார். நாடகத் தில் தனிவாத்தியத்தின் முக்கியத்துவம் பற்றி யும் விளக்கினார். உதாரணத்திற்கு ஆர்மோனியத்தின் உண்மைச் சுவையை கீபோட்டில் பிரதிபலிக்க முடியாது. ஆனால் 25 வயலின், 10 கிற்றார் என்று கூட்டாக தனி வாத்தியத்தைப் பிரயோகிக்கும் அளவுக்கு நாம் வளர்ச்சியடையவில்லை. புல்லாங்குழல் இசைஞர்கள் எம்மிடம் அரிது. சிங்களக் கலைஞர்கள் மூலம்தான் எம்மவர்க்கும் புல்லாங்குழல் பழக்கவேண்டியநிலை என்று இசையில் எமது வறுமையைப் பற்றி வேதனையுடன் விவரித்துச்சென்றார்.



படங்களுக்கு இசையமைத்தது பற்றி...

"போராட்டச் சூழலில் தயாரிக்கப்பட்ட பல குறும்படங்களுக்கு இசையமைத்திருக்கிறேன்." படத்தில் தீமுக்கு— கருவுக்கு ஏற்ப இசையை நகர்த்திச் செல்வதில் உள்ள முக்கியத்துவம் பற்றி சுவைபட விளம்பினார்.

இச்சந்தர்ப்பத்தில் தேனீரைச் சூடாக அருந்திவிட்டு, கர்நாடக சங்கீதத்தை மீறி இசையமைப்பது பற்றிய வினாவுக்குள் நுழைந்தோம். "எமது இசையின் பிறப்பே கர்நாடக சங்கீதத்தை உடைத்துத்தான் வெளியேறுகிறது. உணர்வையும், சூழலையும் வெளிப்படுத்தும் வகையில் கர்நாடக சங்கீத மரபை மீறுவது இயல்பு. மரபை மீறுவது வேறு. அழிப்பது வேறு. ஆனால் எங்கே, எப்படி, எதற்காக மீறுகின்ற விடயம் இசையமைப்பாளருக்குத் தெரிந்திருக்கவேண்டும். இல்லையேல் பெருவீதியில் நடை பயிலும் நிலைதான். இன்னொரு புறத்தில் இது மீறல் அல்ல, உணர்வுகளின் அடிப்படையில் மேவிச் செல்லல் என்றுதான் கூறவேண்டும்."

மெல்லிசை என்றால் என்ன என்று வினாவியபோது... செவ்விசை - classical- என்பது பாரம்பரிய இசை என்றும், சேர்ப்புச் செவ்விசை-semi classical- என்றும், மெல்லிசை -light musical- என்றும், சினிஇசை – cini musical- சினிமா இசை என்றும் மொழிபெயர்த்து கூறிய விடயங்களுடன் எமக்கு இசைகளின் வகை பற்றிய விழிப்பை ஏற்படுத்தும் பல விளக்கங்களைக் கொடுத்தார்.

இசையின் வளர்ச்சிப்போக்குப்பற்றிக் கூறுகையில்... கர்நாடக சங்கீதத்துறை வளர்ச்சியடைந்திருப்பதையும், இசை பற்றிய விருப்பும், விழிப்பும் மேம்பட்டிருப்பதையும் மிகுந்த மனமகிழ்வுடன் கூறிய இவர், மெல்லிசைத்துறை பெருமளவில் வளர்ச்சியடையவில்லை என்பதை ஈழத்து மெல்லிசைத் துறையின் தந்தைக்குரிய சோகத்துடன் வெளிப்படுத்தியமை எமது உள்ளத்திலும் முள்ளாய்ப் பாய்ந்தது.

மேற்கு நாடுகளில் பொதுவாகக் கலைஞர்கள் கலைக்காக வாழ்கின்றார்கள். இசைக்காகவே வாழுகின்ற இசைஞர்கள், இசை முனிவர்களாகக் காணப்படுகிறார்கள். எமது நாட்டில், வி.வி.வைரமுத்து போன்ற ஒருசிலரைத் தவிர விரல்விட்டு எண்ணக்கூடியளவுக்குக்கூட கலைஞர்கள் இல்லை. ஏன் இந்த வறுமை...? கவலையும், சிரிப்பும் பீறிட ஆதங்கத்துடன் ஆரம்பித்தார். பொருளாதார நிலைமை என்று தொடங்கியவர் எமது சமூகச் சூழலுக்கூடாகத் தமது பார்வையைச் செலுத்தினார். சிங்களப் பகுதியில் தொழில்ரீதியான கலைஞர்கள் வளர்ச்சிடைந்த அளவுக்கு, தமிழ்ச் சமூகத்தில் இல்லை. கலைக்காக வாழ்வை அர்ப்பணிக்கும் அளவுக்குச் சமூக மனோபாவம் வளரவில்லை. கலையைத் தொழிலாகச் செய்வதற்குரிய சமூக அங்கீகாரம் இன்னும் கிட்டவில்லை.

இன்று, இசைத்துறை நாடக அரங்கியல் என்று மாணவர் முகங்கள் நீள்கின்றன. ஆனால் இதுகூட ஒருவித கல்விலாப நோக்கில்தான். விதிவிலக்காக ஒருசில மாணவர்கள் ஆத்மார்த்தமான கலைப் பயணத்தைத் தொடர்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. சுருங்கக் கூறின்
"கூத்தாடுவதும் குண்டிநெளிப்பதும்
ஆத்தாதவன் செயல்"
என்ற மனவெளிப்பாட்டின் சொந்தக் காரர்களாகவே இன்னும் யாழ்பாணச் சமூகம் காணப்படுகிறது என்று சிரிப்பொலி ததும்பக் கூறிய அவரது வார்த்தைகளின் கடைக் கண்ணில் கேலிப்புன்னகை புரையோடிக்கிடந்தது.

## தமிழ் எண்கள்

1. க
2. உ
3. ங
4. ச
5. ரு
6. சா
7. எ
8. அ
9. கூ

10. க0
100. க00
1000. க000
3/4. ளு
1/2. இ
1/4. வ

# இலவசம்!!!

நீங்கள் 16 வயதிற்கு உட்பட்டவரா? ஆம் எனில்...

கீழே இடது பக்க நிரலில் காணப்படும் சொற்களுக்குப் பொருத்தமான பதங்கள் (சொற்கள்) வலது புறத்தில் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. பொருத்தமான சொற்களை இணைத்து கோடிட்டு அதன் பிரதியை 31.03.04 திகதிக்கு முன்பாக அனுப்பிவையுங்கள். சரியான பதிலைத் தந்தவர்களுக்கு ஒரு வருட ஊசிஇலை இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

## மனிதர்கள் இப்படி இருந்தால்...

| | |
|---|---|
| அறத்தில் | தமிழ் நெஞ்சம் |
| அன்பில் | ஆழம் |
| அறிவில் | உறுதி |
| ஆக்கத்தில் | துணைநிலை |
| ஆராய்ச்சியில் | நடுநிலைமை |
| இல்லறத்தில் | தெளிவு |
| உண்மையில் | செருக்கின்மை |
| உழைப்பில் | ஓய்வின்மை |
| கொள்கையில் | நம்பிக்கை |
| செல்வத்தில் | சால்பு |
| தமிழில் | துறவு |
| பண்பில் | நெகிழ்வு |
| பதவியில் | முதன்மை |
| புரட்சியில் | பகட்டின்மை |
| புலமையில் | விருப்பின்மை |
| துன்பத்தில் | உயிர்ப்பு |
| விளம்பரத்தில் | ஊக்கம் |



தொகுப்பு:- இணுவையூர் ஷர்மா

# நான்
# ஒரு உடைந்த குடை

இப்போது நான் ஒரு உடைந்த குடையாக இருக்கிறேன். நான் பல கம்பிகளாலும் பல வண்ணத் துணிகளாலும் அமைக்கப்பட்டேன். எனக்கு ஒரு நண்பன் இருக்கிறான். அவனும் பல கம்பிகளாலும் பல வண்ணத் துணிகளாலும் அமைக்கப்பட்டான். என்னையும் எனது நண்பனையும் ஒரு கடைக்குப் புகைவண்டியில் எடுத்துச் சென்றனர். எல்லோருக்கும் என் மேலும் என் நண்பன் மீதும் ஆசை உண்டு. ஆனால் என்னை எவரும் வாங்குவதில்லை. ஏனென்றால் நான் மிகவும் விலை உயர்ந்த பொருள் என்பதால். ஒரு நாள் எனது நண்பனை ஒருவர் வாங்கிச் சென்றார். அடுத்தநாள் என்னையும் ஒருவர் வாங்கிச் சென்றார். என்னை வாங்கிச் சென்ற சிறுவன் எப்போது மழை வரும் என்று காத்துக்கொண்டு இருக்கும்போது ஒரு நாள் புயலுடன் மழை பெய்தது. அவன் என்னை விரித்துச் சென்றபோது புயல் என்னை மோதியது. நான் உடைந்த குடையாக மாறிவிட்டேன். தூக்கி கிடங்கில் போட்டனர். என்ன ஆச்சரியம்! அந்தக் கிடங்கில் எனது நீண்டகால நண்பனும் கிடந்தான்.

- ர. ரமியா (10)

"கண்ணில் ஒன்றை குத்திக் காட்சி கொடுத்தல் தகுமோ" என்றான் பாரதி. இரண்டு கண்களுமே அவசியம்தான்.

பாரதி திரைப்படம் பார்த்தவர்களுக்கு அது புரியும். மனைவியை ஏன் அழைத்து வரவில்லை எனறு வெள்ளைக்காரப் பெண்மணி கேட்டபோதே பாரதியின் பதிலில் அது வெளிப்பட்டது.

அன்றைய நிலையில் அது பெண்ணின் செயற்பாடுகளிற்காகச் சொல்லப்பட்டது. அன்றைய சூழலில் பாரதியால் இந்தக் கவிதையை எழுத முடிந்தது.

*நிலவுக்குப் பயந்து பரதேசம் போகமுடியுமா?*

அதற்காக பாரதியார் கூறவில்லை ஆண்குழந்தைகளைக் கவனியாது அறிவைப் போதியாது விட்டுவிடாதீர்கள் என. பெண்ணின் பெருமையை உணர்த்த பெண்ணின் திறமையை உணராத மனிதருக்காகப் பாடப்பட்டதே அது.

எமக்கு இரண்டு கண்களும் அவசியம். அதில் ஒன்று ஆண்குழந்தையாகவும் மற்றையது பெண்குழந்தையாகவும் இருக்க வேண்டுமே அன்றி இரண்டு

# கண்ணில் ஒன்றைக் குத்தி...



- நளாயினி தாமரைச்செல்வன்

கண்களும் பெண்குழந்தையாகவோ அன்றி ஆண்குழந்தையாகவோ இருக்கவேண்டும் என்று பொருளல்ல.

*புலம்பெயர் பெற்றோரில் பெரும்பாலானோர் பெண் குழந்தைகளில் அதிக கவனத்தை செலுத்துவதால் சிலவேளை ஆண் குழந்தைகளை கவனியாது விடுகிறார்கள். காரணம் அவன் ஆண் எப்படி வேண்டும் ஆனாலும் வாழலாம் என்கின்ற கோட்பாட்டை இன்றுவரை கடைப்பிடிப்பதால்.*

ஆனால் புலத்தில் புறச்சூழலால் பெரிதும் பயந்து பெண்குழந்தைகளின் மேல் அதிக அக்கறையும் அவளை எந்த வகையிலாவது நன்றாகப் படிப்பிக்கவேண்டும் என்கின்ற நிலையில்தான் அனேக பெற்றோர்கள்.

அதைவிட சிலர் கல்வியை இடைநிறுத்தி இளவயதில் திருமண பந்தத்துள் புகுத்தி விடும் நிலையும் உள்ளது. நல்லதைச் செய்கிறோம் என நினைத்து பெற்றோர் மீண்டும் பேரழிவுகளை குழந்தைகளின் மனவெளியில் உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

நிலவுக்குப் பயந்து பரதேசம் போகமுடியுமா?

கல்விமுறை பலதையும் அவர்களிற்கு போதிக்கிறது. அதற்கு ஏற்ப பெற்றோரும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தனித்து புலத்தில் மட்டும் தான் கல்விமுறை பலதையும் வெட்ட வெளிச்சமாக்குகிறது என நினைக்கத் தேவையில்லை. எங்கும் இதே நிலைதான். சினிமாவில் இருந்து

தொலைக்காட்சி வரை எல்லாமே வாழ்வியலின் மறைவுப்பகுதியை வெளிச்சம் போட்டு காட்டுகின்ற உலகம் இது.

வீதியில் போகிறோம். இருவர் முத்தமிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காக குழந்தையின் கண்களை மூடவா முடியும். எத்தனை நாட்களுக்கு மூடப்போகிறோம்? அதன் நன்மை தீமைகளை எடுத்துச் சொல்ல வேண்டியவர்காளாக இருக்கிறோம்.

இந்த பயங்களின் காரணமாக பெண்குழந்தைகளிற்கு அதிக பாதுகாப்பு என்கின்ற போர்வையில் பெண் குழந்தைகளின் உணர்வுகளிற்கு மதிப்புக் கொடாது தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயல்வதை காணக்கூடியதாக உள்ளது.

பெற்றோரின் இத்தகைய செய்கைகள் குழந்தைகளின் மனவெளியில் அத்துமீறலை உருவாக்கும் என்பதே உண்மை.

ஒரு காலத்தில் ஈழத்தில் மிகவும் கட்டுப்பாடாக வளர்ந்த பெண் குழந்தைகள் காதலித்து திருமணம் செய்ததையும் தாய் தந்தையருக்கு தெரியாமல் காதலனோடு ஓடிச் சென்று வாழ்ந்ததையும் நாம் மறந்து விட முடியாது. இத்தகைய செயல்கள் சில சமயம் புகலிடத்திலும் ஏற்படலாம்.

புகைபிடித்தல் உடல் நலத்திற்கு கேடு என்று கூறினால் மட்டும் போதாது. அதன் பாதிப்புக்களை எடுத்து சொல்ல வேண்டியவர்களாக உள்ளோம். இன்றுதானே அத்தனைக்கும் படங்களோடு கூடிய விளக்கங்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றை அவர்களின் மனக் கண் முன் கொண்டுவர வேண்டியவர்களாக உள்ளோம். எதையும் காதால் கேட்பதை விட தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்க்கும் போது அதன் தாக்கம் அதிகமாகும்.

உலக நடவடிக்கைகளை அன்றாடம் காணும் காட்சிகளை வைத்து அழகுற அன்பாக மிகவும் மென்மையாக மெது மெதுவாக அவர்களுக்குப் புரியவைக்கும் கடமை பெற்றோரையே சார்ந்ததாகிறது.

அதற்காக ஒரே நாளில் எல்லாவற்றையும் போதித்துவிட முடியாது. மெது மெதுவாகத் தான் அவர்களின் மனவெளியில் பதியும். பதிக்க முடியும். ஒரேயடியாக புரியவைத்தால் அவர்களுக்கு ஒரு பயத்தைக்கூடத் தோற்றுவிக்கலாம்.

புலம்பெயர் பெற்றோரில் பெரும்பாலானோர் பெண் குழந்தைகளில் அதிக கவனத்தை செலுத்துவதால் சிலவேளை ஆண் குழந்தைகளை கவனியாது விடுகிறார்கள். காரணம் அவன் ஆண் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்கின்ற கோட்பாட்டை இன்றுவரை கடைப்பிடிப்பதால்.
பாவம் அந்த ஆண்குழந்தையும் ஒரு நற்பிரஜையாக வாழ வழி என்ன? அந்த ஆண் குழந்தையையும் அழகாக உங்கள் கண்ணில் ஒன்றாக கவனியுங்கள்.
கண்ணில் ஒன்றை குத்தி காட்சி கொடுத்தல் தகுமோ?

***

# சூரியக் குடும்பம்

சூரியனையும் அதன் ஒன்பது கோள்களையும் நாங்கள் சூரியக் குடும்பம் என்று கூறுகிறோம்.
சூரியன் ஒரு நெருப்புக்கோளம். அதன் வெப்பநிலை 15000000 kelvin. அதன் விட்டம் 4392000 km. சூரியக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றைய ஒன்பது கோள்களும் வான் வெளியில் சூரியனை ஒரே வட்டப்பாதையில் சுற்றி வருகின்றன.


புதன் (**Merkur**)
முதலாவது கோள் புதனாகும். அது சூரியனில் இருந்து 57900000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அதன் விட்டம் 4898 கிலோமீற்றர். அதற்கு சந்திரன் இல்லை.

வெள்ளி (**Venus**)
வெள்ளி இரண்டாவது கோள். வெள்ளி சூரியனில் இருந்து 108 200 000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அதன் விட்டம் 12041 கிலோமீற்றர். அதற்கும் சந்திரன் இல்லை.

பூமி (**Erde**)
நாம் வாழும் பூமியின் விட்டம் 12750 கிலோமீற்றர். பூமி சூரியனில் இருந்து 144700000 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதற்கு ஒரு சந்திரன் உண்டு. இது மூன்றாவது கோள்.

செவ்வாய் (**Mars**)
செவ்வாய் நான்காவது கோள் ஆகும். இது சூரியனில் இருந்து 227900000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதன் விட்டம் 6778 கிலோமீற்றர். இதற்கு இரண்டு சந்திரன்கள் உள்ளன.

வியாழன் (**Jupiter**)
இது கோள்களில் மிகப் பெரியது. அதன் விட்டம் 1042700 கிலோமீற்றர் ஆகும். வியாழன் சூரியனில் இருந்து 778000000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதற்கு நான்கு பெரிய சந்திரன்களும், பன்னிரண்டு சிறிய சந்திரன்களும் உள்ளன. வியாழனுக்கு மெல்லிய வளையமும் இருக்கிறது.



சனி **(Saturn)**

சனியின் விட்டம் 1021000 கிலோமீற்றர் ஆகும். அது சூரியனில் இருந்து 1426000000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. அதற்கு ஐந்து பெரிய சந்திரன்களும் பதினெட்டு சிறிய சந்திரன்களும் உண்டு. அதற்கு நிறைய வளையங்கள் உள்ளன.

யூரேனுஸ் **(Uranus)**

யூரேனுஸின் விட்டம் 52 000 கிலோமீற்றர் ஆகும். இது சூரியனிலிருந்து 2867000000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. யூரேனுஸ்ஸிற்கு நான்கு பெரிய சந்திரன்களும் பதினொரு சிறிய சந்திரன்களும் உண்டு. இதற்கு சிறிய வளையம் உண்டு.

நெப்தியூன் **(Neptun)**

நெப்தியூனின் விட்டம் 44600 கிலோமீற்றர். சூரியனில் இருந்து 4490000000 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதற்கு நான்கு வளையங்கள் உண்டு. நெப்தியூனுக்கு இரண்டு பெரிய சந்திரன்களும் ஆறு சிறிய சந்திரன்களும் உள்ளன. நெப்தியூன் எட்டாவது கோள் ஆகும்.

புளுட்டோ **(Pluto)**

புளுட்டோ சூரிய குடும்பத்தில் சிறியதும் கடைசியாகவும் இருக்கும் கோள். விட்டம் 3000 கிலோ மீற்றர் ஆகும். சூரியனில் இருந்து 5910000000 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறது. இதற்கு ஒரு சந்திரன் உண்டு.

இதுவரை பூமியைத் தவிர வேறு கோள்களில் உயிரினங்கள் வாழ்வதாக அறியப்படவில்லை.

- த.ஜான்சி (11) + த.ஜஸ்மி (11)

கெட்டவரிடமும் நல்லவரிடமும்
இரக்கம் காட்டுவர் மலர் போல
உள்ளம் உடையோர்.

மலர்கள்

மலர்களிடம் யார்
இரக்கம் காட்டுகின்றார்கள்

மலர்கள்

நாம் மனிதர்
அந்த அழகான மென்மையான
நறுமணம் கொண்டமலர் பறித்து
அதன் உயிரை
வீணாக்குகின்றோம்

மலர்கள்

ஒவ்வொரு நிகழ்வுக்கும்
மலர் தேவையா
மலர் இல்லாமல் திருமணம்
பூப்புனித நீராட்டுவிழா என்னும்
பல நிகழ்வுகள் நடைபெறா

மலர்கள்

மலர் பலவித இனங்கள்
பலவித மணங்கள்
பலவித நிறங்கள்
பலவித வடிவங்கள் கொண்டது
அந்த மலரை வீணாக்காதீர்
என் போன்ற மனிதர்களே!

மலர்கள்

- க. துஷாந்தினி (15)

# தமிழை நன்றாகக் கற்போம்

*நாம் ஏன் தமிழ் படிக்க வேண்டும்?* நாங்கள் தமிழர் அல்லவா. எங்கள் தாய்மொழி என்ன? தமிழ் அல்லவா. எமது தாய்மொழியை விரும்பிப் படிக்க வேண்டும் அல்லவா. எமது தாய்மொழியைப் பேச, எழுத, வாசிக்க எமக்கு தெரிந்து இருக்கவேண்டும். தமிழை விரும்பிப் படிக்கா விட்டால் என்ன நடக்கும்? எங்கள் தாத்தா, அம்மம்மா, பாட்டி என்று எமது உறவினர்களுடன் கதைக்க முடியாது. அவர்களுக்குக் கடிதம் எழுத முடியாது. அவர்கள் எழுதும் கடிதங்களை நாங்கள் வாசிக்கவும் முடியாது.

இதை விட இந்த நாட்டில் வாழும் மக்கள் எங்களைப் பார்த்து எங்கள் தாய் மொழி எது என்று கேட்டால் தமிழ் என்று சொல்வோம். அதை நன்றாக பேசுவீர்களா எழுதுவீர்களா வாசிப்பீர்களா என்று கேட்டால் இல்லை எமக்குத் தெரியாது என்று சொன்னால் எவ்வளவு வெட்கம். ஓம் எனக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்ல, தமிழை நன்றாகப் படிக்கவேண்டும். நாங்கள் தமிழை விரும்பிப் படித்தால்தானே எமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கலாம்.

- கு. பிரியங்கா (8)

"என்ன தேடிக் கொண்டிருக்கிறாய் அண்ணன்"

" அது ஒண்ணுமில்லயடாப்பா. நானும் பிள்ளைகளும் இதில பனிக்குள்ள விளையாடிக்கொண்டு நிண்டனாங்கள். பிள்ளயள் அந்தா..... அங்க நடந்து போய்க்கொண்டிருக்கினம். ஆனா அவயும் நானும் நடந்த காலடிகள் இதில சும்மா கிடக்குது. அட எங்கட காலடிகள் போகுது வயசு போனதுகள். பிள்ளைகளின்ரை யெண்டாலும் எடுத்து சேமிச்சு வைப்பம் எண்டுதான் தேடிக் கொண்டிருக்கிறேன்."

" விசர்க்கதை கதைக்கிற போனதுகள் போனதுதான். திரும்பப் பொறுக்கிக் கொண்டிருக்க முடியுமே"

# பனிப்பூக்களைத் தேடும் சூரியக் கரங்கள்

-சாமி சுரேஷ்

" நீதான் விசர்க்கதை கதைக்கிற. அப்ப சும்மா விடச் சொல்லுறியே"

" எனக்குத் தெரியேல்ல என்னெண்டாலும் செய்"

சொல்லியவாறே என் பதிலுக்குக் காத்திருக்காமல் அவன் போய்விட்டான். இப்ப கொஞ்ச நாளா நான் ஏதோ மாற்றத்துக்குள்ளாகி வாறன் போல இருக்கு. என்னண்டு தெரியேல்ல. ஆனா எனக்குள்ள ஒரு கேள்வி ஓடிக்கொண்டிருக்குது. ஏன் இதுகளை எடுத்து சேகரிக்ககூடாது. எடுத்து வைச்சா பின்னுக்கு உதவாதோ.

என் கைகால் எல்லாம் விறைக்கத் தொடங்கி விட்டது.எவ்வளவு நேரம் தேடிக்கொண்டிருக்கிறன். ஒண்டையேதும் பொறுக்க முடியேல்ல. இந்தக் குளிருக்குள்ள அதுகள் எவ்வளவு தூரம் நடந்து போயிற்றுதுகள். என்னால



ஒண்டைக்கூட ....... சீ.... என்ன ஆள் நான்........... அல்லது நான் செய்யிறது பிழையோ. எல்லா தகப்பன்மாரும் என்னைப்போல் இருப்பினமோ. பிள்ளையளின்ற காலடிகளை எடுத்து வைச்சா பின்னுக்கு, அவர்கள் வளர்ந்த பிறகு காட்டலாமெல்லே. எங்கட அப்பாமார் விட்ட பிழைய நாங்கள் விடக்கூடாதெல்லே.

குழந்தைகள் நடந்து போய்க்கொண்டிருந்தனர். காலடிகளும் அவர்கள் பின்னால் கொட்டிக் கொண்டேயிருந்தன.

எப்பயிருந்து இந்த யோசனை வந்தது. யோசித்துப்பார்த்தன். ஒருநாள் ஒரு இடத்தில் போய் ஒரு தமிழ்ப்பெடியனிட்ட விலாசத்தக் காட் டிக்கேட்டன்.

''தம்பி இந்த இடத்தில, இந்த தமிழ் ஆள் எங்க இருக்கிறார் தெரியுமா?''

''எனக்கு தெரியாது நான் தமிழ் ஆக்களோட பழகிறதில்லை. தனிய சுவிஸ் நண்பர்கள் தான். அதனால எனக்கு தெரியாது.''

அந்தப் பொடியன் தொடர்ந்து சொல்லிப்போட்டு தன் வழியே போய்க்கொண்டிருந்தான். அதுக்கும் பிறகு எனக்கு ஒரே யோசனை தான். அன்றிரவு திடீரென எழும்பி எதையோ தேடிக்கொண்டிருந்தன்.
அப்போ மனைவி கேட்டாள்.

"என்னப்பா தேடுறீங்கள்"

"இல்லையப்பா இரவு 2,3 கனவு கண்டனான். அதில ஒன்றையாவது எடுத்து வைப்பம் எண்டு தேடுறன் ஒன்றையும் காணேல்ல "

அவள் ஒன்றும் சொல்லவில்லை.என்னைப் பார்த்து ஒரு சின்ன புன்முறுவல் செய்து போட்டு திரும்பிப்படுத்துவிட்டாள். அன்றிரவு ஒரு கனவும் கிடைக்கேல்ல தோல்விதான் மிச்சம். தேடிக் களைச்சுப்போய் நானும் படுத்துவிட்டேன்.

இப்படித்தான் ஏதோ ஒன்றை தேடுறதும், பிறகு தோல்வியில திரும்புறதும்... இப்படியே ஒவ்வொண்டா விட்டுத்தொலைச்சுப் போடுவனோ... இல்லை.. தேடுறவரைக்கும் தேடிப்பார்ப்பம். கிடைக்கிறதை எடுத்து வைப்பம். இல்லாவிட்டால்... என்ன செய்வது தொடர்ந்து தேடிக் கொண்டிருப்பம்.

ஒரே யொரு காலடி கிடைச்சது என்ர மூத்த மகளின்ற காலடி. 13 வயதாகிறது. ஈழத்தில பிறந்தவள். இங்க வந்து இப்பதான் முன்று வருடம் கொஞ்சம் பெரிய காலடி எண்டபடியால் கெதியா கண்டுபிடிக்க கூடியதாக இருந்தது. எடுத்து வைத்துக்கொண்டேன். சமயத்திற்கு உதவும். இதுகளை வைக்காவிட்டால் அண்டைக்கு கண்ட கனவு போல எல்லாம் காணாமல் போய்விடாதோ.

அன்று ஒருநாள் இப்படித்தான் நண்பர் ஒருத்தர் சொன்னார்.

நான் கேட்டேன்
"உங்கட மகன் இப்ப நல்லா வளர்ந்திருப்பார். கன நாள் காணேல்ல. இப்ப என்ன Beruf செய்கிறார்".

உடனே அவரின்ர முகம் வாடிப்போய் விட்டது.





"ஒண்டுமில்ல தம்பி, படிக்கிற காலத்தில சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் வேலைக்குப்போனான். கையில் கொஞ்ச காசு சேர்ந்த பிறகு அவன்ர போக்கு எல்லாம் மாறிப் போச்சு. இப்ப இடையில படிப்பை குழப்பிப்போட்டு வீட்டில சும்மாதான் இருக்கிறான்.கெட்டசகவாசம் வேற. ஒரு நாள் கோபத்தில சொன்னன் சரி ஒண்டும் செய்யவேண்டாம். பெத்த கடனுக்கு உனக்கு நான் சோறு போடுறன். நீ வீட்டுல ஒழுங்கான பிள்ளையா இரு."
சொல்லிவிட்டு அவர் போய்விட்டார்.
அவர் இப்படிச் சொல்லுவார்என்று நான் எதிர்பார்க்கேல்லை. இவர் முதலே சில காலடிகளை, கனவுகளை எடுத்து சேர்த்து வைத்திருந்தா பின்னுக்கு உதவியிருக்குமோ.

குளிரில கையும் காலும் சரியாக் குத்த தொடங்கிவிட்டது. பிள்ளைகளைப் பார்த்தேன். அவர்களைக் காணவில்லை. அவர்கள் தூர தூரமாய் போய்விட்டார்கள். நான் இன்னும் அதே இடத்தில் காலடிகளை தேடிக்கொண்டிருந்தேன்.■

Beruf- தொழிற்கல்வி



விளையும் பயிர்:
க.நிருஜன்(10)





விளையும் பயிர்:
J.சசினா(8)

# அலைபாயும் எண்ணங்கள்

-திடலூரர் ஞானி-

இங்கிருக்கப் பிடிக்கவில்லை
இங்கிலீசு மொழியுமில்லை
நாடோடிப் பார்ப்பதற்கும்
நாலுடன் கலப்பதற்கும்
இங்கொன்றும் ஏற்பில்லை
எழில் சுகமும் ஏற்றமில்லை!

செல்லடியால் செவிகிழிய
மனம் பதறி நடுங்க
பட்டினியால் வயிறொட்டி
உடல் சோர.. உயிர் துடிக்க
அங்கிருக்கப் பிடிக்கவில்லை!
தினம்
ஆமி தொல்லை கொஞ்சமில்லை!

கால் நடையாய் நடந்து
ஊரைவிட்டு ஓடவேண்டும்
விமானத்திலேறி
நாடுவிட்டு மாறவேண்டும்!
எங்காவது ஓர் மூலையில்
வீழ்ந்தாவது தஞ்சம்
கோரவேண்டும்!

கண்கள் செருக
உதடுகள்.. பிசு பிசுக்க

தொண்டை வேதனையால்
கர.. கரக்க
பங்கருக்குள்
கந்தனுக்கு விண்ணப்பம்
கந்தன் அருளே!
மூத்தவன் துணையோ
வந்திங்கு சேர்ந்தும்
ஊழ்வினை தொலையவில்லை!

வெட்டரிவாள் விட்டெறிந்து
விசக் கத்தி.. துப்பாக்கி
குத்து.. வெட்டு.. மானபங்கம்
கடைக்கண் பார்வை
போட்டி.. பொறாமை
விட்டெம்மைப் போகதவரை
அடங்காது ஆசைகளும்
அலைபாயும் எண்ணங்களும்

கனடாவிங்கு போகவேண்டும்
காட் எடுத்துக் காட்டவேண்டும்
வீட்டுடன் காரும் வேண்டவேண்டும்
என்றெண்ணி நாம் வாழ்ந்தால்
என்று வரும் ஒற்றுமை

இங்கிருக்கப் பிடிக்கவில்லை
இங்கிலீசு மொழியுமில்லை

நன்றி: புலராத பொழுதுகள்

# பனிமலை மேடுகளில் பனைமரச் சிறகுகள்...

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும் – என்று விழைந்தான் புரட்சிக்கவிஞன் பாரதி. அவனின் அந்தச் சீரிய விருப்பத்தை வெறும் கவிதைக் கனவாகக் கருதுதல் தகாது. உலக மகாகவியின் அந்த வேணவா, அவனது உயர்ந்த தீர்க்கதரிசனமே. ஆம், அது இன்று மெய்யாகி வருகின்றது. அன்று திரைகடல் ஓடித்திரவியம் தேடிய தமிழன், இன்று வாணிபத்துக்காக மட்டுமன்றி வாழ்வுக்காகவும் பூமிப் பந்தின் பல பரப்புக்களிலும் செறிந்து வருகிறான். அதனால் தீந்தமிழின் ஓசை பற்பல திசைகளிலும் ஒலிக்கிறது; தமிழ் உணர்வாளர்களின் மனங்களில் உவகை அரும்புகிறது.

இயற்கை சிறப்புப் பிறப்பெடுத்து, வனப்பும் வளமும் நிறைந்து பொழிந்துகொண்டிருக்கும் சுவிற்சர்லாந்திலும் தமிழ் ஓசை தேனாகப் பாய்கிறது. நெடிதுயர்ந்த இந்த நாட்டின் மலைமுகடுகள் மலிந்த மத்திய மாநிலமான லூட்சேர்னிலும் தமிழ் தழுவுகிறது, தவழ்கிறது. அதன்பால் பெருஞ்சுனையாய் பொதிந்திருந்து தமிழ் பெருக்கும் நற்பணி செய்து வருவதே தமிழ் மன்றம்.



தமிழ் மொழியையும் தமிழர் தம் அடையாளத்தையும் அவரிடையே ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் அரியாசனமாகத் திகழும் லூட்சேர்ன் தமிழ் மன்றம் தனது பதின்மூன்றாவது அகவையைப் பூர்த்தி செய்து நிற்கும் இவ்வேளையில் –

இப் பிரதேசத்தில் வளர்ந்து வரும் நமது இரண்டாவது சந்ததியினரின் தமிழ் அறிவுப் பெருக்கத்திற்கான, தமிழ்த்திறன் வளர்ச்சிக்கான ஒரு திறவுகோலாக, தூண்டுகோலாக ஊசிஇலை ஒலிக்கத் தொடங்குகிறது.

இளையவர்கள் தமது சிந்தனையைப் பெருக்கி, தங்களது ஆக்கத்திறனை வளர்த்து தமிழில் கருத்தாடல் செய்வதற்கான மேடையாக இது விளங்கும். எமது இளம் செல்வங்கள் தம் தாய்மொழியில் ஆக்கங்களைப் படைத்து தமிழை மென்மேலும் இறுக அரவணைத்துக் கொள்ள அவர்களை ஆற்றுப்படுத்தவேண்டும் என்ற இலக்கோடு, நோக்கத்தோடு இச்சஞ்சிகை மலர்கிறது.

தமிழ்மன்றத்தினால் வெளியிடப்படும் இச்சஞ்சிகையில் தமிழ் மன்றத்தின் வளர்ச்சி குறித்தும் லூட்சேர்னில் வாழும் ஆயிரக் கணக்கான தமிழ் மக்களுக்கு அது ஆற்றிவரும் பரந்துபட்ட சேவைகள் குறித்தும் நோக்குவது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழ் மன்றத்திற்காக...
ம.வ.கானமயில்நாதன்

## தமிழ் மொழிப் போதனை

லூட்சேர்ன் மாநிலத்தில் வாழும் தமிழ்ச் சிறார்களுக்கு மொழி அறிவை ஊட்டவேண்டும் என்ற நோக்குடன் 1990 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ் பாடசாலை என்ற வித்தே இன்று நற்கனிகளை ஈந்து பெருவிருட்சமாக உயர்ந்து நிற்கும் தமிழ் மன்றம்.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் 11 மாணவர்களுடன் தமிழ் வகுப்பாக மொட்டவிழ்த்து, இப்போது 4 தமிழ்ப் பாடசாலைகளாக விரிந்துள்ள நிறுவனத்தில் மொத்தம் 280 மாணவர்கள் தமது தாய் மொழியைப் பயின்று வருகிறார்கள். ஒப்பீட்டளவில் தமிழீழத் தாயகத்தில் எம்மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் உள்ள சில கல்லூரிகளின் மாணவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமான தொகை என்று காணும்போது, இந்த வளர்ச்சி பெருமிதத்தைத் தருகிறது.

மாணவர் எண்ணிக்கையில் மட்டுமன்றி கல்வியைப் போதிப்பதிலும் தமிழ்ப்பாடசாலை தனது சேவைப் பரப்புக்களையும் மிக அகலமாக விரித்துள்ளது. தமிழ்ப் பாடசாலைகள் நான்கும் லூட்சேர்ன் மாநில அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டவையாக நிமிர்ந்து நின்று தமிழ் மாணவர்களுக்கு தமிழறிவு ஊட்டிவருகின்றன. இதனால் மாநில (கன்ரோன்) கல்வித்திட்டத்துடன் இணைந்த வகையிலே தமிழ்க் கல்வி ஊட்டப்படுகிறது.

கல்விப் போதனைக்கான வயது எல்லைகள் சுவிஸ் அரசாங்கத்தினதாகவே தமிழ்மன்றத்தினாலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அதே போன்று பாடவிதானங்களும் அவற்றை ஒத்தும் அல்லது அவற்றுடன் இசைந்தும் இணைந்துமே வகுக்கப்பட்டுள்ளன. சூழலும் சுற்றாடலும் பாடநெறி ஜேர்மன் மொழியிலிருந்து தமிழிற்கு மொழியாக்கம் செய்யப்பட்டு மூன்றாம் வகுப்பிலிருந்து போதிக்கப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் தமிழும் ஜேர்மன் மொழிக்குச் சமாந்தரமான தரத்துடன் புகட்டப்படுகிறது.

சுவிஸ் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தமிழ் மன்றப் பாடசாலைகளுக்கு வந்து தாம் கல்வி போதிக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சி குறித்துக் கலந்துரையாடியும், அவர்களின் வினைத்திறன் பற்றி ஆராய்ந்தும் பாடபோதனை முறைகளை அவதானித்தும் வருகின்றனர். அத்தோடு மாணவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கல்விநிலை குறித்து எடுத்துரைத்து, ஆலோசனைகளையும் வழங்குகிறனர். சுவிஸ் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளைச் சேர்ந்த இறுதியாண்டு ஆசிரிய மாணவர்கள் கல்வி கற்பித்தலில் பங்கேற்கின்றனர்.

இதே வகையில் தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர்களும் சுவிஸ் பாடசாலைகளுக்குச் சென்று அவற்றின் போதனை முறைகயையும் பாடநெறிகளையும் அறிந்து வருகின்றனர். குறிப்பாக 2001 ஆம் வருடத்தின் பின்னர் இந்தப் பரஸ்பர அறிகை முறைகளாலும்

அவதானிப்புக்களாலும் கலந்துரையாடல்களுமாக வாண்மை விருத்திச் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

### கலை, பண்பாடு பேணுதல்

தமிழ்ப்பாடசாலை ஊடாக தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு உழைப்பது போலவே, எமது சிறுவர்களையும் இளைஞர்களையும் தமிழர்களின் கலை பண்பாடுகளை அறிய வைத்து அவர்களையும் அவற்றில் ஈடுபாடு அடையத் தூண்டும் செயற்பாடுகளையும் தமிழ்மன்றம் ஆற்றி வருகிறது. அவர்களுக்கென வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின் இசைவகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் அங்கம் வகிக்கும் அங்கயற்கண்ணி இசைக்குழு கடந்த எழு வருடங்களாக இயங்கி மிகப்பெரிய வளர்ச்சி கண்டுள்ளது. முத்தமிழில் ஒன்றான நாடகத் துறையிலும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வரும் ஈழவர் நாடக மன்றம் மாணவரின் நாடகத்துறை வளர்ச்சிக்குப் பெரும் தூணாக மிளிர்கிறது.

### தொழிற்கல்வி வழிகாட்டுதல்

மனித வாழ்வினதும் கல்வியினதும் முக்கிய அங்கமாக விளங்கும் விளையாட்டுத் துறையிலும் மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மெய்வல்லுனர் போட்டிகள் வருடந்தோறும் நடத்தப்படுகின்றன. கரிகாலன் உதைபந்தாட்டக்குழு கடந்த எட்டு வருடங்களாக இயங்கி மாணவர்களுக்கு அதில் ஈடுபாட்டை உண்டாக்கி வருகிறது. இந்த ஆண்டு அவர்களுக்கு சதுரங்க விளையாட்டுப்பயிற்சியும் தொடங்கப்பெற்றது. மாணவர்களுக்குக் கல்வி, கலை, பண்பாடு, விளையாட்டு ஆகிய வாழ்வம்சங்களில் மட்டுமன்றி இளைஞர்களின் எதிர்கால சுயவாழ்வை மனதிற் கொண்டு அவர்களுக்கான தொழிற்கல்வி சம்பந்தமான வழிகாட்டுதல்கள், தகவல்கள் வழங்கப்படுகின்றன. அத்தோடு தொழிற்கல்வியை சரிவரப் பெறுவதற்கான உதவிகளையும் தமிழ்மன்றம் நல்கி வருகிறது. இதற்கு அடிப்படையாக கணினி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.



மாணவர் அனுமதி, பாடப்புத்தகங்களைப் பெறுதல், பாடத்திட்டத்தைப் பின்பற்றுதல், பேச்சு, ஓவியம், கலை, விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்ளல், பொதுப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தோற்றுதல் போன்ற மாணவர்களுக்கான நெறிமுறைகளிலும்; ஆசிரியர்கள், தங்களிற்கான வேலைத்திட்டங்களில் பங்கேற்றல், பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொள்ளல் போன்ற ஆசிரிய நிலைப்பட்ட செயற்பாடுகளிலும் உலகத் தமிழர் கல்விச் சேவையுடன் தமிழ்மன்றம் ஒத்துழைத்துச் செயற்படுகிறது.

### இசைந்துவாழும் முயற்சிகள்

இளைய சந்ததியினரின் நலன்களில் மட்டுமன்றி இங்கு வாழும் பெற்றோர்கள் மற்றும் வயதானவர்களின் நலன்களிலும் வளர்ச்சியிலும் தமிழ்மன்றம் பற்றுணர்வுடன் அக்கறை கொண்டு பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது.

சுவிஸ் மக்களுடன் வெளிநாட்டவர்கள் இணைந்தும் இசைவு படவும் வாழ்வதற்கான இந்நாட்டு அரசின் திட்டத்தை நடைமுறை யாக்குவதற்கான வேலைத்திட்டங்களைத் தமிழ்மன்றம் செயற்படுத்தி வருகிறது. இதற்கெனக் குழுக்களை அமைத்து பணிகள் நடைபெறுகின்றன.

பல்வின கலாச்சாரச் சூழலில் எமது மக்கள் நொடிவின்றி வாழ்வதற்கான புறநிலைகளைத் தோற்றுவிப்பதற்கான வேலைத் திட்டங்கள் செவ்வனே செயற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக 2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்ச் சமுதாயத்தினர் தமது தனித்துவத்தைப் பேணும் அதே வேளை சுவிஸ்மக்களுடன் இசைவுடனும் இணைந்தும் வாழ்வதற்கான புதிய வாழ்வுப்பரிமாணத்தைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் ஓர் அங்கமாக தமிழ்க் கலை, பண்பாட்டு வாழ்முறைகளை சுவிஸ்மக்களுக்கு அறிமுகமாக்கி அவற்றில் ஆர்வமுற வைக்கும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இது விடயத்தில் சுவிஸ் நாட்டு மாநிலங்களில் லூட்சேர்ன் தமிழ் மன்றம் வெளிநாட்டு குழுக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இந்தநாட்டு வாழ்க்கையில் எமது மக்கள் கூனிக்குறுகி நிற்கும் சமூகமாக இல்லாமல் தனித்துவத்துடனும் சிறப்புடனும் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை உண்டாக்கும் விதத்தில் பலவகைப் பயனுள்ள செயற்பாடுகளில் தமிழ்மன்றம் அதீத அக்கறையுடனும் ஆர்வத் துடனும் ஈடுபட்டுள்ளது. இந்த வரிசையில் சுவிஸ் அமைப்புகளுடன் சேர்ந்து பல கருத்தரங்குகளும், ஒன்றுகூடல்களும் எற்பாடு செய்யப்பட்டு விளக்கம் அளிக்கப்படுகிறது. நீரிழிவுநோய் பற்றிய விளக்கம், போதைவஸ்து தடுப்பு, பெண்களுக்கான ஜேர்மன் மொழி வகுப்பு, வயதுவந்தவருக்கான கணினி வகுப்பு, சுவிஸ் சட்ட திட்டங்கள் பற்றிய விளக்கங்கள், இளைஞர்களுக்கான தொழில்சார் விளக்கங்கள் என்பன குறிப்பிட்டுக் கூறக்கூடியவை. ஆலோசனை வழங்கும், விளக்கம் தரும் நிலையமாக தமிழ்மன்றம் விளங்குகிறது என்பது பொருத்தமானதாகும்.

இத்தகைய அளப்பரிய சேவைகளைச் செய்து வரும் தமிழ்மன்றத்தின் ஆரம்பம், அதன் வளர்ச்சிப்படிகள், எதிர்கால இலக்குகள் என்பனவற்றை சுருக்கமாக நோக்கலாம்.

முன்னர் குறிப்பிட்டது போன்று 1990 ஓகஸ்டில் தொடங்கப்பட்ட தமிழ்ப் பாடசாலையே மன்றத்தின் நடு அணுவாகும். அதன் பின்னர், தமிழ்ப் பாடசாலையை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்மக்கள் கரங்களை வந்தடைந்த போது, 1991 மே மாதத்தில் தமிழ்மன்றம் உருவானது. 1992 பெப்ரவரியில் அது முழு அளவில் செயற்படத் தொடங்கியது. சுவிஸ் மற்றும் லூட்சேர்ன் கரிதாஸ் நிறுவன அதிகாரிகளது நெறிப்படுத்தலில் ஒன்றரை வருட காலம் இயங்கிய தமிழ் மன்றம்

1993 ஆம் வருடத்தில் முழுக்க முழுக்கத் தமிழர்களாலேயே பராமரிக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் நிலையை எய்தியது. தமிழ்மக்கள் பலரும் பெருவிருப்புடன் தமிழ்மன்றத்தில் உறுப்பினர்களாக சேர்ந்து கொண்டனர். அதற்கென யாப்பும் இயற்றப்பட்டது.

லுட்சேர்ன் தமிழ் மக்களின் தனித்துவமான வாழ்வியல் ஆதாரங்களை, தேவைகளை இனங்கண்டு அவற்றை இயன்றளவு நிறைவேற்றும் வேகத்தோடு, கடந்த பத்து வருடங்களாக பல வளர்ச்சிப்பணிகளை மன்றம் செயலிட்டு உள்ளது. கடந்த வருடத்தில் -2002 ஆம் ஆண்டில் மன்றத்தின் யாப்பில் மாற்றம் செய்யப்பட்டு இப்போது பெரும் வீச்சுடன் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

தமிழ்மன்ற நிர்வாக சபையினர், பணிகளுக்காக எதுவித ஊதியமுமின்றி சுயவிருப்பிலேயே பணியாற்றுகின்றனர். மேற்படி நிர்வாகத்திற்கு உறுதுணையாக கல்வி, தொழிற்கல்வி மேம்பாடு, கலாச்சாரமும் பொழுதுபோக்கும், பெற்றோர் பெண்கள் செயற்பாடுகள், விளை யாட்டுத்துறை, கட்டிடபராமரிப்பு போன்ற ஐந்து குழுக்கள் உருவாக்கப்பட்டு கனதியான செயல்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நலன்களை நிறைவேற்ற அரும்பாடுபட்டு வரும் அதேவேளை, தமிழ்மன்றம் சில வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதாலும், சரீர உதவிகள் மூலமாகவும் சுவிஸ் மக்களிடமும் பணத்தைத் திரட்டி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக தாயக மக்களுக்கும் உதவி புரிந்து வருகிறது.




அங்கத்தவர்களின் வருட சந்தா மூலம் கிடைக்கும் நிதி, மாணவர்களிடம் இருந்து பெறப்படும் கல்விக்கான கட்டணம் போன்றவற்றுடன் மாநில அரசு, கரிதாஸ் நிறுவனம் என்பனவற்றில் இருந்து பெறப்படும் உதவிப்பணம் என்பனவே தமிழ் மன்றத்தின் செயற்பாடுகளுக்கு ஆதாரமாக விளங்குகிறது. மண்டபத்தை வாடகைக்கு வழங்குதல் மூலமும் மன்ற பராமரிப்புக்கான ஒரு பகுதி பணம் கிடைக்கிறது.

லுட்சேர்ன் வாழ் தமிழ் மக்களின் ஒன்றுகூடல் நிலையமாகவும், ஓய்வு நேரத்தைக் கழிக்கும் இடமாகவும் தமிழ்க் கலாச்சாரப் பாரம்பரியங்களைப் பேணும் அமைப்பாகவும் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மன்றம், இன்று சுவிஸ் நாட்டில் இந்த மாநிலத்திலுள்ள புலம்பெயர்ந்த மக்களின் அடையாளச் சிகரமாக உயர்ந்து நிற்கிறது. முற்றிலும் வேறுபட்ட, மாறுபட்ட ஓர் அந்நியச் சூழலில் இது பெரும் சாதனையாகக் கணிப்புறத் தகுந்தது. மன்றம் மேலும் முழு முயற்சியுடன் தனது பணிகளை விரிவுபடுத்தி தமிழர்களது நலன்களையும் தனிச் சிறப்புகளையும் மேம்படுத்த முனைப்புடன் செயற்படும். அதற்கான முழு ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் நல்குமாறு தமிழ்ப் பெருமக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். ■



*விளையும் பயிர்:*
ப.பருந்தா(9)






*விளையும் பயிர்:*
பி.பிரதீபா(13)



விளையும் பயிர்:
கு.சங்கீதா(13)





விளையும் பயிர்:
யோ.கிருசா(9)

# கொக்கோ ⟶ செக்லேட்


**Kakao** ⟶ **Schokolade**

கொக்கோ இல்லாமல் சொக்லேட் இல்லை. சுவிஸ் நாட்டில் கொக்கோ மரம் வளர்வதில்லை. ஆனாலும் சுவிஸ் நாட்டைத்தான் சொக்லேட்டின் சொர்க்கம் என்பார்கள். ஏன்?

கொக்கோ மரங்கள் அடர்ந்த காட்டினுள், தடையில்லா இடத்தில், பெரிய மரங்களின் இலைகளின் நிழலிற்குக் கீழ் தான் வளரும் தன்மையுடையது. அவற்றின் தாயகம் வெப்பமும் ஈரமும் நிறைந்த தாழ்நில பிரதேசமான மத்திய அமெரிக்காவும் தென் அமெரிக்காவின் வடக்கு கடற்கரை பிரதேசமும் ஆகும். முற்காலத்தில் செவ்விந்தியர்கள் கொக்கோவை கௌரவமிக்க பொருளாக கருதினார்கள். அவர்கள் கொக்கோவை கடவுளின் ஆகாரம் என கூறினார்கள். நாம் பொருட்களை பணம் கொடுத்து வாங்குவதுபோல செவ்விந்தியர் பெறுமதிக்க கொக்கோ விதைகளையே பணமாக செலுத்தினர்.

பதினாறாம் நூற்றாண்டில் அமெரிக்காவுக்கு வந்த ஸ்பானியர் புதிகாக இருந்த மரத்தின் மேல் மிகவும் ஆர்வம் காட்டினார்கள். செவ்விந்தியர் மூலம் சொக்கிலேட் பானத்தையும் பருகி அதன் சுவையை அறிந்துகொண்டார்கள். ஆரம்பத்தில் அந்த சொக்கிலேட் பானம் அவர்களுக்கு அருவெருப்பாக இருந்தது. அப்பானத்திற்கு மிளகு சேர்க்கப்பட்டிருந்தால் அது கசப்பாகவும் உறைப்பாகவும் இருந்தது. ஸ்பானியர் செக்கிலேட் பானத்திற்கு சீனி கலந்து சுவைத்துப் பார்த்தனர். அது மிகவும் சுவைமிக்க பானமாக காணப்பட்டது. ஆதலால் அவர்கள் அப்பானத்திற்கு அடிமையாகிவிட்டனர். தாயகம் சென்றும் அப்பானத்தை அவர்கள் தொடர்ந்தும் அருந்துவதற்காக அவர்கள் கொக்கோ விதைகளையும் கொக்கோ தூளையும் லத்தீன் அமெரிக்காவில் இருந்து ஐரேப்பாவிற்கு கொண்டுவந்தனர்.

சுவிற்சர்லாந்தில் பால் பெருமளவில் உற்பத்திசெய்யப்படுவதால் இந்நாட்டவர், ஐரோப்பாவிற்கு கொண்டுவரப்பட்ட கொக்கோவையும் பாலையும் சேர்த்து சொக்லேட்டைத் தயாரிக்கின்றனர்.



# Delfin

Ich heisse Delfin.
Wir sind 30 Arten.
Ich wohne besonders in warmen Meeren und im Mittlermeer.
Es gibt auch Flussdelphine.
In diesem Meer leben wir. Ganges- India, Indus-Pakistan, Amazons-Südamerika , Fluesse-China.
Ich bin 150 bis200kg.
Das neugeborene Kalb hat keine Luft in seinen Lungen und sinkt darum ab.
Die Mutter bringt es rasch zum ersten Atemzug hoch. Meine Feinde ist Nahrung.
Ein Delphin braucht am Tag 8 kilo Nahrung.
Ich muss jeden Tag essen sonst verhungere ich.
Ich habe viele Verwandte.

**- R.Nitharsana (11)**

# முற்றத்தில் குற்றிய முட்கள்

~ தயா லோகதாசன் ~

முள் 01

எப்படியும் இன்றதைப்
பார்த்திடவேண்டும்
ஐந்தரை மணிக்கே
லீவெடுக்கவேண்டும்
ஐந்து நிமிடம் பிந்தினாலும்
அடுத்த ரயில்
அரைமணிக்குப் பிறகுதான்

எட்டுக்கு வீடேகி
செய்தி முடிந்திட
செவ்வி வரும்
கட்டாயம் பார்க்கணும் - தவறின்
வரலாற்றுச் செவ்வியை
காணமுடியாப் பாவி நான்

இன்று காலையில்
ஏதோவொரு வேகத்தில்
நிகழ்ச்சி நிரல் பார்த்ததில்
மனநெருடல் தொடக்கம்

வேலை நாளில் – எனது
எட்டுமணி நேரத்தில்
இந்த நிகழ்ச்சியை
எப்படிப் பார்ப்பது
எப்படியும் பார்ப்பது

முடிவு எடுத்தாலும்
முடியுமா என்றது
கேட்டாலும் முந்தி விட
முதலாளி ஓமாமோ..

கத்தினான் கடுமையாய்
செப்பினான் ஜேர்மனில்
காதைப் பொத்தியும்
நெஞ்சைச் சுட்டது வார்த்தைகள்

வரலாற்றுக்காக உயிர் போக்கிய
வரலாற்றுச் செவ்வி காணும் வெறிக்கு
வாயப்பேச்சு என்ன செய்யும்
வன்சொல்லும் புல்லாகும்

தாங்கினேன் – வேலையை
தயங்காது முடித்தேன்
பாய்ந்தடித்து ரெயில் பிடித்து
படபடக்க ஓடி வந்தேன்

இன்று மட்டும்
வீடு ஏதோ விசேடமாய்ப்பட்டது
காற்றும் குளிரும்
மனதைத் தொட்டது

தொலைக்காட்சி நிலையத்திற்கு
நன்றியைக் கொட்டணும்
நல்ல நிகழ்ச்சி போடுவதற்காய்
நல்லாசி கூறணும்


கதவைத் திறந்தேன்
உள்ளே புகுந்தேன்
கவலை பறந்தது
தொடங்கவில்லை
கழற்றா உடுப்புடன்
கதிரையில் விழுந்தேன்

இரண்டு நிமிடம்
ஒரு நிமிடம்
ஆகா..
நிகழ்ச்சி ஆரம்பம்

வணக்கம்

இவங்களுக்கு வேற வேலையில்லை
ஒழுங்கான நிகழ்ச்சியைப் போர்றதில்லை
ஒலைகள் நாடகம் இண்டைக்கில்லை

எடுத்த
சம்பிகை கொப்பி
நம்பர் நாப்பத்தொன்பது



பார்த்து முடிக்கோணும்
அடுத்த
கொப்பி எடுக்கோணும்
நாளைக்கே மாத்தேணும்
அதனால்
அதனைப் பார்ப்போம்

எடுக்கப்பட்ட முடிவினை
எதிர்க்க முடியல்லை
எதிர்த்து கதைத்திட
என்னால் முடியவில்லை
கனவுகள் எல்லாம் மெய்ப்பதில்லை
அன்று மனம் அடைந்ததைப்போல்
துயரம் ...
முடியவில்லை!



களத்துமண் விட்டு
புலம் நோக்கி வந்து
இரண்டு தசாப்தங்கள்
ஈரக் கசிவுகளாய்க்
கரைந்தோடி விட்டன

அகதி இலட்சினை
அருவருப்பை தந்தபோதும்
கூட இருந்து குளிர் விரட்டியபோதும்
விரும்பியோ விரும்பாமலோ
எல்லாவற்றையும்
பழக்கப்படுத்திக் கொண்டோம்

இப்போதோ
அடுத்த தலைமுறையினருக்கான
காலம்

இவையத்தனையையும் தமக்காய்
இயைபுபடுத்திக்கொண்ட
எம் இளம் தலைமுறையினர்
நடைபோடும் காலம்

அரும்புகளாய் தளிர்விட்டு
உயர்ந்து வளர்ந்து
உலகப்பரப்பில்
படரத் தொடங்கும் காலம்

குச்சி நட்டுப் பந்தல் அமைத்து
குளிர்மையாய் வளர்த்தெடுக்கும்
தோட்டக்காரர்களாய் நாம்

பத்து வயதிற்குள் வந்தவர்கள்
பணிகளைத் தொடங்கிவிட்டனர்
இங்கு பிறந்தவர்களும் இளைஞர்களாக
வாலிபப் பூப்பெய்தி விட்டனர்
பெற்றவர்கள் மொழியுடன்
கற்றுவைத்த வேற்று மொழியும் கூட
கருத்தரித்துவிட்ட காலமிது

வீட்டில் ஓர் சூழலும்
வெளியே மறு சூழலுமாய்
இரட்டைப் பண்பாட்டு
கலாச்சார விழுமியங்களில்
ஊறிய விதைகளாய்
வீரியமாய் அறிவியலில் ஊன்றி
வளர்பவர்களாய் உள்ளவர்களே
ஒரு கணம் நில்லுங்கள்!

நீங்கள் இரண்டு தலைமுறையினரும்
ஈழத்தமிழர் வரலாற்றில் மட்டுமன்றி
உலகத்தமிழர் வரலாற்றிலும்
ஓர் பதிவுக்கல்
உங்கள் ஒவ்வொரு நிகழ்வும்
கல்வெட்டுக்களில்
சிலவரிகளாவது

# ஊசி இலை உங்களுக்காக..

பொறிக்கப்படல்வேண்டும்
உலகத்து வரலாறுகூட
இதனைப் பார்வையிடவேண்டிய
காலகட்டம்தான்
இப்போது நடந்துகொண்டிருக்கிறது

மாணவர்களே!
அதையும் தாண்டிய
இளைய தொழிலுனர்களே!
அனுபவங்களை விரித்து வையுங்கள்
கனவுகளும் நினைவுகளும்
ஏன் நிஜங்களும் கூட
கதைகளாகட்டும் கவிதைகளாகட்டும்
கண்டுணர்ந்து ஆய்ந்த
கட்டுரைகளாகட்டும்
தந்துவைக்க வேண்டியவை
அனைத்தும் தரவுகளாகட்டும்


பெற்றவர்களே!
இளைய தலைமுறைக்கான
படைப்புகளிற்கு
பசளையிட்டு உரமூட்டும்
பெரியவர்கள் கருத்துக்கும் இடமுண்டு
மாணவர்களை
ஊசிமுனையளவும்
அறிந்து வைத்திருக்கும் ஆசிரியர்களே!
சொத்தான உமது ஆக்கம்
அத்தனையும் தந்திடுவீர்

எழுத்தாளர்களே!
உங்கள் பேனாக்களை
திறந்து வையுங்கள்
அப்போதுதான்
இளையதலைமுறைகளது
போக்குவரத்துப் பாதைகள்
சீரமைக்கப்பட ஏதுவாகவிருக்கும்

விரிந்துபட்டு
பரந்துபோன வாழ்வில்
மாறுபட்ட மக்கள் கூட்டத்துடன்
காலம் கழிக்கையில்
சந்திக்கும் சங்கதிகளையும்
மனம்கொண்ட உணர்வுகளையும்
வெளிக்கொணரும்
அவை சித்திரங்களாகட்டும்
சிறு துணுக்கு முதலடுத்து
பெரும் ஆய்வாய்
அது பரிணமிக்கட்டும்

உலகப் பரப்பளவில்
தமிழர் இருப்பை
ஈழத்தமிழர் உறுதிசெய்யும்
காலமிது

இளைய தலைமுறைக்காய்
அடித்தளம் அமைத்திட
பல்வேறு படைப்புக்களும்
வெவ்வேறு திசையிலிருந்து வரட்டும்
வேர்முதல் விழுதுவரை அவை
வியக்கும் மணம் கமழட்டும்!



# SAI TRADER LTD

FRESH, FROZEN & DRY FOODS IMPORTERS+ WHOLESALERS

**சுவிற்சர்லாந்தில் 13வருட காலமாக இறக்குமதித்துறையில் அனுபவம்**



இலங்கை
இந்தியா
தாய்லாந்து
மலேசியா
கென்யா
டொமினிக்கானர்
போன்ற நாடுகளில்



இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்டு சுவிஸ் தமிழ் வர்த்தக நிலையங்களுக்கு அதி துரித கதியில் விநோயகம் செய்வோர் என நற்பெயர் எடுத்தவர்கள்

**சுவிஸிலிருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து சுவிஸிற்கும் துரித கதியில் பொதி அனுப்பும் சேவை** (Cargo service)

உடன் மரக்கறி, பழ வகைகள், குளிர்- அதி குளிரூட்டப்பட்ட உணவு வகைகள், அனைத்து மீன் வகைகள், இலங்கை மதுபானம் போன்றவற்றின் நேரடி இறக்குமதியாளர்களும் மொத்த விற்பனையாளர்களும்

## SAI TRADER LTD

Raaterstrasse 24
8147 Windlach
Tel. +41 18 85 86 50
Mobile. (0)79 218 70 75

Postfach 289
8058 Zurich Airport
Fax. +41 18 85 86 51
Email. info@saitrader.com

Switzerland

உரிமையாளர்: இராசமாணிக்கம் ரவீந்திரன்


email: uhsiilai@tamilmandram.ch